




கம்பன்
KAMBAN



Chinmaya
Yuva Kendra,
Madras.

கம்பர்

KAMBAN



Chinmaya Yuva Kendra, Madras.
1981

Published by
Chinmaya Yuva Kendra, Madras.
Printed by S. Muthiah at
Tamilnad Printers & Traders Pvt. Ltd., Madras-600 044.

ACKNOWLEDGEMENTS

We are very grateful to the following for all their magnificent help in making this production of Kamban a success:

1. Sri K.S. Srinivasan	- Script
2. Sri K.V. Mahadevan	- Composing Kamban Songs into musical form
3. Sri S.P. Balasubramaniam	- Songs
4. Smt. Vani Jairam	- Songs
5. S.V. Ramanan	- Background Score and Recording
6. India Silk House	- Providing dress material for costumes
7. Mrs. Meena Muthiah	- Tapes for Recording
8. Trustees of Tamilnad Congress Committee Charitable Trust	- Allotting Congress Grounds
9. Komal Prints	- Invitations
10. Imageads & Communications P. Ltd.	- Publicity
11. TT Krishnamachari & Co.	For all assistance
12. London Rubber Co. (India) Ltd.	Space donated for publicity
13. TT Investments & Trades Private Ltd.	Space donated for publicity
14. L.D. Seymour & Co. (India) Private Ltd.	Space donated for publicity
15. Sri K.S. Srinivasan Chief Justice Dr. M.M. Ismail Dr. K.A. Manavalan Sri Sa. Ganesan Dr. C. Balasubramanian Dr. K.T. Thirunavakarasu Professor C. Jagannatha Chariar Professor M. Srinivasan 'Poovannan' Dr. Padma Subrahmanyam Dept. of Archaeology (Govt. of Tamilnadu) Sri N. Sethuraman	Articles and Photographs
16. Chinmaya Mission, Bangalore	- Paper for Kamban Souvenir
17. Sri M.E. Devaraj	- CHYK 1981 Souvenir
18. Tamilnad Printers & Traders Private Limited	-Printing of Kamban Posters and Souvenir

— CHYK, Madras

CONTENTS

OUR NEED

In the history of any country there are periods when integrity of character in the individuals slips down in an epidemic of selfishness. At such moments, the few who still have character and culture can maintain their poise within only when they have an ideal of a perfect person to hold on. Either such a perfect person must be thrown up as a leader in our society or there must be a picture of the ideal person in the mental horizon of the people, to inspire them and help them to walk out of their personal ego-centric desire-prompted life of shameless arrogance.


A corrupt and morally broken down community can never build up a nation. If the individuals are not integrated the community cannot be welded together to form a strong people, striving to direct the economic, political and social destinies of a country into a brilliant and luxurious future.

Kambar appears to have provided us with such an inspiring ideal, who can not only excite the good in the uneducated masses, but even the sophisticated and the educated can feel this special thrill in the ideal person which Kambar projects in his poetry.

When this ideal is held uplifted, by the growing dynamic teenagers of the times, the entire situation has a galvanizing glory about it. The Chinmaya Yuva Kendra, consisting of young boys and girls determined and supremely dedicated in their self-sacrifice, constitute the nucleus wherein the future India can discover all her hopes.

"KAMBAR IN LIGHT AND SOUND" is an effort organised by this spiritual Youth Organisation and they are staging it to give vent to the silent satisfaction that they felt in the ideal Hero of Kambar stands for.

SWAMI CHINMAYANANDA



Swami Dayananda Saraswathi

கம்பனின் இராமாயண அரங்கேற்றம்

பத்மா நரசிம்ஹன்

ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோவிலில் ஒரே ஆரவாரம்.

''ஆதி கவியான வால்மீகியின் இராமாயண காவியத்தை தமிழில் செய்து, அரங்கேற்ற துணிந்த இந்த கம்பன் என்பவன் யாவன்?

இதை ஏற்றுக்கொள்ளலாமோ—முடியவே முடியாது''. மக்கள் பதைபதைத்தனர். பண்டிதர்கள் முகத்தைத் திருப்பி தங்களது அருவருப்பைத் தெரிவித்தனர்.

ஒரு பெரியவர் முன் வந்தார். சாந்தமான முகம். பரபரப்பற்ற உடல். முகத்தில் புன்முறுவல்.

''மக்களே கம்பனின் கவிதையை கேட்டுத்தான் பார்க்கலாமே.''

மக்கள் ஆமோதித்தனர்.

கம்பன் ஸ்ரீரங்கம் கோயிலில் ரங்கநாயகி தாயார் சன்னிதியின் முன் இருக்கும் மண்டபத்தில் உட்கார்ந்து தனது கவிதையைத் தொடங்கினான்.

வால்மீகியான தெய்வ மாக்கவி மாட்சி தரிக்கவே இதை நான் புனைந்தேன் என்றான்.

மேலும் மேலும் படிக்கத் தொடங்கினான்.

விபீஷணன் ராவணனுக்கு எவ்வளவோ அறிவுரைகள் கூறினான். காமத்தினால் மதியிழந்த ராவணன்

அவைகளை பொருட்படுத்தாமல், விபீஷணனையே இகழத் தொடங்கினான்.

''மானுடர் வலியர் என்றாய்; ஏன் . . . .? அச்சமோ? அவர்பால் அன்புமோ? கூனி சூழ்ச்சியால் அரசிழந்து, வனம் புகுந்து, என் சூழ்ச்சியால் தன் மனைவியை இழந்தும், கழிந்துபோகா உயிரை சுமந்து கொண்டிருக்கும் மனிதர்களின் வலிமையை உன்னைத்தவிர யார் மதிப்பர்? அவனோ என்னை வெல்லுவன்?''

ராவணன் கூறிய தகாத சொற்களை கேட்ட விபீஷணன் மனம் வருந்தி ''அண்ணா நீர் ராமன் என்னும் நாராயணனைக் கேவலமாக நினைக்கவேண்டாம். ஒப்புயர்வில்லாத வீரர்கள் அந்த நாராயணனைப் பகைத்து அழிந்து போயிருக்கின்றனர் — அத்தகையவர்களில் இரணியன் என்பவனும் ஒருவன்'' என்று சொல்லி இரணியகசிபுவின் வரலாற்றை ராவணனுக்கு எடுத்துச் சொல்லலானான்.

பண்டிதர்கள் திகைத்தனர். வால்மீகியின் ராமாயணத்தில் இல்லாத ஒன்றை கம்பன் அவன் கவிதையில் எப்படி புனையலாம். அடாதது இது. இதை நாம் ஏற்கக் கூடுமோ. இரணியகசிபுவின் வரலாறு ராமாயணத்தில் இல்லாததன்றோ. ஸ்ரீமத் பாகவதத்தில் இருக்கும் அவ் வரலாற்றை கம்பன் எப்படி ராமாயணத்தில் இணைக்கக் கூடும்! பண்டிதர்களின் கடுமையான கண்டனத்தைக் கண்டு மக்களும் திகைத்தனர்.

அப்பொழுது பூகம்பம் மாதிரி ஒரு நடுக்கம் ஏற்பட்டது. கோயில் கோபுரத்தில் ஒரு குலுக்கம். பூகம்பம்தானோ என்று மக்கள் நடுங்கி ஸ்தம்பித்து கோபுரத்தை நோக்கி நின்றனர்.

ஆ. . . .என்ன இது கோபுரத்தில் பதிக்கப்பெற்றிருந்த நரசிம்ஹனின் சிலை — சிலையாக யில்லையே. நரசிம்மனே உயிருடன் அல்லவா காணப்படுகிறார். கோலாஹலத்துடன் சிரிக்கும் அந்த நரசிம்மனை மக்கள்

மிக்க திகைப்புடனும், பயத்தோடும் கண்டனர். அவர்களுக்கு தம் கண்களை நம்ப முடியவில்லை.


''கம்பனே உன் கவிதையை நாம் ஏற்றுக்கொண்டோம். வால்மீகியின் கவிதையைப்போல் நின் கவிதையும் சிரஞ்ஜீவியாக மக்கள் இதயத்தில் நிலைக்கட்டும்.''

என்று கரம் தூக்கி ஆசி கூறி வாழ்த்தினர் பகவான் நரசிம்ஹன். அடுத்த கணத்தில் மறுபடியும் சிலை மட்டுமே அங்கு காட்சியளித்தது. பண்டிதர்கள், மக்கள், அனைவரும் கம்பனின் காலில் விழுந்தனர். அவனை இகழ்ந்து பேசியதற்காக மன்னிப்பு கேட்டனர். கவிச் சக்கரவர்த்தி கம்பன் என்று அவனை கௌரவித்தனர். கம்பனின் ராமாயண கவிதையும் மக்கள் உள்ளத்தில் என்றென்றைக்கும் இடம் பெற்றது.


இன்றைக்கும் ஶ்ரீரங்கம் கோவிலில் கம்பன் ராமாயணத்தை அரங்கேற்றிய மண்டபத்தைக் காணலாம். கை நீட்டி ஆசி கூறும் நரசிம்ஹனின் சிலையையும் கண்டு குதூஹலிக்கலாம். இந்த அரிய காட்சியை ஶ்ரீரங்கம் செல்வோர் அவசியம் காண வேண்டும்.



Idol of Lord Narasimhan which came alive and blessed Kamban's work.



The Mantapam before Thayar Sannadhi where Kamban had his arangetram of Ramayana



Gopuram of Thayar Sannadhi in Srirangam.

கம்பன் எனும் கலைக்களஞ்சியம்

மு. மு. இஸ்மாயில்

ஒரு கவிஞன் எவ்வளவு திறமையுடையவனாக இருந்த போதிலும், அந்தத் திறமை வெளிப்படுவதற்குப் பொருத்தமான ஒரு வாய்ப்பு கிடைக்கும்பொழுதுதான், அந்தத் திறமையைப் பிறர் உணர்ந்து கொள்வதற்கும், பாராட்டுவதற்கும் சந்தர்ப்பம் கிடைக்கிறது. அதுமாத்திரமல்ல, அந்தத் திறமை என்றும் நிலைத்து நிலவவேண்டுமானால், எதைப் படைத்து அந்தத் திறமையை கவிஞன் வெளிப்படுத்துகின்றானோ, அந்தப் படைப்பும் இறவாத ஒரு கருத்தினையோ, அறத்தினையோ உள்ளடக்கிக் கொண்டதாக இருக்கவேண்டும். மிகச் சிறந்தத் திறமையும், அதனைப் பாடவோ, படைக்கவோ ஆளும் பொருளுக்கேற்ப, தன்னுடைய சிறப்பை இழக்கவோ, உயர்த்திக்கொள்ளவோ செய்யும்.

உதாரணமாக, கத்தியொன்றை மிகத் திறமையாகக் கையாளும் ஒருவனை எடுத்துக்கொள்வோம். அவனுடைய கத்தி ஒரு தீச்செயலுக்குப் பயன்படுத்தப்பெறும்பொழுது, அது ஒரு கொலையைச் செய்வதற்குக் கருவியாக ஆவதின் காரணமாக, அந்தத் திறமையும் கீழ்மையடைந்துவிடுகிறது. அதற்கு மாறாக, அதே கத்தியை ஓர் அறுவைச் சிகிச்சைக்காக ஒரு மருத்துவர் கையாண்டு அதன் காரணமாக ஓர் உயிரைக் காப்பாற்றுவதற்குக் கருவியாக அமையும்பொழுது, அந்த மருத்துவருடைய திறமையோடு கத்தியினுடைய உதவியும் பெருமையடைகிறது. அதுபோலவே, ஒரு கவிஞனுடைய திறமை அழிந்துபோகின்ற ஒன்றிற்கோ, அல்லது கீழ்த்தரமான உணர்ச்சிகளைத் தூண்டி, மனிதனுடைய உயர்ந்த இலட்சியத்திலிருந்து அவனைக் கீழே இறங்கச் செய்வதற்கோ உதவுமாயின், அந்தத் திறமை பயனற்ற திறமையாகவும், பழிப்புக்குரிய திறமையாகவுமேயாகும். அதற்கு மாறாக, அந்தத் திறமை இயற்கையின் எழிலையும், மனித வர்க்கத்தின் உயர்வையும், படைப்புகளுக்கெல்லாம் மூலகாரணமான பரம்பொருளின் பெருமையையும் பன்னிப் பன்னி பேசவும், பாடவும் உதவுமாயின், எந்தப் பொருளைப் பற்றிப் பேசுவதற்கு அந்தத் திறமை பயன்படுத்தப்

பெறுகிறதோ அந்தப் பொருளின் உயர்வுக்கேற்ப அந்தத் திறமை யும் உயர்ந்து மிளிரும்.

ஒரு திறமை எவ்வளவு உயர்வானதாக இருந்தபோதிலும், அதனுடைய உயர்வு மேலும் சிறக்கவும், உயரவும், அந்தத் திறமை தன்னை வெளிப்படுத்துவதற்கு எடுத்தாளும் பொருளைப் பற்றி நிற்கும். இறைவனைப்பற்றி ஒரு கவிஞன் தூய மனத்துட னும், ஓர்மையுடனும், ஈடுபாட்டுடனும் பாடுவானேயானால், அந்தக் கவிதை இறவா கவிதையாக ஆகிவிடுகின்றது.

காரணம் என்னவென்றால், என்றும் நிலைபெற்றிருக்கும் இறைமையைப் பாடுகின்ற கவிதையும் அந்த இறவாத் தன்மை யைப் பெற்றுவிடுகிறது. அதற்கு மாறாக, அழிந்து போகின்ற, எளிதில் மறைந்துவிடக்கூடிய ஒன்றைப்பற்றி ஒருவன் கவிதை பாடுவானேயானால், அவன் பாடுகின்ற பொருளின் கதியே அவ னுடைய கவித்திறனுக்கும் வந்து சேரும்.

இந்தப் பின்னணியில் கம்பனுடைய கவிதைத் திறமையைப் பார்க்கும்பொழுது இரண்டு உண்மைகள் தெற்றென விளங்கும். ஒன்று, கம்பனுக்கு இயற்கையாகவே அமைந்திருந்த ஈடிணையற்ற கவிதைத் திறன்; இரண்டாவது, அந்தத் திறனை வெளியிடுவதற்கு அவன் தேர்ந்தெடுத்துக்கொண்ட மாபெரும் கதை.

ஓர் ஓவியன் ஒரு சிறிய திரைச் சீலைக்குள் தன்னுடைய திறமையைக் காட்டவேண்டிய அவசியம் ஏற்படுமானால், அந்தத் திரைச்சீலையில் அவன் மிகச் சிரமப்பட்டு தன்னுடைய சித்திரத்தை வரைய வேண்டும்; அப்படிச் சிரமப்பட்டு வரைந்தபோதிலும், அளவில் மிகச் சிறியதாக இருப்பதின் காரணமாக, அந்தச் சித்திரத்தின் ஒவ்வொரு பகுதியும் சிறியதாக அமைந்து, அதை அனுபவிப்பதில் கஷ்டம் உண்டாகக்கூடும்.

அதற்குமாறாக, ஒரு பெரிய திரைச் சீலையை எடுத்துக் கொண்டு அதில் ஓர் ஓவியன் தன்னுடைய சித்திரத்தை வரை வானானால், அந்தச் சித்திரத்தின் ஒவ்வொரு பகுதியிலும் தன் னுடைய முழு திறமையையும் காட்டுவதற்கு வாய்ப்புண்டாகும். அதுமாதிரியே, தனக்கு இயற்கையாக அமைந்திருந்த கவிதைத் திறனை வெளிப்படுத்துவதற்குக் கம்பன் தேர்ந்தெடுத்த கதையோ மாபெரும் கதை.

இந்தக் கதை காலத்தினால் மாத்திரம் பெரிதல்ல; இடத்தினா லும் பெரிதாகிறது. இராமன் பிறப்பதற்கு முன்னால் தொடங்கும் கதை, இராமன் முடிசூட்டி, தன்னுடன் இருந்தவர்களுக்கு விடைகொடுத்தனுப்புகின்ற வரையில் நடைபெறுகிறது.

இதற்கிடையேயுள்ள காலம் நீண்ட காலம். இராமன் வனத்தில் கழித்த பதினன்கு ஆண்டுகள்தாம் பெரிதாகப் பேசப் பட்டபோதிலும், அவனுடைய பிறப்புக்கு முந்திய நிகழ்ச்சிகளும், அவனுடைய பிறப்புக்குப் பின் அவன் சீதையை மணந்து சிறிது காலம் அயோத்தியிலே வாழ்ந்ததும் பேசப்படவே செய்கின்றன.

எனவே, காலத்தினுல் இந்தக் கதை நீண்டது. அதுபோலவே, இடத்தினுலும் இந்தக் கதை மிகப் பெரியது. வடக்கேயிருக்கும் கோசல நாட்டிலிருந்து, ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பாலுள்ள இலங்கை வரையில் செல்கிறது.

இதற்கு மேலும், அனுமன் மருத்து மலையைத் தேடிக் கொண்டு செல்கின்ற வகையில், கோசல நாட்டிற்கு வடக்கேயும் கதை சென்று விடுகிறது. எனவே, இடத்தினுலும் கதை பெருங் கதையாக ஆகிவிடுகிறது.

மூன்ருவதாக, இந்தக் கதையில் பங்குபெறும் பாத்திரங்கள். இவற்றில் மனிதர்கள் மாத்திரம் பங்குபெறுவதில்லை; விலங்குகள் பங்கு பெறுகின்றன; பறவைகள் பங்குபெறுகின்றன; அரக்கர்கள் பங்குபெறுகிருர்கள்; மனிதர்கள் இடையேயும் மன்னர்கள் பங்கு பெறுகிருர்கள், சாதாரண மக்களும் பங்குபெறுகிருர்கள். ஆகவே, பல வர்க்கத்தைச் சேர்ந்த உயிரினங்கள் கதையில் பங்கு பெறு கின்றன. அதன் காரணமாகவும் கதை பெருங்கதையாக ஆகிறது.

இத்தனை வாய்ப்புக்களும் ஒருங்கே சேர்ந்த கதையை காப்பி யமாகப் பாட வந்த கம்பனுக்குத் தன்னுடைய திறமை முழு வதையும் துல்லியமாகவும், நுண்மையாகவும் காட்டுவதற்கு வாய்ப்பு கிட்டிவிடுகிறது.

மன்னர்களைப் பாடுவதற்கும், பாமர மக்களைப் பாடுவதற் கும், விலங்கினங்களைப் பாடுவதற்கும், பறவையினத்தைப் பாடு வதற்கும், அரக்கர் இனத்தைப் பாடுவதற்கும், அந்தந்த ·இனத் தவருடைய உயர்ந்த பண்புகளையும், தாழ்ந்த குணங்களையும் பாடு வதற்கும் வாய்ப்பு கிட்டிவிடுகிறது. இவ்வளவு பெரியதொரு கதையைக் கம்பன் தன்னுடைய காப்பியத்தின் பொருளாக தேர்ந்தெடுத்திருக்காவிட்டால், அவனுடைய திறமை இவ்வளவு முழுமையாக மிளிர்ந்திருக்குமா என்பது ஐயப்பாட்டிற்குரியதே யாகும்.

எந்தக் கதையை சொல்லத் தொடங்குபவனும் ஒரு நாடக ஆசிரியனுக இருக்கவேண்டும். ஒரு பாத்திரத்தினுடைய சொல் லும், செயலும் இன்னெரு பாத்திரத்தினிடத்து எதிரொலிகளை உண்டாக்கும். ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் ஒரு பாத்திரம் எதை

நினைக்கிறது, எதைச் செய்கிறது, அப்படி நினைப்பதற்கும், செய்வதற்கும் எது காரணமாக அமைந்திருக்கிறது ஆகியவற்றை அவன் விளக்க வேண்டிய அவசியம் இருப்பதால், மனிதத் தன்மையை முழுமையாக உணர்ந்தவனுக இருப்பதோடு, மனோ தத்துவ நிபுணனுகவும் அவன் இருக்கவேண்டியிருக்கிறது. இவ்விரு பண்புகளும் எந்த நாடக ஆசிரியனுக்கும் மிக்க அவசியத் தேவைகளாகும். இந்தப் பண்புகளைக் கம்பன் பெருத்த அளவிலே பெற்றிருந்தான் என்பது அவனுடைய காப்பியப்போக்கில் நன்ருகத் தெரிகிறது.

இது மாத்திரமல்ல; இராமாயணம் போன்ற ஒரு காப்பியத்தை அவன் பாடப்புகும் பொழுது, பல பாத்திரங்களைப் பற்றி பேச வேண்டிய அவசியம் ஏற்பட்டு, பல தேசங்களைப் பற்றியும் பேசவேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. அப்படி அவன் பேசுகின்ற தேசங்களை நான்கு தேசங்களாக நாம் பிரித்துக் கொள்ளலாம்.

ஒன்று, கோசல நாடு; இரண்டாவது, குகனுடைய நாடாகிய சிருங்கிபேரம்; மூன்ருவது, குரங்குகளுடைய நாடாகிய கிஷ்கிந்தை; நான்காவது, அரக்கர்களின் நாடாகிய இலங்கை.

இந்த நாடுகள் ஒவ்வொன்றிலும் வாழ்வு எப்படி அமைந்திருந்தது; நகரங்கள் எப்படி அமைக்கப் பெற்றிருந்தன; பல பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் எந்தெந்த நாடுகளில் எப்படி வாழ்ந்தார்கள், அவர்களுடைய சொல்லும், செயலும், குணமும், தன்மையும் எவ்வாறு இருந்தன என்பதை எடுத்துக் கூறுவதற்கு வாய்ப்பு உண்டாகிவிடுகிறது.

இந்த நான்கு நாடுகளினுடைய தன்மை பற்றியும், அந்நாடுகளின் தலைநகரங்களைப் பற்றியும், அந்த நகரங்களின் அமைப்பைப் பற்றியும், அந்த நகரங்களில் வாழ்ந்த மக்களைப் பற்றியும் பேசுவதற்கு அவசியமும், வாய்ப்பும் கிட்டிவிடுகின்றன. அப்படிக் கிட்டும்பொழுது, அந்தந்த நாடுகளை விவரிக்கவும், விளக்கவும் வேண்டிய அவசியம் கவிஞனுக்கு உண்டாகிறது.

இந்த விளக்கமும், வருணனையும் ஒரே மாதிரியாக இருக்குமானல் படிப்பவர்களுக்குச் சலிப்புத் தட்டிவிடுவதோடல்லாமல், எந்த இனத்தைப் பற்றி அவன் பாடப் புகுந்தானே அந்த இனத்திற்கும் பெருமையளித்ததாக ஆகாது.

ஆகவே, கோசல நாட்டைப் பற்றி பேசும்பொழுதும், அந்த நாட்டு மக்களைப்பற்றி பேசும்பொழுதும், அந்த நாட்டின் தலைநகராகிய அயோத்தியைப் பற்றிப் பேசும்பொழுதும் கவிஞன்

ஒருமாதிரியாகப் பாடுகிறுன். இதற்கு மையக் கருத்தாக அமைவது இந்தக் கோசல நாட்டின் மன்னனுகிய, தசரதனின் திருமகன், காப்பிய நாயகன், அறத்தை நிறுத்தத் தோன்றுகிறுன் என்பதாகும்.

அதற்கடுத்தாற்போல் ஜனகனுடைய விதேக நாட்டையும், அந்த நாட்டின் தலைநகராகிய மிதிலையைப் பற்றியும் கவிஞன் பேச வேண்டியிருக்கிறது. ஆனுல், இந்த நாட்டையும், அதன் தலை நகரையும், அங்கு வாழ்ந்த மக்களையும் பற்றிப் பேசும்பொழுது வேருெரு மையக் கருத்தை மனத்திற் கொண்டு கவிஞன் பாட வேண்டிய அவசியத்திற்குள்ளாகிறுன்.

இங்குதான் காப்பியத் தலைவி தோன்றி காப்பியத் தலைவனை அடையப் போகிறுள். ஆக, இந்த நிகழ்ச்சிக்கேற்ப, சூழ்நிலை பொருந்துமாறு கவிஞனுடைய வருணனை அமையவேண்டும்.

அடுத்து நாம் காணப்போகின்ற நாடு சிருங்கிபேரம். அது வேடர்கள் வாழ்கின்ற நாடு. அந்த வேடுவர்கள் தலைவனுக குகனையும், அவனுேடு வாழ்ந்த மக்களையும், அவர்களுடைய பண்புகளையும், செயல்களையும் கவிஞன் பாடவேண்டும்.

இந்த வருணனையும், விளக்கமும் கதைத்தொடர்ச்சிக்கு ஒத்ததாக அமையவேண்டும். அதற்கேற்பவே கவிஞன் செய்கிறுன்.

அடுத்து, குரங்குகள் ஆட்சி நடக்கும் கிஷ்கிந்தைக்கு வருகிறேம். கிஷ்கிந்தை நாடு, கிஷ்கிந்தை நகரம், அந்த நாட்டினுடைய மன்னன், அந்த நாட்டின் மக்கள், அவர்கள் வாழ்ந்த முறை ஆகியவற்றைப் பற்றி கவிஞன் பாடவேண்டியிருக்கிறது. இங்கும் கதைத் தொடர்ச்சிக்கேற்பவே அவன் பாட வேண்டும்.

இறுதியாக, இலங்கைக்கு வருகிறேம். அங்கே அரக்கர்களுடைய ஆட்சியைப் பார்க்கிறேம். அரக்கர்களுடைய ஆட்சி எப்படி உண்டாயிற்று, அந்த ஆட்சியினுடைய செல்வாக்கு எத்தகையது, அந்தச் செல்வாக்குக்கேற்ப இலங்கை நாடும், இலங்கை நகரமும் எவ்வாறு பொலிந்தன; அந்த நாட்டிலும், நகரிலும் வாழ்ந்த அரக்கர்கள் எப்படி இருந்தார்கள் என்பதைப் பற்றி கவிஞன் பேச வேண்டியிருக்கிறது.

இவ்வளவையும் திறம்பட ஒரு கவிஞன் பாடவேண்டுமானுல் அவனுக்கு கவித்திறன் இருந்தால் மாத்திரம் போதாது. மன்னர்களையும், சாதாரண மக்களையும், வேடுவர்களையும், பறவைகளையும், விலங்குகளையும், அரக்கர்களையும் பற்றி அவன் நன்கு அறிந்தவனுக இருக்க வேண்டும். அவர்களுடைய வாழ்க்கை முறை,

பழக்க வழக்கங்கள், குணதிசயங்கள், செயல்திறன், சிந்தனை சக்தி ஆகிய அனைத்தைப் பற்றியும் அவன் தெரிந்தவனாக இருக்க வேண்டும்.

இவற்றிற்கும் மேலாக வேறொன்றைப் பற்றியும் அவன் தெரிந்திருக்க வேண்டும். அதற்கேற்பவே கதையின் போக்கும் அமைந்திருக்கின்றது. அயோத்தி நகரை விட்டுப் புறப்பட்ட இராமன் இறுதியிலே இலங்கையில் புகுந்து போர் புரிகிறான். ஆகவே, அயோத்தி நகரத்திற்கும் இலங்கைக்குமிடையேயுள்ள பூப்பிரதேசம் முழுவதையும் அவன் அறிந்தவனாக இருக்கவேண்டும். அப்படியானால், அவனுக்கு பூகோளம் தெரிந்திருக்க வேண்டும், சரித்திரம் தெரிந்திருக்கவேண்டும், தாவரவியல் தெரிந்திருக்க வேண்டும். அவை தெரியாமல் தன்னுடைய பணியினை அவன் சிறப்பிக்க முடியாது.

அதற்கு மேலும் இந்த நிலப்பரப்புகளையும், இவற்றில் இடம்பெற்றிருக்கும் ஜீவராசிகளையும், தாவர வர்க்கத்தைப் பற்றியும் பேசுவதற்குப் பல சந்தர்ப்பங்கள் கதையில் கிடைத்துவிடுகின்றன. கிஷ்கிந்தா காண்டம், நாடவிட்ட படலத்தில், கிஷ்கிந்தையிலிருந்து இலங்கை வரையிலுள்ள நிலப்பரப்பையும், அதில் வாழும் மக்களையும், ஆங்காங்கு வனங்களில் வாசம்செய்யும் முனிவர்களையும், பல நாடுகளில் ஓடும் நதிகளையும், அந்த நாடுகளில் வளர்ந்து கொழிக்கும் செடி, கொடிகளையும் விவரமாக எடுத்துப் பேசுவதற்கு கவிஞனுக்கு வாய்ப்பு கிடைத்துவிடுகிறது.

இதே காண்டத்தில் ஆறு செல் படலமும் அமைந்திருக்கின்றது. அது நாட விட்ட படலத்தில் காணப்படும் செய்திகளை நிரப்புவதாகவும், அவற்றுக்குத் துணை நிற்பதாகவும் அமைந்திருக்கிறது. சுந்தர காண்டத்தில் காணும் கடல் தாவுபடலம் இந்தியாவுக்கும் இலங்கைக்கு மிடையேயுள்ள கடல் பரப்பையும், அதைத் தாண்டும் வகையில் அனுமன் செய்த அற்புத செயல்களையும் விளக்கிக் காட்ட உதவுகிறது. இதே காண்டத்தில் இடம் பெற்றிருக்கும் ஊர் தேடு படலம் இலங்கை நாட்டையும், இலங்கா நகரையும் மிகத் தெளிவாகவும், நுணுக்கமாகவும் வருணிப்பதற்குக் கவிஞனுக்கு வாய்ப்பைக் கொடுத்துவிடுகிறது.

இவையெல்லாவற்றிற்கும் மேலாக, ஆறாவது காண்டமாகிய 'யுத்த காண்டம்' பற்பல வழிகளில் கவிஞனுடைய திறமையினை வெளிக்காட்டுவதற்கு வாய்ப்பினை நல்குகிறது. யுத்த காண்டத்தில் வீரமே பெருத்த அளவில் பேசப்படுமாயினும், இந்த வீரத்திற்கிடையே மன்னனுடைய மந்திராலோசனை, வீரர்களுடைய பராக்கிரம செயல்கள், அவர்களுடைய மாயப்போர், உண்மை வீரத்

தின் பண்புகள், தியாகம், சரணுகதித் தத்துவத்தின் சிறப்பு ஆகிய அனைத்தையும் பற்றி கவிஞன் பேசிவிடுகிருன்.

இவையெல்லாம் போதாதென்று கவிஞனுடைய பொறியியல் அறிவையும், விஞ்ஞான அறிவையும் வேறு சில நிகழ்ச்சிகள் வெளிப்படுத்துகின்றன. இராவணன் சீதையைத் தூக்கிக்கொண்டு தேர் மேல் ஏறி ஆகாய மார்க்கமாகப் பறந்து சென்றதும், பின்னர் இராவணன் வதைக்குப் பிறகு இராமன், சீதை முதலியோர் இலங்காபுரியிலிருந்து அயோத்தி நகருக்கு புஷ்பக விமானம் மூலமாகத் திரும்பி வந்ததும் கவிஞனுடைய பொறியியல் அறிவை விளக்குவதற்கு உதவுகின்றன.

இரணியன் வதைப்படலத்தைக் கவிஞன் அற்புதமான இறை ஞானத்தை வெளிப்படுத்துவதற்கு உபயோகப்படுத்திக் கொள்கிருன்.

இவை யெல்லாவற்றிற்கும் மேலாக வேருெரு கருத்தை வலியுறுத்த வேண்டும். நம் நாட்டிலே தோன்றிய எந்தக் கதையும் பொழுது போக்கிற்காகத் தோன்றியதல்ல. நிரந்தரமான, என்றும் அழியாத, ஓர் உண்மையை, ஓர் தர்மத்தை வலியுறுத்துவதற்காகவே இத்தகைய கதைகள் தோன்றியிருக்கின்றன.

எனவே, இராமாயணமும் இத்தகைய உண்மைகளை வலியுறுத்துவதற்காகத் தோன்றிய கதையாதலின் அதைப் பாடும் கவிஞனும் இத்தகைய உண்மைகளைப் பாடியாக வேண்டும்; அப்படியே பாடவும் செய்கிருன்.

இந்தக் கதையினூடே அங்குமிங்கும் மனித வாழ்க்கையின் உறுதிப்பாடுகளை சந்தர்ப்பம் வாய்த்தபோதெல்லாம் கம்பன் வலியுறுத்தத் தவறவில்லை.

கம்பனுடைய காப்பியம் முழுவதையும் படித்த பிறகு, அதனுடைய மையக் கருத்து என்னவென்று சிந்தித்துப் பார்ப்போமானுல் அது இறைவனிடத்து உள்ள பக்தியையும், அந்த இறைவன் யாவற்றையும் காத்து இரட்சிப்பவன் என்ற நம்பிக்கையையும், 'அறம் வெல்லும், பாவம் தோற்கும்' என்பதே இறைவன் நிர்ணயித்திருக்கும் விதியாகும் என்பதையும், அந்த இறைவன் நமக்கு அளித்திருக்கின்ற அருட்கொடைகளுக்காக நாம் செய்ய வேண்டிய நன்றிக் கடன் என்ன என்பதையும் விளக்குவதே என்பது தெற்றென விளங்கும்.

கம்பன் காட்டும் திறமைக் கூறுகளையும், அவை மிளிரும் கதைப் பகுதிகளையும் முழுமையாக விளக்க வேண்டுமானுல் பல

நூல்கள் எழுதவேண்டும். உண்மையில், கம்பனுடைய கவிதை ஒவ்வொன்றுக்கும் விளக்கம் கொடுப்பதற்கு ஒரு நூல் தேவை யாகிறது. அந்த அளவுக்கு அவனுடைய கவிதா விலாசம் ஒளிர் கிறது. என்றாலும், நாம் இதுகாறும் எடுத்துக் காட்டிய அவனு டைய திறமையை விளக்கும் வகையில் அவனுடைய ஓரிரு பாடல்களை உற்று நோக்குவது சாலப்பொருத்தமாகும்.

வாலி வதைக்குப் பின்னர், கார் காலம் கடந்து படைக ளோடு வருவதாகச் சொன்ன சுக்கிரீவன் அப்படிச் செய்யத் தவறி விட்டான். சினம் கொண்ட இராமன், இலக்குவனை கிஷ்கிந்தைக்கு அனுப்புகிறான். பிறகு சுக்கிரீவன் தன்னுடைய தவற்றினை உணர்ந்து படைகளைத் திரட்டுகிறான். அவனால் திரட்டப்பெற்று பெரும் திரளாக வந்து சேர்ந்த படையினை இராம-இலக்குவர் காண்கிறார்கள். அப்படிக் கண்டவிடத்து இராமன் இலக்குவனைப் பார்த்து என்ன சொன்னான் என்று கவிஞன் கூறுவான். அதை இங்கே காண்பது பலனுடைத்தாகும்.

இப்படி இராமன் கூறத் தொடங்கியதைக் கவிஞன்

> ''விண்ணின், தீம்புனல் உலகத்தின், நாகரின், வெற்றி
> எண்ணின், தன் அலது ஒப்பு இலன் என நின்ற இராமன்,
> கண்ணின், சிந்தையின், கல்வியின், ஞானத்தின், கருதி,
> அண்ணல்-தம்பியை நோக்கினன், உரைசெய்வதானான்.''

என்று பாடுவான்.

'இராமன்....அண்ணல்—தம்பியை நோக்கினன், உரை செய்வதானான்' என்ற நான்காம் அடிதான் இராமனுடைய செயலைக் கூறுகிறது. ஆனால், முதல் மூன்று அடிகளும் அப்படி உரை செய்த இராமன் எத்தகையவன், எதைக் கருதி உரை செய்பவ னானான் என்பதை விளக்குகின்றன.

முதலிரண்டு அடிகள் உரை செய்த இராமன் எத்தகையவன் என்பதை குறிப்பிடுகின்றன. அவன் 'தன் அலது ஒப்பு இலன் என நின்ற இராமன்'. 'தனக்கு நிகர் தானே என்று சொல்லுமாறு, வேறு எந்த உபமானப் பொருளையும் பெறாத இராமன்' என்பது தான் இந்தச் சொல்லாட்சியினுடைய பொருள். எதில் ஒப்பில்லா தவன்? வெற்றியில் ஒப்பில்லாதவன். அந்த வெற்றி எத்தகையது என்பதை இந்த வரிகள் மேலும் விளக்குகின்றன. 'விண்ணின்', அதாவது, விண்ணுலகத்திலும், 'தீம்புனல் உலகத்தின்', அதாவது, இனிய கடல் சூழ்ந்த நிலவுலகத்திலும், 'நாகரின்', அதாவது, நாகர்கள் வசிக்கின்ற பாதாள உலகத்திலும், 'வெற்றி எண்ணின்' வெற்றிகொள்ளும் திறமை பற்றி ஆராய்ந்தால், தன் அலது ஒப்பு

6/2

இலன் என நின்ற இராமன். அத்தகைய வெற்றி வீரன்தான் இப்பொழுது தன் தம்பியிடம் பேசுகிறான்.

அப்படி பேசுவதற்கு முன்னால் கருதிப் பேசுகிறான். எதைக் கருதி பேசுகிறான்? கண்ணின், சிந்தையின், கல்வியின், ஞானத்தின் கருதி பேசுகிறான். தன்னெதிரே இருக்கும் சேனையைக் காண்கிறான். ஆகையினால் கண்ணின் கருதுகிறான். அந்தச் சேனையினுடைய தன்மையையும், பரப்பையும், அது வந்து சேர்ந்த வேளையையும் எண்ணுகிறான், ஆகையினால் சிந்தனையினால் கருதுகிறான். கல்வியாலும் கருதுகிறான். 'கல்வி' என்பது கற்றதின் பயனாகப் பெற்ற அறிவாகும். அந்த அறிவின் துணை கொண்டும் கருதுகிறான். இவையெல்லாவற்றிற்கும் மேலாக, ஞானத்தின் துணை கொண்டும் அவன் கருதுகிறான். இங்கே குறிப்பிடப்படும் ஞானம் அவனிடத்தே இயல்பாய் அமைந்த அறிவாகும். ஆக, அவன் கருதுவதற்குத் துணைபுரிபவை அவன் கண், அவன் சிந்தை, அவன் கல்வி, அவன் ஞானம் ஆகிய நான்குமாகும். இந்த நான்கினாலும் கருதித்தான் இராமன் பேசலுற்றான்.

இந்தப் பீடிகையே மிகப் பலமாகயிருப்பதை நாம் உணர்கிறோம். 'இராமன் தன் தம்பியாகிய இலக்குவனிடத்தில் பேசினான்' என்று சொன்னாலே போதும். ஆனால், அவன் எத்தகைய இராமன் என்றும், அவன் எதைக் கருதிப் பேசினான் என்றும் கவிஞன் சொல்கிறான். அவன் எத்தகைய இராமன் என்று கூறுமிடத்து அவனுடைய வெற்றியைப் பற்றிப் பேசுகிறான். அவன் எதைக் கருதிப் பேசினான் என்னும்பொழுது, அவனுடைய காட்சி, சிந்தை, கல்வி, ஞானம் ஆகிய நான்கையும் குறிப்பிடுகிறான். இத்தகைய பீடிகையோடு இராமனைப் பேசவைக்கும் கம்பன், அந்த இராமனுடைய பேச்சினை மிகமிக உயர்வானதாகத்தான் ஆக்குவான் என்று நாம் எதிர்பார்ப்பது நியாயமேயாகும்.

இந்த எதிர்ப்பார்த்தலோடு அவன் என்னதான் தன்னுடைய தம்பியிடத்தில் சொன்னான் என்பதை இப்பொழுது பார்க்கலாம்.

> அடல் கொண்டு ஓங்கிய சேனைக்கு, நாமும் நம் அறிவால்
> உடல் கண்டோம்; இனி முடிவு உள காணுமாறு உளதோ?—
> மடல் கொண்டு ஓங்கிய அலங்கலாய்!—மண்ணிடை மாக்கள்,
> 'கடல் கண்டோம்' என்பர்; யாவரே முடிவு உறக் கண்டார்?

என்பது இராமன் இலக்குவனுக்குக் கூறியதை எடுத்துக் காட்டும் முதற் பாடல்.

எத்தகைய இராமன் பேசினான் என்பதை முந்தின பாடலில் கண்டோம். எத்தகைய தம்பியிடத்தில் அவன் பேசினான் என்

பதை இந்தப் பாடலில் காண்கிறேம். 'அண்ணல்', அதாவது, 'பெருமையிற் சிறந்தோன்' என்று முந்தின பாடலிலேயே குறிப் பிடப் பெற்றுவிட்டான். இப்போது 'மடல் கொண்டு ஓங்கிய அலங்கலாய்' என்று இராமன் தன் தம்பியை விளிக்கிருன். இந்தச் சொற்ெெடருக்கு 'இதழ்களைக் கொண்டு சிறந்துள்ள மலர்மாலை அணிந்தவனே' என்பதுதான் பொருள். இங்கே குறிப்பிடப்படும் மலர் மாலை இலக்குவனுடைய தோற்றத்தின் அழகை மாத்திரம் உணர்த்தி நிற்கவில்லை. அவனுடைய வீரத்தின், வெற்றியின் அறி குறியாகவும் அம்மலர்மாலை இருக்கிறது. ஆகவே, எந்த உலகத்தி லும் வெற்றியில் தன் அலது ஒப்பு இலன் என்று நின்ற இராமன் பேசுவதும், அதற்குப் பொருத்தமான வீரமும், வெற்றியும் கொண்ட தம்பியிடமாகத்தானிருக்க முடியும். அத்தகைய தம்பியை விளித்துத்தான் இப்பொழுது அவன் பேசுகிறுன். பேசு வதோ தன் முன் பரந்து கிடக்கும் சேனையைப் பற்றி. அந்தச் சேனையைப்பற்றி என்ன பேசுகிறுன்?

'அடல் கொண்டு ஓங்கிய சேனைக்கு, நாமும் நம் அறிவால் உடல் கண்டோம்' என்பதாகும். 'அடல்' என்ற தமிழ்ச் சொல் லுக்கு 'வலிமை' என்றுதான் பொருள். 'நம்முன் பரந்து கிடக்கும் சேனை வலிமை கொண்ட சேனை. அந்தச் சேனையினுடைய உடலை நாம் கண்டோம்' என்று இராமன் சொல்கிறுன். இங்கே 'உடல்' என்ற சொல்லுக்கு என்ன பொருள்? நாம் பொதுவாக 'உடல்' என்ற சொல்லை உருவம் முழுவதையும் குறிப்பிட ஆண்டபோதி லும், உடல் என்ற சொல் பெரும்பாலும் நடு இடத்தையே குறிக்கும். தலை மேலேயும், கால்கள் கீழேயுமிருக்க, இடையே யுள்ள பகுதியைத்தான் உடல் என்ற சொல் குறிக்கும். ஆக, இப் பொழுது இராமன் சொல்வது இந்தச் சேனையினுடைய உடலைத் தான் கண்டோம் என்பது. அந்த உடலைக்கூட, 'நாம் நம் அறிவால் கண்டோம்' என்றுதான் கூறுகிறுன். முந்தின பாடலில் கண், சிந்தை, கல்வி, ஞானம் ஆகிய நான்கினைக் கவிஞன் குறிப் பிட்டதைக் கண்டோம். இப்பொழுது இராமன் வாயிலாக 'நம்முன் பரந்து கிடக்கும் சேனையின் நடுவை அறிவால் கண் டோம்' என்றுதான் பேசுகிறுன். அதாவது, கண்ணுல் கண்டோம் என்று அவன் பேசவில்லை என்பது நோக்கத்தக்கது. கண்ணுல் கண்டோம் என்று பேசாமல், அறிவால் கண்டோம் என்று பேசு வதிலேயே அந்தச் சேனையினுடைய பரப்பு ஓரளவுக்கு விளக்கி வைக்கப்பெறுகிறது. இப்படி நடுப்பாகத்தையே அறிவினுல்தான் காண முடியும் என்ற நிலையிருக்கும்பொழுது, அந்தச் சேனையினு டைய முடிவை, அதாவது எல்லையை கண்ணுல் காண முடி யுமோ? என்று கேட்கிறுன். இதைத்தான் 'இனி முடிவு உள காணுமாறு உளதோ?' என்ற விஞ ஏந்தி நிற்கிறது. 'உடல்'

என்ற சொல் முன்னர் ஆளப்பெற்று, 'முடிவு' என்ற சொல் பின்னர் ஆளப்பெற்றிருப்பதை நோக்குங்கால், 'உடல்' என்பது நடுப்பகுதியைக் குறிக்கத்தான் ஆளப்பெற்றிருக்கிறது என்பது தெளிவாகும்.

இப்படிக் கூறிய இராமன் தன்னுடைய கூற்றுக்கு ஓர் உவமையை எடுத்துக் காட்டுகிருன். அந்த உவமை நமக்கெல்லாம் மிகப் பழக்கமான உவமை. ஆனுல், நுண்மையில் சிறந்த உவமை யாகும்.

நம்மில் பலர் கடற்கரை பிரதேசங்களில் வசிக்கிறேம். வேறு சிலர் உள்நாட்டுப் பகுதியில் வசிக்கிறேம். உள்நாட்டுப் பிரதேசங் களில் நடைபெறும் பள்ளிக்கூடங்களின் ஆசிரியர்கள் அங்கே பயிலும் மாணவர்களைப் பார்த்து 'நீங்கள் கடலைப் பார்த்த துண்டா?' என்று கேட்பது சாதாரண நிகழ்ச்சி. காரணம், ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் படிக்கும் சிறுவர்கள் அதிகமாகப் பிரயாணம் செய்திருக்கமாட்டார்கள்; ஆகையால், உள்நாட்டுப் பிரதேசத்தைவிட்டு கடற்கரை பிரதேசத்திற்குச் செல்ல அவர் களுக்கு வாய்ப்பு இருந்திருக்காது என்பதுதான். ஆனுல் அப்படி வாய்ப்பைப் பெற்ற ஒரு மாணவன் 'கடலைக் கண்டிருக்கிறேன்' என்று சொல்வான்.

அதுமாத்திரமல்ல, கடற்கரைப் பிரதேசங்களில் வசிக்கின்ற பெரியவர்களும் கூட 'கடலைக் கண்டிருக்கிறேம்' என்று சொல் வார்கள். கடற்கரையில் நின்றுகொண்டு தங்களெதிரே பரந்து கிடக்கும் நீர்ப்பரப்பைக் கண்டு, தாங்கள் கடலைக் கண்டதாகக் கூறுவார்கள். ஆனுல், பூவுலகில் கடலினுடைய பரப்பை நூல் மூலமாக அறிந்தவர்கள், கடற்கரையின் ஒரு சிறு பகுதியில் நின்று கொண்டு 'கடலைக் கண்டோம்' என்று சொன்னுல் எப்படியிருக் குமோ, அப்படியேதான் நாம் இங்கே நின்றுகொண்டு இந்தச் சேனையைக் கண்டோம் என்று சொல்வதும்' என்று இராமன் கூறுகிருன்.

'மண்ணிடை மாக்கள்' என்ற சொற்கள் இப்பூவுலக மக்களை குறிக்கும். அத்தகைய மக்கள் 'கடல் கண்டோம்' என்று கூறு வார்கள் என்று இராமன் கூறுகிருன். ஆனுல், அவர்கள் கடலைக் கண்டோம் என்று கூறினபோதிலும், உண்மையில் அவர்கள் கடலின் ஒரு மிகச்சிறிய பகுதியை மாத்திரம் கண்டார்களே த்விர கடலைக் கண்டது இல்லை. கடலினுடைய பரப்பு அந்த அளவுக்கு இருப்பதின் காரணமாக யாராலும் கடலினுடைய முழுமையைக் காண முடியாது. நாம் கடற்கரையில் நின்று கொண்டு, நம் கண்ணுக்கு எட்டின தூரம் வரைதில் பார்வையைச் செலுத்தும் பொழுதுகூட நீர்ப் பரப்பு பரந்துகொண்டே போக, ஆகாயம்

குவிந்து, எங்கோ தூரத்தில் அதைத் தொடுவது போலிருக்கின்ற ஒரு தோற்றத்தைத்தான் காண்போமே தவிர, கடலைக் கண்டோம் என்பதில்லை. இந்த மிகச் சாதாரண நிகழ்ச்சியை அற்புதமாகக் கையாண்டு சுக்கிரீவன் சேகரித்த சேனையின் பரப்பினை இராமன் வாயிலாக விளக்குவதற்குக் கவிஞன் முற்படுகிறுன்.

இங்கும் ஓர் அருமையைக் காணலாம். நாம் பார்த்த முதல் பாடலிலிருந்து இரண்டாவது பாடல் சிறந்து நிற்பதைக் காண்கிறோம். இந்த இரண்டாவது பாடலைவிட இதற்குப் பின்னுல் வருகின்ற மூன்ருவது பாடல் மேலும் சிறந்து நிற்பதை நாம் இப்பொழுது காணலாம்:

''ஈசன் மேனியை, ஈர்—ஐந்து திசைகளை, ஈண்டு இவ்
ஆசு இல் சேனையை, ஐம் பெரும் பூதத்தை, அறிவை,
பேசும் பேச்சினை, சமயங்கள் பிணக்குறும் பிணக்கை,
வாச மாலையாய்!—யாவரே முடிவு எண்ண வல்லார்?''

என்பதுதான் அந்த மூன்ருவது பாடல். 'வாச மாலையாய் என்று தன் திருத்தம்பியை இராமன் விளிக்கிறுன். அவ்வாறு விளித்துவிட்டு, 'ஆசு இல் சேனையை .... யாவரே முடிவு என்ன வல்லார்?' என்று கேட்கிறுன். 'ஆசு' என்ற சொல்லுக்குக் குற்றம் என்று பொருள். இங்கே தங்கள் முன்னிருக்கும் சேனையைக் 'குற்ற மற்ற சேனை' என்று குறிப்பிடுகிறுன். காரணம், அந்தச் சேனை நிகழ்த்தப்போகும் அறச்செயலைக் கருத்தில் கொண்டுதான் அவ்வாறு சொல்கிறுன். தன்முன் இருக்கும் இந்தக் குற்றமற்ற சேனையை 'யாவரே முடிவு எண்ண வல்லார்?' என்பதுதான் இராமனுடைய கேள்வி. முந்தின பாடலில் 'முடிவு உள காணுமாறு உளதோ' என்று கேட்டான். இப்பொழுது, 'யாவரே முடிவு எண்ண வல்லார்?' என்றே கேட்கிறுன். முந்தின பாடலில் கண்ணுல் அந்தச் சேனையின் முடிவைக் காணமுடியாது என்று கூறின இராமன், இப்பொழுது அந்தச் சேனையின் முடிவை எண்ணிக்கூட பார்க்க முடியாது என்று கூறுகிறுன். இந்தக் கேள்வியில் அடங்கியிருக்கும் கருத்து உபமேயம். இதற்கு உபமானமாக ஆறு செய்திகளைக் குறிப்பிடுகிறுன். எப்படி இந்தச் சேனையின் முடிவு எண்ணக்கூட முடியாமல் இருக்கிறதோ, அப்படி வேறு ஆறு செய்திகளுமிருக்கின்றன என்று கவிஞன், இராமன் வாயிலாகக் கூறுகிறுன்.

ஒன்று ஈசன் மேனி. இங்கே 'ஈசன்' என்ற சொல் இறைவனைக் குறிக்கிறது. இறைவனுக்கு உருவம் இல்லை; அவன் எங்கும் நிறைந்திருப்பவன் என்பது எல்லா சமயங்களின் இறுதி முடிவு. உருவம் இல்லாதவனுக ஈசன் இருப்பதின் காரணமாக, அவனுடைய உருவத்தின் முடிவை எப்படி எண்ணிப் பார்க்க முடியும்?

இரண்டாவது, 'ஈர்—ஐந்து திசைகள்'. எட்டுத் திசைகளோடு, மேல், கீழ் என்ற இரண்டையும் சேர்த்து, பத்துத் திசைகளை இங்கே கவிஞன் குறிப்பிடுகிறான். ஒரு திசையின் முடிவைக் கூட யாராலும் எண்ணிப் பார்க்க முடியாது என்றிருக்கும் பொழுது, பத்துத் திசைகளுடைய முடிவையும் எண்ணிப் பார்க்க கூடியவர் யார்?

மூன்றாவதாக, ஐம்பெரும் பூதங்களைக் கவிஞன் குறிப்பிடுகிறான். நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், இவ்வைதனுடைய எல்லையையும் யாராலும் எண்ணிக்கூட பார்க்க முடியாது என்பது வெளிப்படை. உண்மையில், கடலினுடைய எல்லையைக் கண்டவர்கள் இலர் என்பதை முந்தின பாடலிலேயே கவிஞன் சொல்லிவிட்டான்.

இவற்றிற்கு மேலாக வேறு மூன்று செய்திகளைக் கூறுகிறான். ஒன்று, அறிவு. கூர்ந்து நோக்கும்பொழுது அறிவுக்கு எல்லையில்லை என்பது தெற்றென விளங்கும். குறிப்பாக விஞ்ஞான உலகிலே வாழும் நமக்கு இது மிகத் தெளிவாகிறது. அன்றன்றாடம் ஆராய்ச்சியின் காரணமாக மனிதன் எதெதையோ கண்டுபிடித்துக் கொண்டிருக்கிறான். குழந்தைகளுக்கு உணவை ஊட்டுவதற்குத் துணையாக 'அம்புலி மாமா'வாக இருந்த சந்திர மண்டலம் இப்பொழுது மனிதன் சென்று, இறங்கி, திரும்புகின்ற ஒன்றாக ஆகிவிட்டது. போகப்போக இது போன்ற எத்தனை மண்டலங்களையும், அவற்றின் தன்மைகளையும் மனிதனுடைய அறிவு கண்டுபிடிக்கப் போகிறதோ தெரியாது. ஆகையினாலே எல்லையை எண்ணக்கூட முடியாத ஒன்றாக அறிவைப் பற்றி கவிஞன் பாடுவதில் தனிச் சிறப்பு இருக்கத்தான் செய்கிறது.

ஐந்தாவதாகக் கவிஞன் எடுத்துக் காட்டுவது பேசும் பேச்சினை. பேசுகின்ற பேச்சுக்கும் எல்லையில்லை என்பதை நாம் அனைவரும் அன்றன்றாடம் உணர்ந்து கொண்டுதானிருக்கிறோம். சற்றுச் சிந்தித்துப் பார்த்தால் இது தெளிவாகும். ஆகையால் விளக்கம் தேவையில்லை.

இவையெல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பு வைத்தாற்போல வேறொன்றைக் கவிஞன் குறிப்பிடுகிறான். அதுதான், 'சமயங்கள் பிணக்குறும் பிணக்கு' என்பது.

கம்பனுடைய காப்பியத்தைப் படிப்பவர்கள் ஒன்றை நன்றாகப் புரிந்துகொள்வார்கள். அதுதான், அவனுடைய காலத்தில் சமயப் பிணக்குகள் மலிந்திருந்தன என்பதும், அவற்றைக் கண்டு கவிஞன் பெரிதும் வருந்தினான் என்பதுமாகும். எத்தனையோ சிறிய விஷயங்கள் குறித்து நம்மிடையே சமயப் பிணக்குகள்

உண்டாவதை இன்றும் நாம் கண்டு கொண்டுதான் வருகிறோம். இந்தச் சமயப் பிணக்குகள் எந்தெந்த வேளைகளில், எந்தெந்த உருவில், எதெதின் காரணமாகத் தோன்றும் என்பதை யாராலும் சொல்ல முடியாது. ஆகையால்தான், இந்தப் பிணக்குகளின் எல்லையையும் யாரும் எண்ணிக்கூடப் பார்க்க முடியாதென்று மிக்க வருத்தத்துடன் கவிஞன் கூறுகிறான்.

ஆக, இவையனைத்தையும் ஒருங்கே சேர்த்துப் பார்க்கும் பொழுது கவிஞனுடைய இறைஞானம், அறிவியல், விஞ்ஞான அறிவு, மனோதத்துவ ஞானம் ஆகியவை எவ்வளவு நுண்மையான தாகவும், பரந்ததாகவுமிருக்கின்றன என்பதைத் தெரிந்துகொள் கிறோம்.

இவ்வளவு அற்புதமாக இராமன் வாயிலாகப் பேசிய கம்பன், அடுத்த பாடலில் ஒன்றைச் செய்கிறான். எல்லை காண முடியாத இந்தச் சேனையினுடைய எல்லையை காண முற்படுவது, காரிய சுணக்கத்திற்குக் காரணமாகுமேயன்றி, வேறு எதற்கும் உதவாது என்பதை இராமன் மூலமாக எடுத்துக் காட்டுகிறான்.

இந்த சேனை முழுவதையும் கண்ட பிறகு, நாம் மேற்செய்ய வேண்டிய காரியத்தில் இறங்குவோம் என்றால் 'நாள் பல பெயரும்' என்று கூறுகிறான். அதாவது, இந்தச் சேனையை முழுமையாகக் காண நாம் முயல்வோமானால் பல நாட்கள் அதற் காகும் என்பதை எடுத்துக் காட்டிவிட்டு, மேற்செய்யவேண்டிய காரியத்தை இப்பொழுது தொடங்குவோம் என்பதுதான் இராம னின் வாக்கு.

இங்கு 'நாள் பல பெயரும்' என்ற கம்பனுடைய வாக்கு வேறொரு இடத்திலும் இடம்பெறுகின்றது. யுத்த களத்தில் கும்பகர்ணன் தோற்றமளிக்கிறான். அந்தக் கும்பகர்ணனை முதன் முதலாக இராமன் காண்கிறான். அவனுடைய உருவம் எவ்வளவு பெரியதாக இருந்தது என்பதை உணர்த்தும் வகையில் இராமன், 'தோளொடு தோள் செலத் தொடர்ந்து நோக்குறின், நாள் பல கழியுமால்' என்று கூறுவான். அதாவது, கும்பகர்ணனுடைய ஒருதோளிலிருந்து பார்க்கத் தொடங்கி அவனுடைய மறு தோளுக்குப் பார்வையைக் கொண்டு வருவதற்குப் பல நாட்கள் ஆகும். என்று கூறுவதின் மூலமாக கும்பகர்ணனுடைய உரு வத்தை அற்புதமாக விளக்கிவிடுகிறான் கவிஞன்.

இத்தகைய அற்புதங்கள் கம்பனுடைய காப்பியத்தில் மண்டிக்கிடப்பதின் காரணமாகத்தான் படிப்பவர்களை என்றும், எங்கும் இனியதொரு பரவசத்திலாழ்த்தும் பெறற்கரிய பொக் கிஷமாக அது அமைந்திருக்கின்றது.

கம்பன் கல்வியில் பெரியன்

—கம்பன் அடிப்பொடி—

கம்பனின் காப்பியத்தை, கம்ப சித்திரம், கம்ப சூத்திரம் என்றெல்லாம் பலவாருகப் பண்டுதொட்டே பாராட்டி வருவதற்கு அடிப்படைக் காரணம் அவனுடைய அறிவாற்றலே; அதாவது கல்வி வளமே!

1. ''சொல்லின் செல்வன்''

2. ''கேள்வி நூல் மறை வலான்''

3. ''ஆற்றலும், நிறைவும், கல்வி அமைதியும், அறிவும் என்னும் வேற்றுமை இவனோடு இல்லை''

4. ''இங்கு, இவன் இசைகள் கூரக் கல்லாத கலையும், வேதக் கடலுமே உலகத்து எங்கும் இல்லாத''

5. ''செவிக்குத் தேன் என இராகவன் புகழினைத் திருத்தும் கவிக்கு நாயகன்''

என்றெல்லாம் அனுமனைக் கணித்தறிந்து காட்டுகிறுனே, அந்த அருமைப்பாடுகள் அனைத்தும் அப்படியே கம்பனுக்குப் பொருந்தும். ஆம், கம்பன் கல்லாத, கற்றறியாத, விஞ்ஞான மெய்ஞ்ஞானக் கலை எதுவுமே இல்லை என்று அவன் காப்பியத் துணை கொண்டே நிருபித்துவிடலாம். அதனுல்தான், தான் சொல்ல வேண்டியவற்றை எல்லாம் அனுமன் வாய்மொழியாகவே சொல்லித் தீர்க்கிருன் கம்பன். கம்பனுடைய அறிவாற்றல் பளிச்சிடுகிற எண்ணற்றவற்றுள் ஒரு சிலவற்றைப் பார்க்கலாம் இப்பொழுது:

விசுவாமித்திரன் பின்னே, தம்பி இலக்குவனுடன் இராமன், மிதிலை நகரிலே போய்க்கொண்டிருக்கிறுன். கன்னிமாடத்திலே சீதை நிற்கிருள். இருவர் கண்களும் எதிர்படுகின்றன. ஒருவரை ஒருவர் தம் உள்ளம் ஈர்த்தன. காதல் தன் கைவரிசையைக் காட்டத் தொடங்கிவிட்டது. மிதிலை மன்னனுல் உபசரிக்கப்பட்டு ஒரு பெரிய விருந்தினர் இல்லத்திலே மூவரும் தங்குகிருர்கள்.

முனிவனும் இலக்குவனும் ஒருபுறத்தில் உறங்குகின்றனர். இராமனே தனியாக ஒரு திறந்த மாடத்தில் படுக்கையை விரித்தான். உறக்கம் வரவில்லை. ஆனாலும் படுத்துக்கொண்டுதான் கிடக்கிறான். நம் கண்ணுக்கு இராமன் தனியனாய்க் கிடப்பதாகவே தோணுகிறது. ஆனால் மனத்துவ அறிவாற்றல் படைத்த கம்பனே இராமனுக்குத் துணை ஐந்து என்கிறான். பாட்டையே பார்க்கலாம்.

''முனியும், தம்பியும் போய், முறையால் தமக்கு
இனிய பள்ளிகள் எய்திய பின், இருட்
கனியும் போல்பவன், கங்குலும், திங்களும்,
தனியும், தானும், அத் தையலும், ஆயினான்.''

கங்குல், திங்கள், தனி, தான், அத் தையல் ஆகியவைதான் அந்த ஐந்து! கங்குல் என்றால் இரவு; திங்கள் என்றால் முழுமதி; தனி என்றால் துணையின்மை; அத் தையல் என்றால், கன்னி மாடத்திலே கண்ட பெண் என்பது நமக்கெல்லாம் தெரிந்ததுதான். ஆனால் 'தான்' என்ற ஒன்றையுமல்லவா சொல்லுகிறான்? தான் என்றால் என்ன? தன்னை மறவாத் தன்மை (செல்ப் கான்ஷியஸ்நெஸ்) என்கிறார்களே அதுதான், 'தான்' என்பது என்று விளக்கம் தருகிறான். அந்தத் 'தான்' இருக்கிறதே அதுவே ஒரு நோய் என்பர் மனத்துவ அறிஞர்கள். தன்னை மறந்து உறங்க வேண்டிய நேரத்திலும் மனிதனை உறங்கவிடாமல் தன்னைப் பற்றியே எண்ணி எண்ணி ஏங்கி வெதும்பிக் கொண்டிருக்கச் செய்கிறது விரகதாபம். அது இயல்பு என்றாலும் அதை நமக்கு எடுத்துக்காட்ட கம்பனின் அறிவாற்றல் அன்றே தேவைப்படுகிறது!

இனி, 'பூத–பௌதிகத் துறையிலே கம்பனின் அறிவாற்றல் எப்படி வெளிப்படுகிறது என்பதைப் ப்ார்ப்போம். இந்த உலகில் காணப்படும் யாவும் ஒரே மூலகத்தையே அடிப்படையாகக் கொண்டவை என்பதையும், ஆனால், அவற்றின் எண்ணளவையும், செறிவளவையும் பொருத்தே பொருள்களின் தன்மையும், குணமும், தரமும், வகையும் வேறுபடுகின்றன என்பதையும் நவீன விஞ்ஞான முடிவுகளால் இன்று நாம் உணருகிறோம். இந்த உண்மையைக் கம்பன் நன்குணர்ந்துள்ளான். அவனது அந்த அறிவாற்றல்

''பூதம் ஐந்தும், விலங்கிய விகாரப் பாட்டின் வேறுபாடுற்ற வீக்கம்'' என்று உரைப்பதிலிருந்து நன்கு புலனாகிறது.

''விலங்குதல்'' என்றால், குறுக்கும் நெடுக்கும், கீழும் மேலுமாய், குழம்பிக் கலத்தல்.

''விகாரப்பாடு'' என்ருல், கலப்பினுல் ஏற்படும் தோன்றல், திரிதல், கெடுதல்.

''வேறுபாடு'' என்ருல் ஒன்றிற்கு ஒன்று வித்தியாசப்படுதல். எண்ணிக்கை, செறிவு, கலக்கும் முறை ஆகியவற்றின் காரண மாக ஒரே மூலகம் எண்ணற்ற வகையாக மாறுகின்ற மாயத்தை, அற்புதத்தை கம்பனின் அறிவாற்றல் இப்படி ஒரு சூத்திரம் போலச் சுட்டி நிற்கிறது.

அடுத்து, இன்று பிரமாதமாக அடிபடும் அணுவைப் பற்றிய கம்பனின் அறிவாற்றல் எப்படியிருக்கிறது என்பதையும் பார்க்க லாம். மிகச் சமீப காலம் வரை அணு என்ருல், அதுதான் சின்னஞ்சிறிய பொருள், அது துண்டிக்கப்பட முடியாத கடைசித் தனிமம் என்றுதான் விஞ்ஞான உலகம் நம்பிக்கொண்டிருந்தது. சமீப கால விஞ்ஞான சோதனையானது அணு என்பது கட்டக் கடைசிப் பொருள் அல்ல; அதையும் உடைக்கலாம் என்று நிரு பித்தது. இந்த நிலைமை இந்தத் தலைமுறையில், நமக்குத் தெரிய, ஏற்பட்டதுதான். ஆனால், ஆயிரம் ஆண்டுகட்கு முன் வாழ்ந்த கம்பனின் அணு அறிவை நாம் பார்க்கும்போது மூக்கின்மேல் விரலை வைத்து, ஒரே வியப்புக் கடலுள் மூழ்கிவிடுகிருேம்.

சொல்லடா, அரி எங்கே என்று உறுமுகிற இரணியனுக்கு,
''சாணினும் உளன்; ஓர் தன்மை அணுவினைச் சத கூறு இட்ட
கோணினும் உளன்; மா மேருக் குன்றினும் உளன்;
இந் நின்ற
தூணினும் உளன்; நீ சொன்ன சொல்லினும் உளன்.''
என்று பிரகலாதன் விடை தருகிருன்.

ஒப்பற்ற அற்பமான, ஒரு அணு இருக்கிறதே, அதை, சம அளவுள்ள நூறு பாகமாகக் கூறு செய்யலாம். அதாவது ஒரு ரூபாயை நூறு பைசாக்களாக மாற்றுதலைப்போல. அப்படிக் கூறு செய்தவை ஒன்றுக்கொன்று ஏற்றத்தாழ்வு இல்லாமல் ஒரே அள வாகும். அந்த நூற்றில் ஒரு பங்குக்குக் ''கோண்'' என்று பெயர். அந்தக் கணிதப் புள்ளியை நம் போன்றவர்களும் புரிந்துகொள்ள வேண்டும் என்னும் பெருங்கருணையால், கம்பன்,

''ஓர் தன்மை அணுவினைச் சத கூறு இட்ட கோண்''

என்று, பொருளோடு சொல்லைக் கூறி விளங்கவைக்கிருன். இல்லாவிட்டால் 'கோண்' என்ற சொல்லை நாம் அறியவோ, அன்றிப் புரிந்துகொள்ளவோ முடியுமா? நம் நாட்டில் அணு அறிவும், அணு ஆராய்ச்சியும் இருந்திருக்கத்தான் வேண்டும் என்பதை, செய்தி அளவாகவேனும் இன்று நாம் ஊகிக்க முடி

கிறது என்றால் அதற்குக் காரணம் கம்பனின் அறிவாற்றல்தான், இல்லையா?

இனி நிலவியல், வானியல் பற்றிய அறிவாற்றல் கம்பனிடம் மிளிர்வதைப் பார்த்துவிட்டு கட்டுரையை முடிப்போம். நாள், மீன், கோள், ஞாயிறு, திங்கள், வால்மீன் முதலியவற்றைப் பற்றியெல்லாம் கம்பன் நன்கறிந்திருக்கிறான். சூரியன் எப்பொழுதும் பூமத்திய ரேகையில் செல்வதில்லை. ஆறு மாதம் தெற்கிலும், ஆறு மாதம் வடக்கிலும் சார்ந்தே சஞ்சரிப்பான். தெற்கைச் சார்ந்து சஞ்சரிக்கும் ஆடி முதல் மார்கழி வரையுள்ள அரை ஆண்டிற்கு தெட்சணாயனம் என்றும், வடக்கைச் சார்ந்து சஞ்சரிக்கும் தை முதல் ஆனி வரையுள்ள அரை ஆண்டிற்கு உத்தராயணம் என்றும் அக்காரணம் பற்றியே பெயர் ஏற்படலாயிற்று. இவற்றை எல்லாம் கம்பன் தேர்ந்து தெளிந்தவன். இந்த அறிவாற்றல் கம்பனின் கற்பனை வளம் சிறக்கக் கைகொடுத்துதவுகிறது.

வேலையுள் இலங்கை என்னும் விரிநகர் இருக்கிறதே, அது பூமத்திய ரேகையை ஒட்டியிருக்கிறது. ஆகவே அதன் நேர் உச்சியில் சூரியன் சஞ்சரிப்பதில்லை. அது முற்றிலும் நிலவியல், வானியல் நியதிக்கு உட்பட்டதுதான். ஆனால், கம்பனோ இராவணனின் பேராற்றலையும், சர்வாதிகாரத்தையும் புலப்படுத்த, இந்த இயற்கை நியதியை பயன்படுத்திக்கொள்ளுகிறான். கம்பனின் அறிவாற்றல் அப்படி அழகு செய்கிறது காப்பியத்தை. இனி அவன் கற்பனையைக் காணலாம்.

இராமனின் சொல் கடவாத தூதனாகிய அங்கதன் இலங்கையை நோக்கிப் புறப்படுகிறான். வீரன் வெஞ்சிலையில் கோத்த அம்பு என விசையில் போன அவன் நேரே சாக்ஷாத் ராவணேச்வரன் திருமுன்னரே வந்து குதிக்கிறான். எத்தனையோ கட்டுக் காவல்; கொத்தள வாயில் திறக்கப்படவில்லை; கோட்டைச் சுவரோ வான முகட்டைத் தொட்டுக் கொண்டிருக்கிறது. இராவணனுக்கு அஞ்சி, அவன் ஆணைக்குக் கட்டுப்பட்டுத்தான் சூரியனும் அந்நகரத்தை நேர் உச்சியில் தாண்டிச் செல்லமாட்டானாம்! தப்பித் தவறி மறந்தேயும் அவன் நேர் உச்சியில் சஞ்சரித்து விடப்படாது என்பதற்காகத்தான் மதில் அத்துணை உயர்ந்ததாக அமைக்கப்பட்டதாம். எனவே, சூரியன் எப்பொழுதும் இலங்காபுரியின் உச்சியில் செல்லாமல் தெற்கிலும் வடக்கிலும் விலகிச் செல்கிறானாம். அத்தகைய மதிலையும் நேராகக் கடந்து சென்றானாம் அங்கதன்.. அதைக் கம்பன்,

''....அயோத்தி வந்தான் சொல் கடவாத தூதன்
வெயில் கடந்திலாத, காவல், மேருவின் மேலும் நீண்ட,

எயில் கடந்து, இலங்கை எய்தி, அரக்கனது இருக்கை
புக்கான்''

என்று கூறுகிறுன். கம்பனின் அறிவாற்றல் இப்படியே இன்னும் எத்தனையோ துறைகளில் வெளிப்படுகிறது. அவற்றையெல்லாம் ஆர அமர இருந்து படித்துப் பார்த்தால் தமிழ்த் தாயின் தவப் புதல்வன், தன்னே ரில்லான், கவிச்சக்கரவர்த்தி கம்பனின் அருமையையும் பெருமையையும், நன்கறிவதுடன் நாமும் வளம் பெறுவோம். அத்தகைய விழுமிய அறிவாற்றல் மிக்கவன் கம்பன். இல்லாவிட்டால் ''கல்வியில் பெரியன் கம்பன்'' என்ற நிறைமொழி தமிழகத்தில் வேறூன்றியிருக்குமா, என்ன?

கம்பன் கலைத்திறன்

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன், எம்.ஏ., எம். லிட்., பிஎச்.டி.,
தமிழ்ப் பேராசிரியர், தமிழ்மொழித் துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.

தமிழ்க் காப்பிய உலகில் தனக்கெனத் தனிச் சிறப்பான ஓர் இடத்தினைப் பெற்றிருப்பது கம்பராமாயணமாகும். கம்பனால் தமிழ்க் கவிதையுலகு பெருமைபெற்றது. தமிழால் கம்பன் உயர்ந் தான். 'கல்வியில் பெரியவர் கம்பர்', 'கவிச் சக்கரவர்த்தி கம்பர்' 'கம்பன் வீட்டுள் ஒரு சிறு புன் கட்டுத்தறியும் கவி செய்யும்', 'கம்பனுரிடைப் பெருமையுளது' முதலிய தொடர்கள் கம்பன் பெருமையினை நன்கு பறை சாற்றுவனவாகும்.

இந் நூலுக்குக் கம்பன் வழங்கிய பெயர், 'இராமாவதாரம்' என்பது. இதனை, 'இராமாவதாரப் பேர்த்தொடை நிரம்பிய தோமறு மாக்கதை' என்ற பாயிரச் செய்யுளின் பகுதியால் அறிய லாம். கம்பன் தமிழ்மொழியிலும், தென்னாட்டின் பிறமொழி களிலும், வடமொழியிலும் பெரும் புலமை பெற்றிருந்தான் என்பதனை அவன் இயற்றிய காவியங் கொண்டு தெரியலாம். இராமனைக் குறித்துக் கம்பன், 'தென் சொற் கடந்தான், வட சொற்கலைக்கு எல்லை தேர்ந்தான்' என்று கூறியுள்ள தொடர் அவனுக்கும் பொருத்தமாகும்.

இயற்கையின் இனிய பெற்றியினை ஈடும் இணையுமற்ற முறை யில் வருணிக்கும் திறம், பல்வேறு கதாபாத்திரங்களின் மன வியல்புகளைப் பழுதற வடித்துக் காட்டும் வன்மை, இசை, நாடகம் மனத்தில் எழும் எண்ணங்களைக் கவிதையாக வடிக்கும் ஆற்றல் கவிஞன் கம்பனுக்குக் கைவந்த கலையாகும். இராகவனிடம் தோற்று, இலங்கை சார்ந்து அமளிபோந்த இராவணன் கண் துஞ்சாமல் கவலையில் துஞ்சினன். கையற்ற நெஞ்சினனாய் உள் நிறை மானம் உருத்தெழ நெடுமூச்செறிந்தான். அதுபோது வானவர், மண்ணுலகில் உள்ளோர்—தன் பகைவர்கள் எல்லாம்—தன் நிலை கண்டு நகுவர் என்பதற்காக அவன் நாணவில்லை. ஆனால் மிதிலைப் பொன்னும் சீதை தன்னைப் பார்த்துக் கை

கொட்டி நகைப்பளே என்ற எண்ணம் மீதூர அதனுல் வந்த நாணத்தின் பெருக்கால் உள்ளமும உடலும் கூசிக் குறுகுகின்ருன். இச்செய்தியினைக் கவிக் கூற்ருய் காண்போம்:

வான் நகும் மண்ணும் எல்லாம் நகும்மணி
வயிரத் தோளான்
தான் நகு பகைவர் எல்லாம் நகுவர் என்று
அதற்கு நாணுன்
வேல்நகு நெடுங்கண் செவ்வாய் மெல்லியல் மிதிலை வந்த
சானகி நகுவள் என்றே நாணத்தால் சாம்புகின்ருன்.

கம்ப. யுத்த. கும்பகருணன் வதைப்படலம்: 11.

கம்பனின் நன்றிமறவா நல்லுணர்வினைக் காண்போம்:

எந்நன்றி கொன்ருர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

— திருக்குறள் 110.

என்ருர் வள்ளுவர்.

முதலிய கலைக்ளை நுணித்துணர்ந்த மாட்சி, பிறந்த பொன்னுடாம் தமிழ்நாட்டின் மீதும், நாட்டின் பண்பாடு, நாகரிகம், கலை முத லியவற்றின் மீதும் அவன் கொண்ட பற்று, நன்றிமறவா நல் லுள்ளம், விருத்தப்பாவினை வகை பெறக் கையாண்டு பல்வேறு கதிகளையும் சந்த இன்பத்தினையும் புலப்படுத்தும் புலமை, நாடக பாவத்தில் கதையினை நடத்திச் செல்லும் அரிய திறன் முதலிய இன்ன பிற சிறப்புக்கள் எல்லாம் கம்பன் கவிதையில் கவினுறத் துலங்குவதைக் காணலாம்.

கம்பன் வடமொழிக் காதையைப் பாடினுலும் தீன்தமிழ் நாட்டை மறந்தானில்லை. தமிழ்நாட்டுப் பண்பும் பழக்க வழக்கங் களும் அவன் பாடலில் அப்படியே இடம் பெற்றுள்ளன. கோசல நாட்டைப் பாட வந்த கவிஞன், 'காவிரி நாடன்ன கழனி நாடு' என்று கூறுகின்ருன். வடமொழியில் வால்மீகி சீதையும் இராம னும் திருமணத்திற்கு முன்னர் ஒருவரையொருவர் கண்டு காதல் கொண்டதாகக் கூறவில்லை. ஆனுல் பழந்தமிழ் மரபினை நன் குணர்ந்த கம்பன் தான் தரும் காப்பியம் தமிழ் மக்களுக்கு என் பதனை நன்குணர்ந்து கடிமணம் புரிந்து கொள்வதற்கு முன்ன தாகச் சீதையையும் இராமனையும் சந்திக்க வைத்து இருவர் தம் உள்ளமும் காதலால் கட்டுண்டதாகக் குறிப்பிட்டுள்ளான்.

பருகிய நோக்கெனும் பாசத்தால் பிணித்து
ஒருவரை யொருவர்தம் உள்ளம் ஈர்த்தலால்

வரிசிலை அண்ணலும் வாட்கண் நங்கையும்
இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினர்.

கம்ப. பால. மிதிலைக் காட்சிப்படலம்: 37.

இது போன்றே வாலியை இழந்த தாரையின் கைம்பெண் கோலத்தைக் கூறவந்த கம்பனின் சொற் சித்திரத்தில் தமிழ் நாட்டின் கைம்பெண் கோலமே இடம் பெற்றுள்ளது.

அதன்படியே கம்பனும் தன்னை ஆதரித்த வெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளலைத் தான் இயற்றிய இராமாயணத் தில் தக்க இடங்களில் போற்றிப் புகழ்கிறார். கதையின் இறுதியில் இராமன் முடிசூட்டு விழா நடைபெறுகின்றது. அதுபோது சடை யப்ப வள்ளலின் மரபில் வந்த பெரியவர் ஒருவர் திருமுடியினை எடுத்துத்தர வசிட்ட முனிவர் இராமனுக்கு அம் முடியைப் புனை கின்றார் என்று கூறிக் கதையை முடிக்கின்றார்.

அரியணை அனுமன் தாங்க அங்கதன் உடைவாள் ஏந்தப்
பரதன் வெண்குடை கவிக்க, இருவரும் கவரி பற்ற
விரிகடல் உலகம் ஏத்தும் வெண்ணெய் நன்
சடையன் வண்மை
மரபுளோன் கொடுக்க வாங்கி வசிட்டனே
புனைந்தான் மௌலி.

கம்ப. யுத்தகாண்டம். திருமுடிசூட்டுப் படலம்: 16

இவ்வாறு கம்பனின் கலைத்திறனை அவன் காவியம் முழு வதிலும் கண்டு களிப்பு வெள்ளத் திளைக்கலாம்.

கம்பன் கண்ட அறம்

டாக்டர் க. த. திருநாவுக்கரசு
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

அறம்

மனிதன் தனக்கென வரையறுத்துக்கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியே—முழுநிறை வடிவமே—அறம் எனக் கூறுவர். மனித வாழ்வின் பயன் மதிப்புகளுள் தலையாயது அறம். அறம் என்பது ஒருவகை வாழ்க்கை நெறி. பொருளையும் இன்பத்தையும் நுகர்ந்து மகிழ்வதில், மனிதனை நெறிப்படுத்தும் சக்தியாக இருப்பது — மனிதனை நெறியோடும் முறையோடும் வாழுமாறு இயக்குவது அறம்.

அறம் எனும் சொல் ஒழுக்கம், வழக்கம், இராசநீதி, கடமை, ஈகை, புண்ணியம், அறக்கடவுள், சமயம் எனும் பல்வேறு பொருள்களை உடைய தனித்தமிழ்ச் சொல்லாகும். இதற்கு நேரான வடமொழிச்சொல் 'தருமம்' என்பதாகும்.

கவிச்சக்கரவர்த்தி

செஞ்சொற் கவியின்பம் பயக்கும் மாபெரும் காப்பியம் புலவன் கம்பன். சக்கரவர்த்தித் திருமகனாகிய இராமனுடைய புனித காதையைத் தமிழிலே பாடிய கவியரசன் கம்பன். அவன் மனித இயல்புகளைப் பல்வேறு கோணங்களில் படம் பிடித்துக் காட்ட முயன்றுள்ளான். அம்முயற்சியின் அடிநாதமாக ஒலிப்பது அறம். கம்பனுடைய பாடல்களில் அறம் பல்வேறு கோலங்களில், வண்ண வண்ண வடிவங்களில் வீறுடன் விளங்குவதைக் காணுகின்றோம். அவற்றுள் முதன்மையான வடிவங்கள் சிலவற்றை இங்கு நாம் நினைவுகூருவோமாக!

அறத்தின் நாயகன்

காப்பியத் தலைவனாகிய இராமனைக் கம்பன் அறத்திற்கே தலைவனாக—நாயகனாக நமக்கு அறிமுகம் செய்கிறான். அசோக வனத்துள் சிறை இருந்த சீதை, அனுமனிடம், இராமனை ''அறத்தின் நாயகன்'' என்று பெருமிதத்தோடு சுட்டுகிறாள். 'இவ்வாறு

சீதை, தன் கணவனைச் சுட்டுவது பொருந்துமா?' எனும் ஐயம் சிலருக்கு எழலாம்.

திருமாலே, உலகில் அறத்தை நிலைநாட்ட இராமனாகத் தோன்றினார் என்பதனைக் கம்பன் பல இடங்களில் தெரிவித்துள்ளமை இங்குக் கருதத்தக்கதாகும். அறவாழி அந்தணனாகிய இறைவனே, 'வானின்று இழிந்து, வரம்பு இகந்த மாபூதத்தின் வைப்பெங்கும் ஊனும் உயிரும் உணர்வும்போல் உள்ளும் புறத்தும் உள்ள' இறைவனே, 'கூறும் சிறிய கோத்தாயும் கொடுமை இழப்பக், கோல்துறந்து, கானும் கடலும் கடந்து இமையோர் இடுக்கண் காத்ததை' நமக்குப் பல இடங்களில் கம்பன் அறிவுறுத்தியுள்ளான்.

அறத்தின் வடிவம்

'அறம் எனவும், தருமம் எனவும் சொல்லுகின்றீரே! அது எப்படி இருக்கும்?' என்று யாரோ கம்பனைக் கேட்டார்கள் போலும்! இந்த வினாவிற்கு விடை இறுக்கும் வகையில், தருமத்தின் திருவுருவை நம் மனக்கண் முன்னால் அவன் கொண்டு வந்து நிறுத்துகிறான். பௌர்ணமி அன்று கிழக்கு வானில் பொங்கிவரும் பெருநிலவை—முழுமதியைக் காட்டுகிறான். தருமத்தின் முகம் ஒளிமயமான தண்மதியம் போல் இருக்கும் என்று அவன் கூறுகிறான். திங்கள், தருமத்தின் முகம் போல பிரகாசித்தது என்பதை,

> ''தருமத்தின் வதன மென்னப்
> பொலிந்தது தளிவெண் திங்கள்!''

என்று அவன் தெளிவுறுத்தியுள்ளான்.

அறம் அழுதது!

கடல் சூழ்ந்த உலகினைப் பரதனே ஆளுவதற்கு உடன்பட்டு, காட்டிற்குச்செல்ல இராமன் முனைந்தான்; தன் தாயாகிய கோசலையிடத்து விடைபெறச் செல்லுகின்றான். பெற்ற தாய், தன் மகன் முடிசூட்டிக்கொண்டு அரச கோலத்தில் தன்னிடம் வாழ்த்துப்பெற வருவான் என்னும் 'இனிய நினைவுகளோடு' காத்திருந்தாள்.

இராமன், தனியே, அவள் முன் சென்று நின்றான். குழைக்கின்ற கவரி இல்லாமல், வெண்கொற்றக்குடை இல்லாமல், விதியானது அவனை இழுத்துக்கொண்டு முன்னே செல்ல, தருமம் 'ஐயோ! இத்தகைய அநீதி இழைக்கப்பட்டுவிட்டதே!' என்று வருத்தத்துடன், அவன் பின்னால் ஏக்கமே வடிவமாக அழுது

கொண்டு சென்றதாகக் கம்பன் சித்திரித்துள்ளமை அவலச் சுவையின் கொடுமுடிக்கு நம்மை எல்லாம் அழைத்துச் செல்லுகிறது.

மாவீரனுக்கு அழகு

''மாவீரன் (சூரன்)' எனப் போற்றப்படுபவன் யார்?'' என்பதை இராமன் மூலமே கம்பர், அறிவுறுத்தும் திறம் நம் கருத்தைக் கவருவதாகும். தம்மைப் போர்க்களத்திலே எதிர்த்துப் போரிடும் பகைவருடைய கூரிய, பளபளப்பான படைக் கருவிகள், தம் நெஞ்சிற்கு நேராக வந்து பாய்கின்றபொழுது, அவற்றைக் கண்டு அஞ்சாமல் உள்ளவுரத்துடன் எதிர்த்து நிற்பவன் மாவீரனுகமாட்டான். பிறகு எதனுல் ஒருவன் மாவீரனுக மதிக்கப்படுவான்? இறக்கும்படி நேர்ந்தாலும், செல்வம் எல்லாவற்றையும் இழக்கும்படி நேர்ந்தாலும் ''இவன் அறத்தைக் கைவிடாது நின்று ஒழுகுபவன்'' எனப் பாராட்டப்படுபவனே மாவீரனுவான். அடுக்கிய கோடி துன்பங்கள் வந்தாலும், அவற்றைக் கண்டு மனம் தளராது, 'அறத்தைப் போற்றிப் பின்பற்றுவதே' மாவீரனுக்கு அழகாகும். இவ்வாறு வாழ்பவனே சான்ருேன்; மீமனிதன் (Super Man) ஆவான்.

> நிறப்பெரும் படைக்கல நிறத்தி னேருற
> மறப்பயன் விளக்குறும் வன்மை யன்றரோ
> இறப்பினும் திருவெலாம் இழப்ப எய்தினும்
> 'துறப்பிலர் அறம்' எனல் சூரர் ஆதலே.

பெரியோர் கட்டளைப்படி நடத்தலே அறம்

மூத்தோர் இடும் கட்டளைகளை மகிழ்வுடன் ஏற்று, அதன்படி நடத்தலே இளையோர்க்கு உரிய அறமாகும் என்பதை இராமகாதை விரிவாகப் பேசுகிறது.

விசுவாமித்திரருடன் சென்ற இராம, இலக்குவர், முனிவர் பெருமானுடைய கட்டளையை ஏற்று, அதன்படிச் செயல்படுவதே தங்களுக்குரிய அறமாகக் கருதினர். இதனை,

> ''மெய்ய! நின்னுரை வேதமெ னக்கொடு
> செய்கை அன்ருே அறம்செயும் ஆறு என்ருன்''

என்பதனுல் அறிகிருேம். இதே உணர்வோடுதான், இராமன் 'தந்தைசொல் மிக்க மந்திரம் இல்லை!' எனும் தெளிவோடுதான் முடிசூட்டிக்கொள்ள இசைகிருன்.

> ''யாது கொற்றவன் ஏவியது அதுசெயல் அன்ருே
> நீதி எனக்கென நினைந்துமப் பணிதலை நின்ருன்''

என்பது இராமனுடைய மனநிலையை இனிது புலப்படுத்து கிறது.

'தந்தையின் கட்டளைப்படி, தாம் அரசினைத் துறப்பது அறச் செயலே' என்று இராமன் கருதியதைப் பரதன் பாராட்டும் வகையில்,

''இறந்தான் தந்தை ஈந்தவரத்துக்கு இழிவுஎன்னு
'அறந்தான் ஈது' என்று அன்னவன் மைந்தன் அரசு
எல்லாம் துறந்தான்''

என்று கம்பர் எடுத்துரைத்துள்ளார்.

அறத்தின் பல்வேறு இயல்புகளுள், இராமாயணம் உணர்த்தும் தலைசிறந்த முதன்மையான இயல்பாகக் கம்பன் தெரிவிப்பது ''பெரியோரின் கட்டளைப்படி இளையோர் நடப்பதே அறம்'' என்பதாகும்.

இந்த அறநெறியின் சிறப்பினை உணர்ந்து போற்றி, வாழ்வில் கடைப்பிடிக்க முயலுவதே நம் சிறுவர்கள் செய்யத்தக்க சிறப்பு மிக்க செயலாகும்.

அண்ணலும் நோக்கினன்
அவளும் நோக்கினள்

Dr. K. A. MANAVALAN M.A., B.O.L., Ph.D.

(Vidwan Siromani Dip. in Hindu Religion)

மிதிலா ராஜ்யம். அழகிய மாடங்கள் நிறைந்த அகன்ற தெருக்கள். விசுவாமித்ர முனிவர் பின்னே ராம லக்ஷ்மணர்கள் செல்கின்றனர். மகளிர் பாடும் இனிய கீதத்தைக் கேட்டுக் கொண்டே களைப்பின்றி நடக்கின்றனர். அகழியைக் கடந்து அரண்மனைப் பக்கம் வந்தனர். கன்னிமாடத்தைக் கண்டனர். அதிலும் குறிப்பாக ராமன் பார்த்தான்.

பொன்னின் ஒளியாம்; பூவின் மணமாம், தேனின் இனிமையாம், செஞ்சொற்கவி இன்பமாம் சீதையைக் கண்டான் இராமன். உலகத்துப் பெண்களின் அழகுக்கு உவமையாகச் சொல்லவேண்டுமானல் சீதையைச் சொல்லலாமே தவிர, அச் சீதையின் அழகுக்கு யாரை உவமையாகக் கூறமுடியும்? சீதையின் மேனியழகைக் காண நமக்கும் தேவர்களைப்போல இமையாக் கண்கள் இல்லையே என்று இவ்வுலகத்தார் ஏங்குவார்களாம். இமையா நாட்டம் பெற்றுள்ள மேலுலகத்தவரோ இரண்டு கண்களையே பெற்றுள்ள நம்மால் இச்சீதையின் எழிலை எவ்வாறு கண்டுகளிக்க முடியும்? ஆயிரம் கண்களில்லையே என்பார்களாம்.

மானும் மீனும் வேலும் வாளும் மற்றவர் கண்களுக்கு வேண்டுமானல் உவமையாகலாமே தவிர இச்சீதையின் கண்களுக்கு அவை ஒருபோதும் உவமையாகாவாம். அப்படிப்பட்ட அழகிய கண்ணழகு படைத்த சீதையைப் போன்ற அழகுத் தெய்வத்தைப் பிரம்மாவினலும் படைக்க முடியாது என்கிறன் கம்பன். அழகுத் தெய்வமான மன்மதனே இச்சீதையைச் சித்திரத்தில் வரைந்து பார்க்க ஆசைப்பட்டானும். அமுதக் கிண்ணத்தில் எழுதுகோலைத் தோய்த்து வரைய ஆரம்பித்த அவனும் அவ

ளுடைய மேனி அழகை எழுதமுடியவில்லையாம். இதனை

'ஆதரித்து அமுதில் கோல் தோய்த்து அவயவம்
அமைக்குந் தன்மை
யாதெனத் திகைக்கு மல்லால் மதனற்கும்
எழுத ஒண்ணுச் சீதை

என்று கம்பர் வருணித்துள்ளார்.

வேலும் கூற்றமும் பகைவர் இருக்குமிடம் சென்று அவர்களை அழிக்கும். இவள் கண்களோ தானிருந்தவிடத்திலிருந்தே மற்றவர்களுக்குக் காம நோயையுண்டாக்கிவிடுமாம். இவள் விழிகளின் தன்மையை நம்மால் வருணிக்க முடியுமோ என்று கம்பனே பின் வாங்குகிறுன் என்ருல்—அப்பிராட்டியாகிய சீதையின் கண்ணழகை வேறு யாரால்தான் வருணிக்க முடியும்? இதனை

''. . . . . .குன்றும் சுவருந்திண்
கல்லும் புல்லும் கண்டுரு கப்பெண் கனி நின்ருள்''
என்ற கம்பர் வாக்கால் அறியலாம்.

ஆபரணங்களுக்கெல்லாம் அழகைக் கொடுக்கக்கூடிய பேரழகு வாய்ந்த இப்பிராட்டியான சீதையின் கண்களும் ஆணழகனை இராமபிரானுடைய கண்களும் ஒரு கணம் சந்தித்துக்கொண்டன. இராமன் சீதையைப் பார்க்க, சீதை இராமனைப் பார்க்க அப்பொழுது இருவர் மன உணர்ச்சியும் ஒற்றுமைப்பட்டு உயர்ந்த காதலை விளைவித்ததாம். இருவர் அறிவும் தத்தம்மிடங்களில் நிலைபெருமல் உள்ளப் புணர்ச்சியை அடைந்தனர். இதனை மிகவும் அழகாகக் கம்பர்

''உண்ணவு நிலைபெரு துணர்வு மொன்றிட
அண்ணலு நோக்கினுனவளும் நோக்கினுள்''
என்று கூறியுள்ளார்.

இப்படிப் பார்த்துக்கொண்டே அந்த இருவரும் ஒருவருடைய மனம் மற்றவரை இழுத்ததால் அவ்விருவரும் கண்பார்வையால் காதல் கொண்டு ஒருவர் மனத்தில் மற்ருெருவர் குடிபுகுந்தனர். இதனை

''இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினுர்'' என்று கவி வருணித்துள்ளார். மேலும் இக்காட்சியைக் கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் மற்ருெரு வகையிலும் காட்டுகிருர். சீதா ராமர்களுடைய இந்த மன ஒற்றுமையை இரண்டு உடம்புகளுக்கு ஒருயிர் என்னும்படி இவர்கள் காதல் தூய்மைபெற்று விளங்கியது என்பதே அது. இவர்கள் திருப்பாற் கடலில் பள்ளிகொண்ட தெய்வ தம்பதி

களல்லவா? இராமனுகப் பிறக்கவேண்டி ஸ்ரீமந் நாராயணனும் சீதையாகப் பிறக்கவேண்டித் திருமாமகளும் முன்பு பிரிந்தார்கள். அப்படிப் பிரிந்த இவர்கள் இப்படி இங்குக் கூடும்போது பேசவும் வேண்டுமோ? பார்வையே போதாதோ? அல்லது அவர்களுடைய அன்புக் காதலை நம்மால் பேசத்தான் ஆகுமோ?

''கருங்கடல் பள்ளியில் கலவி நீங்கிப் போய்
பிரிந்தவர் கூடினுல் பேசவும் வேண்டுமோ?

ஆனுல் முனிவன் முன்னே சென்றுவிட்டான். இராமன் பின்னே நிற்க முடியுமா? தொடர்ந்து நடந்தான். இப்படி முனிவன் பின்னே சென்ற ராமனும் மலர்ப்படுக்கையில் இருந்த சீதையும் இரவெல்லாம் உறக்கமின்றிக் காம நோயால் தவித்தனர். பொழுது விடிந்தது. சபாமண்டபத்தில் ஒரே கூட்டம். கன்னியா சுல்கமாகச் சிவதனுசு அங்கே வைக்கப்பட்டிருந்தது. வில்லின் வரலாற்றைச் சதானந்தர் சொன்னுர். இந்த வில்லை வளைத்துச் சீதையை இராமன் மணக்க வேண்டுமே என்று ஜனகன் ஏங்கினுன். பல வீரர்கள் முயன்று தோற்றனர். ஆனுல் பெண்கள் ராமனையே நம்பிக்கையோடு பார்த்திருந்தனர்.

இராமன் எழுந்தான். விசுவாமித்திரனை வணங்கினுன். அவ்வளவுதான்! ஒருகணத்தில் எல்லாம் முடிந்துவிட்டது. ''எடுத்தது கண்டனர், இற்றது கேட்டார்'' என்று கம்பர் சுருக்கமாகச் சொல்லிவிட்டார். ஆம்! அவ்வளவு விரைவில் வில் ஒடிந்தது. எடுத்தபின் நடந்ததையெல்லாம் பார்ப்பதற்குள் முடிந்துவிட்டதே—முறிந்துவிட்டதே. ஒடிந்த சப்தம்தான் காதில் கேட்டது. கம்பர் சமத்காரமாகக் கூறுகிறுர்—இராமனைப் பொருத்தமட்டில் அது வில்லல்ல. அது ஒரு மாலைதான். அதுவும் சீதைக்குச் சூட்டும் மணமாலைதான். அதை அவளுக்கே சூட்டும் மாலை எனக் கருதி எடுத்தான் என்கிறுர். ''ஏடு அவிழ் மாலை இது என எடுத்தான்'' என்கிறுர்.

உடனே சீதைக்குச் செய்தி எட்டியது. ஆனுல் அவளுக்கு ஒரு சந்தேகம். நேற்று கன்னிமாடத்திலிருந்து பார்த்தோமே அவன்தானே? அன்றி வேறு யாரோ? என்பதே அவள் ஐயம். இதுபோல், இங்கு பந்தயப் பரிசாக வைக்கப்பட்டவள் நேற்று நாம் மாடத்தில் கண்ட அப்பெண்மானே அன்றி வேறு யாரோ என்பதே அவனுடைய ஐயம்.

ஆனுல் திருமண ஏற்பாடுகள் மிக விரைவாக நடந்தன. தசரதனும் மனைவிமார்களோடு வந்து சேர்ந்தான். தம்பிமார்களும் வந்தார்கள். மணப்பெண்ணும் நன்கு அலங்கரிக்கப்பட்டுப் பெடையன்னமென நடந்து வந்தாள்.

'அழகெல்லாம் ஒருங்கே கண்டால் யாவரே ஆற்றவல்லார்'

இந்த அழகியின் நடையைக் கம்பர் பின்வரும் பாட்டால் மிக அழகாக வருணித்துள்ளார்.

பொன்னி ளொளி பூவின்வெறி சாந்து பொதி சீதம்
மின்னி னிழ லன்னவடன் மேனியொளி மான
அன்னமு மாம்பையரு மாரமிர்து நாண
மன்னவை யிருந்தமணி மண்டப மடைந்தாள்.

இப்படிச் சீதை அன்ன நடையிட்டு மணிமண்டபத்தை யடைந்தபொழுது இராமனும் பெருமித நடையோடு அங்கு முன்னமே வந்திருந்தான். எல்லோருடைய கண்களும் அந்த இராமபிரான் வடிவழகிலே ஈடுபட்டிருந்தன. ஒவ்வொருவரும் ஒவ்வொரு அவயவங்களிலே. வைத்த கண் வாங்காமல் அவன் அழகைக் கண்டார்களே தவிர யாரும் முழுமையாக அந்த இராமனின் முழு அழகையும் பருக முடியவில்லை. அவன் வடிவழகினை யாரே முற்றக் கண்டார்? இதனைக் கம்பர்

''தோள் கண்டார் தோளே கண்டார்'' என்ற பாட்டால் வருணித்துள்ளார்.

விசுவாமித்திரர் ஆணழகனான இராமனையும் பெண்ணழகியான சீதையையும் மாறி மாறிப் பார்த்தார். இப்படி இவ்வளவு அழகுடன் ஒரு பெண் கிடைப்பதானால் இந்த வில் என்ன? ஏழு மலைகளையும் முறித்துத்தள்ளானோ என் இராமன் என்று உள்ளம் பூரித்து மகிழ்ந்தார்.

''நச்சுடை வடிக்கண் மலர் நங்கை இவளென்றால்
இச்சிலை கிடக்க மலை ஏழையும் இருனோ'' என்பதே அப்பாட்டு.

சீதை அடிக்கடி கடைக்கண்ணால் ராமனைப் பார்த்தாள். இராமனும் ஓவியத்தெழுத ஒண்ணா அவ்வுருவத்தை—சீதையை யாவரும் காணாமல் கண்டான்.

இந்தத் திவ்விய தம்பதிகளுக்கு வசிஷ்டரும் சதானந்தரும் விசுவாமித்திரரும் பெற்றோர்களும் உற்றோர்களும் சூழ மிகவும் வைபவமாகத் திருமணம் நடந்தது என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? இவர்களுக்கு மட்டுமா? இராமன் பின் பிறந்தார்களான தம்பிமார்களுக்கும் அதே முஹூர்த்தத்தில் திருக்கலியாணம் நடந்தது. உலகமே இன்று கலியாணமாகத் திகழ்வதற்கு அப்பரம்பொருளே ஸ்ரீமந் நாராயணனே—ஸீதாராமனே காரணமன்றோ!

கம்ப நாடகம்

பேராசிரியர் மதி. சீனிவாசன், M.A., B.SC., B.T.,

திரை விலகுகிறது; நாடகம் தொடர்கிறது. கண்ணுக் கெட்டிய தூரமெல்லாம் பரந்து காட்சி தரும் திறிகூட மலைப் பின்னணியில் அந்நகர மாட மாளிகைகள் மண்ணிற்கும் விண் ணிற்குமாக உயர்ந்து தோன்றுகின்றன. பொன் கொண்டிழைத்து, மணியாற் பொதிந்த மாணிக்கச் சுவர்கள்! மின்னலைக் குழைத்து வெயிலாற் சமைந்த ஒளிப்பரப்புகள்! 'ஆறுகிடந்தன்ன' அகன்ற வீதிகளில் யானைச் சேனையும் தேர்த்தானையும் வெற்றி முத்திரை பதித்த வீரக் கோலம் கண்ணைப் பறிக்கிறது. தேன் துளிர்க்கும் மலர்க் காடுகள், தெவிட்டாத இனிமைக் கனி மரங்கள் காட்சி தரும் அற்புதச் சோலை கனகத்தாலும் மணியாலும் ஆனதோ என்னுமளவிற்கு அழகால் நெஞ்சைப் பிணிக்கிறது. அதோ! அங்கே நீண்டுயர்ந்து ஆகாயத்தைத் தொடும் அரண்மனைக் கோபுரம் தெரிகிறது. (நீரும் வையமும் நெருப்பும் மேனி நிமிர் நெடுங்காலும் வாரி வானமும்' வழங்கும் வளர்ச்சி கொண்டது அது. அரண்மனையைச் சுற்றிச் செல்லும் நீண்ட மதில்கள் நெடுவானை அளக்கிற அற்புதம் கண்கொள்ளாக் காட்சியாய்த் திகழ்கிறது. 'கறங்கு கால் புகா; கதிர் புகா' என்று கவியோவியம் தீட்டும் திண்மை, வன்மை, நெடுமை யாவும் வாய்ந்த பெருமதில் அது. அம்மதில்களுக்கு நடுவே கோபுர விமானம் பிரம்மாண்ட மாகப் பணைத்து நின்று நிலைத்துள்ளது; மந்தாரம் உந்து மகரந்த வாடை மெல்ல மெல்ல வீசுகிறது. சிந்தை கவரும் இந்தப் பொன்னூர் காட்சிச் சூழலில் வந்து தவழ்கிற தென்றல், மலர்மணத் துடன் சந்தண வாசத்தையும் தாங்கி வருகிறது. குதிரைக் கனைப்பு, கூடவே கேட்கிற யானைப் பிளிறல், உப்பரிகையிலிருந்து வருகிற சங்கீதம் யாவும் சுருதியுடன் கலந்து இனிமையான பின்னணியில் இசைக்கோலம் போடுகிற ஈடிணை அற்ற நேரம் அது! மங்கிய அந்த மாலைப் பொழுதில் இருளும் ஒளியும் கலந்து உறவாடுகிற மயங்கிய நிலை, இரவுக்குக் கட்டியம் கூறுகிறது. அந்நகர மாந்தர் களிப்பில் திளைத்தவாறு அங்குமிங்கும் திரிகிறார்கள். இந்திரவள நகர்க்கு ஏகுவார் சிலர்; சந்திரன் உலகினைச் சார்பவர்கள் இன்னும்

சிலர். ஒப்பும் மிக்கும் அற்ற அவர்கள் தலைவனுக்குப் பணிசெய்ய விரைகின்ற அந்த மாந்தர்கள் ஈட்டத்தை நாடக மேடையில் நிழற் காட்சியாகக் காண்கிறோம். அதோ! பொன்னகர் மடந்தையர், விஞ்சைப்பூவையர், பன்னக வனிதையர், இயக்கர் யாவரும் முறை முறையாக முன்னணியில் பணி செய்ய முந்துகிறார்கள். தேவர்கள், நாகர், அவுணர், விஞ்சையர் ஆகியவர் தங்களுக்குள் போட்டியிட்டுக் கொண்டு பேரரசன் இராவணனுக்குப் பணி செய்ய விரையும் காட்சியை இந்நாடக மேடையில் காண்கிறோம்.

வரிசை வரிசையாகச் செல்லும் தேவர்கள் தங்களிடையே மெல்லிய குரலில் உரையாடிக் கொண்டு செல்வதைக் கேட்கிறோம். ''காலம் கடந்து விட்டதே! இன்னும் நொடி நேரம் தாழ்ந்து சென்றாலும் பேரரசன் இராவணன் சினம் கொள்வானே!'' என்று பேசிக் கொண்டு விரைந்து விரைந்து செல்கிறார்கள். ஓட்டமும் நடையுமாய் விரைந்து செல்கிற அந்த வேகத்தில் அவர்கள் அணிந்துள்ள முத்து மாலைகள் மார்பின் இருபுறங்களிலும் புரள்கின்றன, கீழே விழுந்து விடுகிற அளவுக்குக் கழுத்தை நீட்டிக் கொண்டு வெளித் தோன்றுகின்றன. ஓடுகிற வேகத்துக் கேற்ப முடிகள் அசைகின்றன; மாலைகளும் ஆடி ஆடி அசைந்து சரிகின்றன; மேலாடையான உத்தரீயங்கள் கீழே சரிந்து விழுகின்றன. அவைகளை எடுத்துச் சரிசெய்து கொண்டு விரைகிறார்கள் தேவர்கள்! இப்படி அருமையானதொரு காட்சியைக் காண்கிறோம். 'கம்ப நாடகம்' காட்டும் சொற்சித்திரம் இவ்விதம் ஓர் அழகுக் காட்சியை மேடை ஏற்றுகிறது. இதோ பாடல்:—

''சித்திரப் பிந்தியில் தேவர் சென்றனர்
இத்துணைத் தாழ்ந்தனம் முனியும் என்றுதம்
முத்தின் ஆரங்களும் முடியும் மாலையும்
உத்தரீயங்களும் சரிய ஓடுவார்.''

சுந்தரகாண்டத்தில் ஊர்தேடு படலத்தில் கம்பன் சித்திரிக்கும் எழிற்காட்சியை மேலே கண்டோம்.

பொருள் தொடர்நிலைக் கவிதைகளில் காப்பிய மரபிற் கேற்ப இலக்கியம் செய்த கம்பனது இராமாயணத்தில் நாடக இயல்புகள் நிறைய மிளிர்வதைக் கற்றவர் உணர்வர். பெருங் காப்பியங்களும் சிறு காப்பியங்களும் தோன்றிப் பலகிய கால வரம்புக்கு அண்மையிலேயே கம்பனது இராம காதை எழுந்ததால் காப்பியங்களுக்கெல்லாம் சிகரமாக அவன் நூல் அமைந்தது. இந்நூலை ஒருமுறை மேலோட்டமாகப் பயின்றாலே, இது நாடக வழக்கும், இயல்பும் மலிந்து காணப்படும் ஒப்பற்ற காப்பியம் என்பது தெள்ளிதிற் புலப்படும். பாத்திரப் பண்புகளை ஒன்பான்

சுவைகளிற் குழைத்து, உரையாடல் கலவைகளில் தன் காப்பி யத்தைச் சமைத்துள்ள கவிச்சக்கரவர்த்தி எல்லா இடங்களிலும் நாடக மரபை முழுக்க முழுக்கப் பின்பற்றி இருக்கிறுன். காட்சி மாற்றம், உரையாடல் அமைப்பு, பின்னணி நினைவுக் காட்சிகள், வியப்பில் வளரும் கதைமாற்றம் ஆகிய எல்லா நாடக உத்தி களையும் இக்காப்பியம் நெடுக நம்மால் காணமுடிகிறது. எந்தப் படலத்தையும் சிறு நாடக வடிவில் அமைக்க இடம் தரும் அள வுக்கு அதன் அமைப்பு விளங்குவதைக் காண்கிறேம். கம்பனது நூல் காப்பியம் மட்டுமன்று; நாடக இயல்புகள் நிரம்பப் பெற்ற இலக்கியம் ஆகும். 'காப்பிய நாடகம்' என்னும் சொற்றெட ரால் சுட்டும் தகுதிபெறும் பேரிலக்கியம் அது. நாடக இலக்கணத் திற்கேற்ற அங்கம், களம், முதலிய புற உறுப்புகள் வெளிப் படை யாக இல்லை என்கிற குறை தவிர, மற்றைய உரையாடும் பான்மை யோ காட்சி, பாத்திர வெளியீடுகளோ, நாடக இயல்புகள் மலிந் தவையாய் உள்ள நிறைவு பெற்றவை. காப்பிய இலக்கணங்கள் முழுவதும் பொருந்தி அமைதல் போலேயே, நாடக இயல்புகள் பலவும் இதன்கண் பொருந்தி அமைந்திருப்பதைக் காண்கிறேம். எனவே தான், 'கம்ப நாடகம்' என்ற சொற்றெடர் நீண்டகால வழக்கில் நிலைபெற்று விட்டது.

கம்பர் தரும் கவிச்சுவை

வித்வான் ஸி. ஜெகந்நாதாச்சாரியர்
விவேகானந்தர் கல்லூரி, மயிலை

கம்பராமாயணத்திற் பயிலும் சுவைகளில் சிலவற்றை ஈண்டு எடுத்துக்காட்டி இன்புறுதலே இச்சிறு கட்டுரையின் சீரிய நோக்கமாகும். சுவை என்பது ஒன்பது வகைப்படும். அவை—நகை, அவலம், இழிப்பு, வியப்பு, அச்சம், வீரம், வெகுளி, உவகை, சமனிலை—என்பன. இவை நவரசம் எனவும் படும். இவற்றுள் இறுதியிலுள்ள சமனிலையென்பது—சமமாயிருக்கும் நிலை; அதாவது, துன்பம் வரும்போது மனம் ஒடுங்காமலும் இன்பம் வரும்போது மனம் மகிழாமலும் இருக்கின்ற மேலான நிலை. உலக மக்களிடை இஃது பெரும்பாலும் காணப்படுதல் அரிதாகலின், முதல் எட்டுச் சுவைகளே பெரும்பாலும் தமிழிலக்கியங்களிலே பயின்று வரும். அவற்றுள், வீரியம், உவகை, வெகுளி, அவலம், நகை என்ற ஐந்து சுவைகளை மட்டும் இக்கட்டுரையில் கம்பராமாயணப் பாடல்களின் மூலம் சுவைப்பாம்.

வீரச்சுவை:—இரணியன் வதைப்படலத்து இச்சுவை செவ்வன் அமைக்கப்பட்டுள்ளது. தூணிலிருந்தும் வெளிப்பட்ட நரசிங்கப்பிரான் அரக்கர் கூட்டத்தையெல்லாம் இமைப்பளவிற் கொன்று குவித்து நின்றுஆரவாரஞ்செய்த நிலைகண்ட பிரகலாதன், தந்தையை நோக்கி "இன்னமும் நீர், இவன் பரம் பொருள் என்று உணர்ந்திலீர் போலும்: இவனை வணங்குவீர்: நும் அற்பச் செயல்களைப் பொறுப்பன்'' என்றபோது, இரணியன் வீரத்துடன் வெகுண்டு 'யாரையடா வணங்கச் சொன்னுய்: பயலே' பார்; "இந்தச் சிங்கத்தின் தாளொடு தோளும் துண்டு துண்டாக்கி, நின்னையும் துணித்து, அதன்பின் உங்களைத் துணிப்பதற்குக் கருவியா யமைந்த இந்த வாளினைத் தொழுவதல்லால், வணங்குதலென்பது மகளிருடல் காலத்திலேயும் என் திறத்து இல்லையடா'' என்று வீரந்தோன்றப் பேசிச் சிரித்தான்.

> "கேளிது நீயுங் காணக்கிளர்ந்த கோ ளரியின் கேழில்
> தோளொடு தாளும் நீக்கி நின்னையுந் துணித்துப் பின்னென்
> வாளினைத் தொழுவ தல்லால் வணங்குதல் மகளி ருடல்
> நாளினு முளதோ வென்னு அண்டங்கள் நடுங்க நக்கான்''.

ஈண்டு, அகப்பொருளிலக்கணத்தின்படி, ஒரு அருமையான விடயம் உணரவேண்டுவது: கணவன் மனேவியை வணங்குதல் தவருயினும், மனேவிக்குத் தன் கணவனிடத்து ஊடல் (அதாவது, அன்பு முதிர்ச்சியாலே ஏற்படக்கூடிய சிறு கோபம்) நேருமாயின், அஞ்ஞான்று, அக்கோபத்தைத் தணிப்பதற்குப் பலவகையாக முயன்று பார்த்தும் முடியாமற்போனுல், கடைசியுபாயமாக, ''யான் செய்தது தவறு என்று அவள் பாதத்தில் வீழ்ந்து வணங்கலாம்'' என்பது, இங்கு இரணியன் சொல்லுகிருன்—''அடே! பயலே! ஊடற் காலத்திலே மகளிரை வணங்கலாம் என்று கூறியிருக்கும்போதுகூட, நான் தலே வணங்கினவனல்லேன்; அப்படியிருப்ப, இந்தச் சிங்கத்தையா வணங்குவேன். அதனேக்கொன்று துணித்த இந்த வாளாயுதத்துக்கு வணக்கஞ் செய்வேன்'' என்று, இந்த விடத்து வீரத்தின் சிகரத்தைக் கம்பன் எட்டிப்பிடித்துக் காட்டுகின்முன். இது வீரச்சுவைக்கு ஓர் உதாரணம். இங்ஙன் பல.

இனி, உவகைச் சுவை:—மிதிலேக் காட்சிப் படலத்தில், சனகனது அரண்மனே மிதிலேச் சூழ்ந்துள்ள அகழிக்கு முன்னருள்ள பொழிலொன்றை இராமன் இலக்குவன் விசுவாமித்திரன் மூவரு சார்ந்தனர். அப்பொழிலின் தன்மையைக் கம்பர் தீட்டுந்திறம் உவகை தருவது. அக்கவி பின்வருமாறு:—

> ''பாகு ஒக்கும்சொல் பைங்கிளியோடும் பலபேசி
> மாகத்து உம்பர் மங்கையர் நாண மலர்கொய்யும்
> தோகைக் கொம்பின் அன்னவர்க்கு அன்னம் நடை
> தோற்றுப்
> போகக்கண்டு வண்டினம் ஆர்க்கும் பொழில் கண்டார்''.

(இதன் பொருள்):—பொழிலிலுள்ள இளங்கிள்ளேகள் ஆங்கு மலர் கொய்யும் மாதர்களிடம் இன்சொற் பயில வருகின்றனவாம்: அப்போது, அவர்கள் அக்கிளிகளுடன் பேசுகின்றனராம் என்பது முதலடியில் உணர வேண்டுவது. இரண்டாமடியில், தெய்வப் பெண்களே இம்மங்கையரது வடிவழகுக்குத் தோற்று வெட்கித் தலே குனிகின்றனரே! அம்மட்டோ! பூப்பறிக்கும்போது அவரிடை காணும் அழகே ஓர் தனியழகு என்பது ''நாண மலர் கொய்யும்'' என்ற சொல்லாற்றலால் பெறப்படுவதன்றே! இனி, மூன்ருமடியில், மலர் கொய்யும் மகளிரைத் தோகைக் கொம்பின் அன்னவர் என உவமிக்கின்ருர் கவியரசர். அதாவது, இம்மகளிர், சாயலில் மயிலினேயும் மெல்லிய உருவத்தில் பூங்கொம்பினேயும் போன்றவர்களென்பது. கடைசியடியால், இம்மகளிரின் நடைக்கு அன்னம் தோற்றுப்போனதற்காக வண்டுகள் ஆரவாரித்தன என்பது பெறப்படும். இந்நடைப் போட்டியில் வண்டுகள் நடுநிலேயாளர்

போலும்! உயர்ந்தவர் வெல்லவும் இழிந்தவர் தோற்கவும் கண்ட நடுநிலையாளர் வென்றவர்க்கு மகிழ்ச்சியும் அதன்மூலம் தோற்றவர்க்கு இகழ்ச்சியும் உண்டாகும்படி ஆரவாரஞ் செய்தல் இயல்பன்றே. எனவே, இப்பாடல் உவகைச் சுவைக்கு ஓர் உதாரணம். இங்ஙன் பல.

இனி, வெகுளிச்சுவை:—விசுவாமித்திரன், தாடகை முதலியோரைக் கொல்லுமாறு இராமனைத் தன்னுடன் அனுப்ப வேண்டியபோது, தசரதன், முனிவனை நோக்கி, ''இராமன் சிறுவன்; படைக்கலம் எடுக்கத் தெரியாதவன்; அந்த அரக்கியோ கொடுமை மிக்கவள்; அரக்கரோ கொடியவர்; ஆதலால், நான் வந்து வேள்வியை முற்றுவிக்கிறேன்'' என்றபோது முனிவனுக்குக் கோபம் வந்துவிட்டது. இந்த வெகுளிச்சுவைப் பாட்டுக்கு ஈடே கிடையாது. பாடலைக் கீழ்க்கொடுக்கின்றேன்:—

''என்றனன்; என்றலும் முனிவொடு எழுந்தனன்
மண்படைத்த முனி இறுதிக்காலம்
அன்றுஎன ஆம்என இமையோர் அயிர்த்தனர்
மேல்வெயில் கரந்தது அங்கும் இங்கும்
நின்றனவும் திரிந்தன மீநிவந்த கொழுங்கடைப்
புருவம் நெற்றி முற்றச்
சென்றன வந்தது நகையும் சிவந்தனகண்
இருண்டன போய்த் திசைக ளெல்லாம்''.

(இதன் பொருள்) 'யான் வருகிறேன்' என்று தசரதன் சொன்னவுடனே கோபத்தோடு விசுவாமித்திரன் எழுந்தனன். விசுவாமித்திரனே, திரிசங்குக்காகப் புதியதோருலகம் சிருட்டித்தவன். யுகாந்த காலம் வரவில்லையோ, வந்துவிட்டதோ என்று தேவர்கள் சந்தேகித்தனர். மேலே சூரியன் கோபாக்கினியாலே ஒளிமழுங்கிப்போனான். இங்கும் அங்கும் எல்லாவிடங்களிலும் நிலைத்துநின்ற பொருள்களும் திரிய ஆரம்பித்தன. புருவம் நெற்றிக்குமேல் வரையில் நெரித்துக் கோபத்தாலே சென்றது. கோபச் சிரிப்பு வந்தது; கண் சிவந்தன; திசையெல்லாம் இருண்டன. இங்கு வந்துள்ள (1) அன்றுஎன ஆம்என (2) அங்கும் இங்கும் (3) நின்றனவும் திரிந்தன (4) சென்றன வந்தது (5) சிவந்தன இருண்டன என்ற முரண்கள் பாடலுக்கு விறுவிறுப்பையீந்து வெகுளியைக் கக்குகின்றன. இது, வெகுளிச்சுவைக்கு ஓர் உதாரணம். இங்ஙன் பல.

இனி, அவலச்சுவை:—இராவணன் சீதையைத் தேரில் தூக்கிச் செல்லும்போது அவள் கதறுகிறாள். அவள் கதறியவற்றை ஆரணிய காண்டம், சடாயு உயிர்நீத்த படலச் செய்யுட்கள் 76

முதல் 81 வரையுள்ளவற்றில் காணலாம். கீழ் ஒரு சில செய்யுட்கள் காட்டுகின்றேன்:—

''விடுதே ரெனவெங் கனல்வெந் தழியுங்
கொடிபோற் புரள்வாள் குலைவா னயர்வாள்
துடியா விழுவாள் துயரா லெழுவாள்
கடிதா வறனே யிதுகா வெனுமால்''.

(இதன் பொருள்) 'தேரை விடு' என்று இராவணன் சாரதியை நோக்கிச் சொன்னவுடனே தீயில் விழுந்த கொடிபோலத் துவண்டு புரண்டு குலைந்து, அயர்ந்து, துடித்து, விழுந்து, துயரால் மீள எழுந்து, ஏ! அறனே—தரும தேவதையே! கடிது ஆகா—சீக்கிரமாக என்னைக் காப்பாய்—எனக் கதறுவாள்.

''மலையே மரனே மயிலே குயிலே
கலையே பிணையே களிறே பிடியே
நிலையா வுயிரே நிலைநே டினர்போய்
உலையா வலியா ருழைநீ ருரையீர்''.

(இதன் பொருள்) கலை—ஆண்மான். பிணை—பெண் மான். பிடி—பெண் யானை. நிலையாவுயிர்—நிலைகுலைந்தோடும் உயிர். மலையே! . . . . உயிரே! என இவற்றை விளித்து, நிலை—என் கணவனிருக்கும் இடத்தை, நேடினர்போய்—நீங்கள் தேடிப்போய், உலையா வலியார் உழை—தொலையாத பெருவலி படைத்த இராமலக்குமணரிடத்தில், நீர்—நீங்கள், உரையீர்—என் துயர நிலையைச் சொல்லுங்கள்—எனக் கதறுவாள்.

''கோதா வரியே குளிர்வாய் குழைவாய்
மாதா வனையாய் மனனே தெளிவாய்
ஓதா துணர்வா ருழையோ டினைபோய்
நீதான் வினையேன் நிலைசொல் லலையோ''.

(இதன் பொருள்) என் தாயைப்போல உள்ள கோதாவரியே! நீ குழைந்து அகம் தெளிந்து துயரக்குறியோடு ஓடினல் போதும். அவர் என் துன்பத்தைத் தெரிந்துகொள்வார். ஏனெனில், அவர் ''ஓதாது உணர்வார்''. இங்கிதஜ்ஞாஸ்து கோஸலா: அவர் சர்வஜ்ஞர்: நீ குழைந்து காட்டித் துன்பத்தோடு ஓடுவதுபோல் ஓடி என்நிலையை உணர்த்தக்கூடாதா? எனக் கதறுவாள். இங்ஙன், அவலச்சுவைக்கு உதாரணம் கண்டோம். இங்ஙன் பல.

இனி, நகைச்சுவை:—சூர்ப்பணகை மூக்கு அறுபட்டு இரத்தம் ஒழுகப் பேசும் பேச்சு நகை விளைப்பது. இராமனிடத்தில் காதல் விஞ்சிக் கிடப்பதால் அவனை நோக்கி, இரத்தம் பெருகும் அவள், ''போக்கினீர் என் நாசி போய்த்துளன்?'' என்கிறாள்.

(இதன் பொருள்) என் நாசி—என் மூக்கை, போக்கினீர்—அறுத்தீர்; அதனுல் போய்த்துளன்—என்ன போய்விட்டது; ஒன்றுமில்லை; காமப்பேச்சுக்கு இது சிறந்த எடுத்துக்காட்டு. மேலும் அவள் சொல்கிருள்:—'நீங்கள் என் மூக்கைச் சேதப்படுத்தியதற்குக் காரணம் தெரியும்.' ''மேக்குயரும் நெடுமூக்கு மடந்தையர்க்கு மிகையன்றே'': மூக்கு மேடாகவுயர்ந்து மிகவும் நீளமாயிருத்தல் மகளிரிலக்கணத்திற்குக் குறைவன்றே! அதனுல் தானே கொஞ்சம் அறுத்துவிட்டீர்; இதனுல் என்ன பிரமாதம்''; இங்கு நகைச்சுவை தெளிவு. மற்றும் அவள் கூறுகிருள்:—''நீங்கள் என்னை அங்கபங்கம் பண்ணக் காரணம் எனக்குத் தெரியும்; நான் மிகவும் பேரழகு படைத்தவளாதலின் என்னை வேறு யாராவது ஒரு ஆடவர் அழைத்துக்கொண்டு போய்விட்டால் என் செய்வது என்ற கருத்தினுலும், சிறிது அங்கபங்கஞ் செய்துவிட்டால் நம் பக்கத்தைவிட்டுப் பிரிந்தே செல்லமாட்டாள் என்ற கருத்தினுலும் அன்றே நீவிர் என்னை மூக்கறுத்தது!'' என்கிருள். கழிபெருங் காமத்திற் பிறந்த நகைச்சுவைக்கு இதனைக் காட்டிலும் சிறந்த உதாரணமொன்றில்லை.

இதுகாறும் கூறியவாற்ருன், ''கம்பநாடர் கவிதையைப் போல் கற்ருேர்க் கிதயம் களியாதே'' என்ற பொன் மொழியின் உண்மை புலப்படுகின்றது.

''அம்பரா வணிசடை யரன யன்முதல்
உம்பரான் முனிவரால் யோக ராலுயர்
இம்பராற் பிணிக்கரு மிராம வேழஞ்சேர்
கம்பராம் புலவரைக் கருத்தி ருத்துவாம்''.

இதிகாசப் பெண்மணிகள்

(பேராசிரியர் வித்வான் C. ஜகந்நாதாச்சாரியார், M.A., L.T.)

[செந்தமிழ் ஆங்கிலம் இரண்டிலும் புலமையும், வைணவ நூற் பயிற்சியும், சீர்பெறும் கட்டுரை வரையும் ஆற்றலும், நயத்தகும் நாநலமும் படைத்த இக்கட்டுரையாசிரியர் தமது திறனையெல்லாம் இதிற் பெய்து வைத்துள்ளார். வைணவ குரவர் ராமாயணத்தைத் துருவி யாராய்ந்து கூறியுள்ள சுவையார்ந்த ஆழ்ந்த கருத்துகளைக் கவியமுதோடு சேர்த்துச் சிந்தைக்கு இனிக்கும் வகையில் ஒரு நல்விருந்தினை வாசகர்கட்கு ஊட்டு கிறார். ஆசிரியர், ரா. வி.]

நம் பரதகண்டத்தில் தொன்று தொட்டு நிலவிவரும் தலைசிறந்த இதிகாசங்களான ஸ்ரீமத் இராமாயணம், மஹா பாரதம், இரண்டினுள்ளும் வரும் பாத்திரங்களுக்குள் பெண்மணி களாகத் திகழ்ந்த சீர்சான்ற சிலராவார்: சீதை, மண்டோதரி, சபரி, திரௌபதி எனும் நால்வர். சிறையிருந்து ஏற்றம்பெற்ற சீதையாம் செல்வியே, அதிகற்பினர் தம்மை எண்ணில் அணிவிரல் முடக்கவொட்டாது இலங்குபவள். 'சீதாதேவி தன் காலுக்கு நிகரோ பெண்கள்' என்றும், 'அவளுக்கு அவளே சோடு' என்றும் சூர்ப்பணகையாலும், 'தன்னலது இல்லைத் தன்னை ஒப்பு' என்று அனுமனாலும் புகழப்பட்டவள். வணங்கலில்லாத அரக்கனாகிய இராவணனுக்கு மனைவியான மண்டோதரி கற்பினுக்கு அணி யாய்ப் பொற்பினுக்கு இடனாய்த் தத்துவ ஞானம் தலையெடுத்து நின்றவள். பகவத் அனுக்ரஹம் பெறக் காத்திருந்து குருசிசுருஷை யின் மூலம் நோற்றுத் துறக்கம் புகுந்த சபரி தாம் அளித்த பக்திச் சுவைக் கனிகளை இராமபிரானும் மகிழ்ந்து ஏற்றருளும் தூய்மை வாய்ந்தவள். மஹாபாரதத்தில் திகழும் பெண் திலகமாகிய திரௌபதி பைவரும் தலைகள் ஐந்து படைத்த பன்னகமே போன்ற ஐவருக்கும் உரிமைச் சுற்றமாகத் திகழ்ந்து, கற்பும் கோவிந்த நாமப் பிரபாவமும் இன்னவெனக் காட்டிய பெருமையுற்றவள். இந்நால்வரையும் பற்றிச் சுருங்க எழுதுவோம்.

சீதாதேவி: இவள் 'மூலமும் நடுவுமீறும் இல்லதோர் மும்மைத்தாய, காலமுங் கணக்கும் நீத்த காரணன் கைவிலேந்திச்,

சூலமுந் திகிரி சங்குங் கரகமுந் துறந்து தொல்லை, ஆலமும் மலரும், வெள்ளிப்பொருப்பும்விட்டு அயோத்தி வந்தா'னுகிய தேவதேவ னின் திவ்யமஹிஷியாவாள். தன்னைச் 'சீதைநாயகன்' எனக் கொண்டாடும் வண்ணம் பரம்பொருள் இராமனுகத் திருவவ தரித்தானென்னில், இவள் பெருமை அளவிட்டுப் பேசவொண்ணு மதோ? பிரஜை கிணற்றிலே விழுந்தால் ஒக்கக் குதித்தெடுக்கும் மாதவைப்போல நாம் விழுந்தாலும் இச்சமுசாரத்திலே தானும் ஒக்கவந்து பிறந்து, இவர்கள் பட்ட துன்பங்களைத் தானும்பட்டு ரக்ஷித்த வாத்ஸல்யத்துக்கும் தயைக்கும் ஒரு நிகருண்டோ? மற்றும், தேவமாதர் சிறையை விடுவிக்கைக்காகத்தானே சிறை புக்கிருந்த செயல் தன் அநுக்ரஹத்தாலே பரரக்ஷணர்த்தமாகச் செய்த கருணையின் காரியம் என்றன்றே பெரியோர் உவந்து போருவர். ''தனிச்சிறையில் விளப்புற்ற கிளிமொழியாள்'' என்ருர் நம்மாழ்வாரும். தனிச்சிறையாவது—ஒப்பற்ற சிறை; சிறைக்குத் தனிமையாவது—அநுக்ரஹநிபந்தநமாக (அருள்வச மாக) தானே வலியப்புகுகை; கர்மநிபந்தநமாகிலன்றே (கரும வசப்பட்டாலன்றே) சிறைக்குத் தண்மை ஏற்படுவது! 'எரியே! அவனைச் சுடல்' என்றவளுக்கு, 'கூற்றே! இவனுயிர் கொடுபோ' எனல் ஒரு பெருஞ்செயலோ? அஞ்ஞான்று வீரன் வில் மாசுணும் என்றன்றே அச்சொற்றலை வீசினுள்! இது நிற்க.

இம்மரதரசியின் அவதாரத்தைப் பற்றிப் பேசவந்த கம்பரும் ''உழுகின்ற கொழுமுகத்தின் உதிக்கின்ற கதிரினொளி, பொழி கின்ற புவிமடந்தை யுரு வெளிப்பட்டெனப்புணரி, எழுகின்ற தெள்ளமுதோடெழுந்தவளும் இழித்தொதுங்கித், தொழுகின்ற நன்னலத்துப் பெண்ணரசி தோன்றினுள்'' என்று பெருமைக் குணங்கட்கு அரசியாக்கினர். இவளை ''குணங்களையென் கூறு வது கொம்பினைச் சேர்ந்து அவையுய்யப், பிணங்குவன அழகு இவளைத் தவஞ்செய்து பெற்றதுகாண், கனங்குழையாள் தோன்றி பின் கதிர்வானிற் கங்கையெனும், அணங்கிழியப் பொலிவிழந்த வாறெத்தார் வேறுள்ளார்'' என்றன்றே அவர் பேச்சு! 'கதிர் வானிற் கங்கையெனும் அணங்கிழிய' என்றதாலே சீதை ஓர் அவதார மூர்த்தி என்றதையும் காட்டுகிருர். 'பொன்னினொளி பூவின் வெறி சாந்து பொதிசீதம், மின்னினிழல் அன்னவள்தன் மேனியொளிமான' என்று கொண்டாடும்படியன்றே அவள் இலங்குவது. தாமரையிருந்த தையல் சேடியாந்தரமுமல்லள்; இங்ஙனம், வையகமடந்தை மார்க்கும் நாகர் கோதையர்க்கும் வானத்தெய்வ மங்கையர்க்குமெல்லாந் திலதத்தைச் சனகமகா ராசன் ''இயம் ஸீதா மம ஸுதா ஸஹதர்ம சரீதவ ப்ரதீச்ச சைநாம் பத்ரம்தே பாணிம் க்ருஹ்ணீஷ்வ பாணிநா'' என்று பாணிக்ரஹணம் செய்து கொடுத்ததும் அனைவரும் அறிவர். இப்

பெண்ணருங்கலம் தான் பிறந்த குலத்திற்கும் புக்க குலத்திற்கும் கணவனது சிறப்பிற்கும் ஏற்பச் சிறந்த வொழுக்கமுடையளா யிருந்தாள் என்பதை ''உன்பெருந் தேவியென்னும் உரிமைக்கும் உன்னைப்பெற்ற, மன்பெரு மருகியென்னும் வாய்மைக்கும் மிதிலை மன்னன், தன்பெருந் தனயை என்னுந் தகைமைக்குந் தலைமை சான்ருள், என்பெருந் தெய்வம் ஐயா!'' என்ற அநுமன் கூற்ருலும் அறியலாம். மேலும் உயர்குடிப் பிறப்பு, பொறுமை, கற்புநிலை யென்பவற்றின் ஸ்வரூபமாய்ச் சீதா பிராட்டியுள்ளா ளென்பதும், இவளொருத்தியின் கற்புநிலையினுல் மண்ணுலக மாதரேயன்றி, இந்திராணி உமை இலக்குமி போன்ற வானவ மாதரும் தத்தம் கணவர் .தாம்தாம் தலைமேற்கொண்டு கொண் டாடத்தக்க சிறப்பையுற்றனரென்பதும் அனுமன் கூற்ருலறிய லாகும். எனவே, ஸ்ரீராமாயணத்தால் 'சிறையிருந்தவள் ஏற்றம் சொல்லுகிறது' என்ருர் உலகாரியர்; சிறையிருந்தவள் ஏற்றத் தால் மாதர் குலத்துக்கு ஏற்றம் சொல்லுகிருன் சொல்லின் செல்வன். ஏனெனில் சீதையின் கற்பின் திறத்தைக் கண்கூடாகக் கண்டு உய்ந்தவனன்ருே அனுமன்! அரக்கர்கள் அனுமன் வாலில் கிழிசுற்றி முற்றும் இழுதுஎண்ணெய் தோய்த்துக் காந்துகடுந் தீக் கொளுவிய காலை, அவ்வெந்தீயானது அனுமனது வெற்பினு லியன்றதன்ன மேனியை விழுங்கி நிற்பினும் சுடாது நின்றது; அச் செயலை நினைவில் நோக்கிய அனுமனும், ''இஃது என்னே! இவ் அனலம் குளிர்ந்தது சனகன்பாவை கற்பினுலியன்றதாகும்'' என்று ஊகித்துப் பெருங்களிப்புடையனுயினுன்.

அன்றியும், மீட்சிப்படலத்துச் சீதை தீக்குளித்தெழுந்த வளவில், அக்னிதேவன் இராமனை நோக்கி, ''அங்கியான் என்னை யிவ்வன்னை கற்பெனும், பொங்குவெந் தீச்சுடப் பொறுக்கிலாமை யால், இங்கணைந்தேன் உறும் இயற்கை நோக்கியும், சங்கியா நிற்றியோ எவர்க்குஞ் சான்றுளாய்'' என்று கூறியிருப்பது சீதா தேவியின் அசைவில் கற்பின் ஓங்குநிலையைத் தெரிப்பதாகும். (''பாய்ந்தனள் பாய்தலும் பாலின் பஞ்செனத், தீந்ததவ்வெரி அவள் கற்பின் தீயினுல்'' என்றதும் நோக்குக.)

இனி, சீதையின் கற்புக்கு மற்ருேர் உதாரணமும் காட்டு வேன். அத்திரி பகவான் ஆச்ரமத்திற்கு இராமன் எழுந்தருளிய போது அம்மஹர்ஷியின் பத்தினி அநஸூயையைச் சீதாபிராட்டி வணங்கி நின்றவளவிலே அவள் பிராட்டியைப் பார்த்து, ''உற்ருர் உறவினர்களையும் அபிமாநத்தையும், செல்வத்தையும் விட்டுப் பெருமாள் பின்னே காட்டிலே போந்த இது, தெய்வ யோகத் தாலே உமக்கு நன்ருகக் கூடிற்று; நகரத்தில் வசிப்பவனுனலும், காட்டில் வசிப்பவனுனலும், நல்லவனுனலும், தீயவனுனலும்,

ஸ்திரீகளுக்குத் தெய்வம் கொழுநனேகாண்; நீர் இப்படியே எப்போதும் பெருமாள் விஷயமாக நடந்துகொள்ளவேண்டும்'' என்று கூற, அதனைக்கேட்ட சீதை, நாணத்தால் தலைகவிழ்ந்து, ''எனக்கு பெருமாள் பக்கலிலுள்ள பாசத்தொடர்பு இயல்பாக [ஸ்வத:] உண்டாயிருப்பதொன்று; அங்ஙனிருக்கச் செய்தே, அவர் தாம் குணாதிகராயிருப்பதாலே, என்னுடைய பாசத் தொடர்பு அவர் மாட்டுள்ள குணத்தினடியாகத் தோன்றியதொன்று என்று நினைத்திருப்பர்கள் நாட்டார்கள்; குணத்திற்கு உறையுளாய் இருக்கும் அவரோடு குணங்களைப் பிரித்துக் காட்ட வொண்ணாமையாலே, நான் அவர் பக்கலிருக்கும் இருப்பை நாட்டார்க்கு அறிவிக்க வொண்ணாது இருக்கிறேன். அவர் குணஹீநரும் விகாரரூபமுடையவரும் ஆனாலுங்கூட, அக்காலத்தும் நான் அவர் பக்கல் இப்படியே நடந்துகொள்வேன்'' என்று கூறினாள். இவள் பேச்சின் திறம் இருந்தவாறு என்னே!

களவியல் அரக்கன் பின்பு தோன்றிய வீடணனும் ''கோநகர் முழுவதும் நினது கொற்றமும், சானகியெனும் பெயர் உலகின் தம்மனை, யானவள் கற்பினால் வெந்ததல்லதோர், வானரஞ்சுட்டதென்றுணர்தல் மாட்சியோ'' என்று இராவணனுக்கு எடுத்துச் சொன்னதும்; மற்றொரு தம்பியாகிய கும்பகருணன் ''திட்டியின் விட மன்ன கற்பின் செல்வியை விட்டிலையோ இது விதியின் வன்மையே'' என்று கூறியதும், அவள் கற்பின்நிலை அரக்கரும் கொண்டாடும் தன்மைத்தாதல் பெறப்படும். கற்பிற் சிறந்த மண்டோதரியும், ''காந்தையருக்கு அணியனைய சானகியார் பேரழகும் அவர்தம் கற்பும்'' என்று கொண்டாடுகிறாள். பாம்பின் கால் பாம்பறியுமன்றோ!

இனி, சீதையின் கருணையின் திறத்தைச் சுருங்கக் கூறுவோம். பிராட்டி தன்னுயிரை விடுவதாகக் கருதுகையில், திரிசடை தன் கனா நிகழ்ச்சியைக் கூறித்தேற்ற, அதுகேட்ட காவலாளியரான அரக்கியர் அஞ்சிப் பிராட்டியைச் சரணம்புக, ''பவேயம் சரணம் ஹி வ:'' [உங்களுக்கு நான் ரக்ஷகையாக ஆகிறேன்] என்று பிராட்டி அபயப்ரதானம் பண்ணினாள்; அஃது வாய்ச்சொல் மாத்திரமே போகாதபடி, செயலிலும் காட்டினாள். இராவணனை வதைத்த பின்னர், தனக்குச் சோபநஞ் சொல்லவந்த அநுமன் சீதையை நோக்கி, ''உரையலா வுரை உன்னை யுரைத்து, விரையவோடி மேல் விழுந்து உன்னை விழுங்குவோம்'' என்ற இக்கொடிய அரக்கியரது வரைசெய் மேனியை வள்ளுகிராற் பிளந்து, அவர் குடல் குறைத்து உடன் முருக்கியிட்டு மறலிக்கு இரை செய்வேன்'' என்று கொதித்து அநுமதிதர வேண்டியபோது, அன்னாள் அவன் முகநோக்கி, 'என்ன தீமை இவர் இழைத்தார்? தலைவன் கட்டளைப்

படியே அடியார் தொழில் செய்தல் முறையே யன்றோ! அன்றியும், யானிழைத்த வினையின் இவ்விடர்தான் அடுத்தது; இவர்களை கூனியிற் கொடியராவரோ? ஆதலின், இவர்க்கு நோய் செயேல்' என்று வரம்வேண்டி, ''பாபா நாம்வா ஸுபாநாம்வா வதார் ஹாணும் ப்ல வங்கம, கார்யம் கருணமார்யேண கஸ்சிந் நாப ராத்யதி'' [**இதன் பொருள்:—**வாநரச்ரேஷ்டனே! உன் அபிப்பிரா யப்படி பாபம் செய்தவர்களாயும் என் அபிப்பிராயப்படி புண்யம் செய்தவர்களாயும் கொல்லத்தக்கவர்களாயுமிருக்கிற ராக்ஷஸிகள் விஷயத்தில், பெரியவரான உம்மாலே க்ருபை செய்யவேணும்; (ஏனெனில்) அபராதஞ் செய்யாதவர்கள் ஒருவர்கூடவில்லை] என்று அநுமனும் இரங்கியல்லது நிற்கவொண்ணுதபடி உபதேசித் தாளன்றோ! இக்கருணையின் திறத்தை என்னென்பது! ''மாதர் மைதிலீ! ராக்ஷஸீஸ் த்வயி ததைவார்த்ராபராதாஸ் த்வயா ரக்ஷந்த்யா பவநாத்மஜால் லகுதரா ராமஸ்யம் கோஷ்டீக்ருதா''. [**இதன் பொருள்:—**தாயே! ஓ சீதாப்பிராட்டியே! உன் திறத்து அப்படிப்பட்ட (க்ரூரமான) குற்றங்கள் புரிந்தவண்ணமாயுள்ள அரக்கியரை வாயுபுத்திரனுன அநுமானிடமிருந்து காப்பாற்றுகிற உன்னால் இராமனுடைய கோஷ்டியானது மிகவும் தாழ்வாகப் பண்ணப்பட்டது] என்றல்லவோ பட்டர் ஸ்ரீ ஸூக்தியும். எத் திசையும் திரிந்தோடி யிளைத்த காகசுரனும் 'வித்தகனே இராமா வோ! நின் அபயம்' என்று அழைத்து விழுந்த காலத்து, அதன் தலையை மாறியிட்டுத் திருவடிகளில் சேர்த்துவைத்தாள் சீதா பிராட்டி என்றன்றோ பாத்ம புராணம் கூறுகிறது: [புரத: பதிதம் தேவி தரண்யாம் வாயஸம் ததா, தச்சிர: பாதயோஸ்தஸ்ய யோஜயாமாஸ ஜாநகீ]. இப்படிப்பட்ட கற்பினுக் கரசினைப் பெண் மைக்காப்பினைப் பொற்பினுக்கழகினைப் புகழின் வாழ்க்கையைத் தருமத்தின் வடிவினைப்பற்றிப்பேச ஆயிரம் நாப் படைத்த ஆதி சேடனும் பின்னடைவானென்னில், ஒற்றை நாப்படைத்த சின்னுட் பல்பிணிச் சிற்றறிவினனுகிய அடியேனுல் பேசப்போமோ? ''ஸ்ரீமத் ராமாயணமபி பரம் ப்ராணிதி த்வச் சரித்ரே''— [ஸ்ரீமத் ராமாயணமும் தேவரீர் வைபவத்தைச் சொல்லியே ஜீவியா நின்றது] என்றருளிச் செய்தார் பட்டரும்; எனவே, சீதாதேவியின் சரணகமலங்களைத் தலைக்கணியாக் கொள்வதே நமக்குகந்த செயல் எனத் தலைக்கட்டுவாம்.

மண்டோதரி:—இவள் இராவணனது பட்டமகிஷி; அசுரத் தச்சனுன மயனுக்கு மகள்; (அகலியை, திரௌபதி, சீதை, தாரை, மண்டோதரி எனும்) பஞ்ச கன்னிகைகளுள் ஒருத்தி; அழகிற் சிறந்தவள்; காமன் தன் மலர்ச் சரங்களையிட்டு வைத்துள்ள அம்பறாத்தூணிபோன்ற வடிவமுள்ளனவும் தளிர்போல் மெல்லி யனவுமான பாதங்களையுடையவள்; அத்தகைய கால்களை அரம்பை,

மேனகை, திலோத்தமை, உருப்பசி ஆதிய தேவ மகளிர் பிடிக்கும் பேறுபெற்றவள்; கரும்பையும் சுவை கைப்பித்த சொல்லியராகிய தேவமாதர் சூாமரங்கனியாழின் நரம்பின் இன்னிசை தன்செவிபுக, இனிது துயிலும் பேற்றினள்; உத்தம ஸ்திரீகளுக்குரிய லட்சணங் களிற் சில இவளுடலிற் காணப்பட்டன; இது நிற்ப. தனது மகன் இந்திரசித்தின் இறந்த உடலைக்கொண்டு இராவணன் அரண் மனையிற் புகுதர, மண்டோதரி கருங்குழற் கற்றைப்பாரம் கால் தொடக் கமலப்பூவாற் குரும்பையைப் புடைக்கின்ருள் போற் கைகளான் முலைமேற் கொட்டியும், தலையின்மேல் வைத்த கையி னளாயும் ஓடிவந்து, வேடன் கூர்ங்கணையுயிரைக்கொள்ள மலை யின் மேல் மயில் வீழ்ந்தாலொப்ப மைந்தன் மேல் மறுகி வீழ்ந் தாள்; வீழ்ந்தவள் வாய் திறந்து பலபடி அரற்றலுற்று இறுதியில், ''அஞ்சினேன் அஞ்சினேன் அச்சீதை யென்றமிழ்தில் தோய்த்த, நஞ்சினுல் இலங்கைவேந்து நாளையித்தகையனன்ரே'' என்று தன் கணவனுக்குப் பின்னர் நிகழவிருக்கும் இறப்பினையும் எண்ணி மாழ்கினுள். தன் கணவனை இறையேனும் மறந்துமிலாத நெஞ்சி னளாகிய மண்டோதரி, அவன் இறந்த செய்தியைக் கேட்டுக் கதறியோடி, அவன் கிடக்கும் இடம் சார்ந்து, தரங்கநீர் வேலை யில் தடித்து வீழ்ந்தென அவனது மார்பில் வீழ்ந்து, மரங்களும் மலைகளும் உருக, வாய்திறந்து அழுது அரற்றியவாறு கம்பர் தவிர மற்றெருவர் பேசுந் தரத்ததோ? வெள்ளெருக்கஞ் சடைமுடியான் வெற்பெடுத்த திருமேனி மேலுங் கீழும் எள்ளிடவும் இடமின்றி இராமபாணம் தொளைத்திருப்பது கண்ட மண்டோதரி, இங்ஙன் தொலைப்பட்டிருப்பது, அவ்விராமபாணம் இராவணனுருடைய உயிரிருக்குமிடம் தேடியதனுலாகியதா? அன்றி, புறத்திற் சீதை யைச் சிறைவைத்ததற்குக் காரணம் மனச்சிறையிலுள்ள காத லாதலால், அதனை யொழித்தற்கு அப்பாணம் திரிந்ததனுலாகி யதா? என்று கதறுங்காலத்து நம் உள்ளமே உருகிப் போகிறது. இத்தனை சோகத்துக்கு நடுவே தத்துவஞானம் தலையெடுத்தவ ளாகையாலே அவள் பேசுகின்ற பேச்சைக் கேளுங்கள்:—''ஆரா வமுதாய் அலைகடலிற் கண்வளரும், நாராயண னென்றிருப்பேன் இராமனை நான், ஓராதே கொண்டகன்ருய் உத்தமனுர் தேவி தனைப், பாராயோ நின்னுடைய மார்பகலம் பட்டவெல்லாம்'' தன் கணவனை நிரசிக்கும்படி ஸ்ரீமந் நாராயணனே இங்ஙனம் வந் துள்ளான் என்று இராமனுடைய பரத்வத்தை மண்டோதரி அறுதியிட்டுக் கூறுந்திறம் இன்புறற்பாலது. பின்பு, மண்டோதரி இராவணனுடலைத் தழீஇக்கொண்டே தன்னுயிர்நீப்ப, மகா பதி விரதையான அந்த மண்டோதரியின் செயலைக் கண்டு, வான மங்கையரும் விஞ்சையரும் நாக கன்னியரும் தவமுனிவர் பத்தினி யரும், அருங்கற்புடைமானுடமகளிரும் யாவரும் வழுத்தினர்.

இத்தகைய கற்புக்கரசியாம் மண்டோதரியை நாமும் வழுத்துவ தல்லது வேறு செய்வதென்?

சபரி: இவள் மதங்க முனிவரது ஆச்சிரமத்திலிருந்தவள்; அம்முனிவரது சீடர்களை உபசரித்துவந்த துறவறம்பூண்ட ஒரு தவப்பெண்; இவளைப்பற்றி, ''தாயினும் உயிர்க்கு நல்கும் சபரி'' என்றான் கவந்தனும்; இவள், இராமபிரான் வரப்போவதைத் தனது ஞானக் கண்ணாலுணர்ந்து, அளவில்காலம் அவனையே நினைந்து, நோற்கும் பெற்றியளாகியிருந்து, அப்பிரானுக்கு நிவேதிப்பதற்காக அவ்வாச்சிரமத்திலிருந்த பழங்களைச் சுவைத்தறிந்து, தனது தவ வலிமையாற் கெடாதபடி சேர்த்து வைத்திருந்தாள். இவ்வாறிருப்ப, மதங்க சீடர்கள் இவளை நோக்கி ''லட்சுமணனோடு இராமர் இங்கு வருவார்; அவருக்கு அதிதிபூசை செய்து பிறகு நல்லுலகு அடைவாய்'' என்று கூறிச் சென்றனராக, அவளும் இராமன் வருகையை எதிர்நோக்கிக் கொண்டிருந்தாள். அவ்வாறே, இராமன் எழுந்தருளியபோது அச்சபரி, அவனை அன்பினேத்தி, ஆனந்தக் கண்ணீர் சொரிய நின்று, ''என் மாயப் பாசம் இன்றோடு மாண்டது; வரம்பில் காலம்பூண்ட மாதவத்தின் செல்வம் சிந்தித்து; என் புண்ணியம் பூத்தது; என் பிறவி போயது'' என்று சொல்லித் தான் சேமித்து வைத்திருந்த பழங்களைக் கொண்டு தன் கையாலே அமுது செய்யப் பண்ண, அச்சமயத்தில், இராமபிரான் அருந்தவத்தரசி தன்னை யன்புற நோக்கி, ''எங்கள் வழிநடை வருந்தத்தைத் தீர்த்தாய்; அம்மனே! வாழி'' என்று கூற, பின் சபரி அவர்களுக்குச் சுக்ரீவனுள்ள இடத்திற்குச் செல்லும் வழியெலாம் நினைந்து சொன்னாள். பிறகு, அவள் தான் மெய்வருந்திப் பெற்ற யோகத்தின் பெற்றியாலே தன்னுடல் துறந்து ஒப்பற்ற முத்தியுலகத்தை இனிது சேர்ந்தாள். இது கம்பர் கூறியபடியாகும். இராம லட்சுமணர்க்கு அதிதிபூசை செய்த பின் அக்னியில் உடலைத் துறந்து தன் யோக மகிமையால் நற்கதி பெற்றனள் என்று வான்மீகி கூறுவர். சபரிக்குக் கிடைத்த பாக்கியம் வேறு யாருக்காவது கிடைக்குமோ? ''மாங்கனி தாழையின் காய் வாழையின் கனிகளோடும், ஆங்கனி யாவதே யென்றருந்தி நான் விரும்பிவைத்தேன், பாங்கினியமுது செய்மின்'' என்று அவள் பரிவின் நல்கிய தேங்கனிகளை இனிதினுண்டு திருவுள மகிழ்ந்தான் வீரன் என்றால், அவள் பேறு பெரும்பேறேயாகும். அஃது பற்றியன்றோ ஸ்ரீதியாகையரவர்களும்:—''எந்தநினே வர்ணிந்துனு சபரீ-பாக்யமு'' என்று வாய்வெருவிப்பாடி யுருகினர். இவ்வாறு, வேடுவச்சியாய்ப் பிறந்தும் குரு சுச்ருஷையிலே பழுத்து ஜ்ஞாநாதிகையாய், ''சபர்யா பூஜிதஸ் ஸம்யசி ராமோ தசரதாத்மஜ:'' என்னும் படி திகழ்ந்த சபரியை நிச்சலும் நினைப்பது நன்று என முடிப்பாம்.

இனி **திரௌபதி:**—இவள் பாஞ்சால ராஜன் துருபதன் மகள்; அவ்வரசன் 'அருச்சுனனுக்கு மணஞ்செய்து கொடுத்தற் பொருட்டு ஒரு புத்திரி வேண்டும்' என்று யாசன், உபயாசன் என்னும் முனிவரிடம் வரம்வேண்ட, அப்படியே அவர்களும் அநுக்ரஹித்துப் புத்திரகாம யாகம் செய்வித்ததால் அனலினின்று தோன்றியவள்; எனவே, வரத்தினுற் பிறந்து குற்றமொன்று மின்றிச் சுடச்சுட ஒளிரும் பொன்னேபோல் இவள் தோற்ற மென்பது நினைவிலிருத்தற்குரியது; இவள் தோன்றிய காலத்து, தெய்வத் தன்மையுள்ள ஆகாயவாணி ''இவள் பாண்டவரைவர்க் கும் உரியளாய்ப் பல அரசர் இறத்தற்கு மூலமாவாள்'' என்று விண்ணில் உரைத்தது; எனவே, இவள் ஐவர்க்குரிமை பூண்டு நின்றது தெய்வ சம்மதம் என்பது தெளிவாயிற்று; ''ஆதியில் குந்தி மைந்தர் ஐவர்க்கும் உரியளாமென்று ஓதிய விதியினுல் நெஞ்சுலப்புரு உவகை கூர்வாள்'' என்ருர் வில்லியும். அன்றியும், அருச்சுனன் இலக்கை எய்து, திரௌபதியைப் பெற, பாண்டவர் குந்தியிடம் சென்று, 'இன்று ஒரு பிச்சை பெற்ருேம்' என்ன, அவளும் எண்ணுது, 'மக்காள்! சேரநீர் அருந்துமின்' என்று கூற, அவ்வன்னை சொல்லே ஆரணப்படியதாகும் என்று கொண்டும், 'விதி வழியிது' என்று கொண்டும் அவளை ஐவரும் மணம் புரிந்த னர்; மற்றும், தருமன், 'இவளை நாங்கள் ஐவரும் மணப்போம்' என்றபோது, அதற்கு உடன்படாத துருபதனுக்கு, வியாசமஹ ரிஷி வந்து, திரௌபதியின் முற்பிறப்பின் வரலாற்றைக் கூறி அறிவுறுத்தித் தெளிவுறுத்தவே அத்துருபதன், தன் மகளை ஐவர்க்கும் மனமொப்பி மணம் புரிவித்தையும் மறக்கக்கூடாது. மேலும், தருமனை முறைப்படி விவாகம் புரிந்தபின், வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் என்ற நால்வரையும் மணம் புரிதற்கு முன் **ஒவ்வொரு தரமும்** முறையே தீ மூழ்கியெழுந்தாள் என்பதையும் மறக்க முடியாது. (ஒவ்வொருவரையும் மணம் செய் யும்போது கன்னிகையாயிருத்தல் வேண்டுமாதலால், அதன் பொருட்டுத் தீக் குதித்து எழுந்தாள் என்க. இப்படிக்கு ஒரு முறைக்கு நான்கு முறை அக்கினிப்பிரவேசம் செய்து எழுந்த வடமீனிகர் கற்பினுளின் மாசுமறுவற்ற திறன் நம் சிற்றறிவுக் கெட்டுமோ? ஐம்புலன்களைப்போல் ஐவரையும் பதிகளாகப்பெற்ற இத்தகைய பாண்டவர்தம் தேவியார் தம் பாதியுயிர் கொண்டு வர, நீண்ட கருங்குழலை நீசன் கரம்பற்றி முன்னிழுத்துச்சென்று, அறங்கெட்ட அவைதனிலே துகிலுரியத் தொடங்குங்கால், அவள் 'ஆருகியிருதடங்கண் அஞ்சனவெம் புனல் சோர, அளகம் சோர, வேருன துகில் தகைந்த கைசோர, மெய்சோர' நின்று தானெரு கையால் இடுக்குகையன்றிக்கே இரண்டு கையும்விட்டு, ''ஸங்க சக்ர கதா பாணே த்வாரகா நிலயாச்யுத–கோவிந்த புண்டரீ

காக்ஷ ரக்ஷமாம் சரணுகதாம்'' என்று சரணம் புக்கவாறே, உடுத்திருந்த துகில் உரிந்திடவும் மாளாமல் ஒன்றுக்கொன்று ஆங்கு அடுத்த நிறம் பற்பலபெற்று ஆயிரமாயிரங் கோடியாடையாகச் சுரக்கவே, துச்சாதனனும் சலித்திருகை யிளைத்து நின்ருன். இப்படி திரௌபதிக்கு ஆபத்திலே புடவை சுரந்தது திருநாமமிறே; 'மகத்தான ஆபத்து வந்த காலத்தில் பகவான் ஹரி ஸ்மரிக்கத்தக்கவர்' என்று வசிஷ்ட மஹரிஷியிடத்தில் உபதேசம் பெற்றவள் திரௌபதி. மற்றும், பாண்டவர்களையும் நிரஸிக்கப் ப்ராப்தமாயிருக்கச்செய்தே, திரௌபதியின் பொருட்டேதான், அவர்களையும் நிரஸியாது விட்டுக் கண்ணபிரான் தூது சென்று தேருமூர்ந்து கீதாபதேசஞ் செய்து, துரியோதனுதியரை நிரஸித்துப் பஞ்சபாண்டவர்க்கு ராஜ்ய ப்ராப்தியைப் பண்ணினதும் ஆகும். (இதனை, ''தொல்லாண்மைப் பாண்டவர்க்காயத் தூது போய் மீண்டதற்பின், நல்லாயுன் பைங்கூந்தல் நானே முடிக்கின்றேன்'' என்ற வில்லிபாரதத்தாலும், ''பாண்டவர் தம்முடைய பாஞ்சாலி மறுக்கமெல்லாம் ஆண்டு அங்கு நூற்றுவர் தம் பெண்டிர் மேல் வைத்த அப்பன்'' என்ற பெரியாழ்வார் ஸ்ரீஸூக்தியாலும், ''பந்தார் விரலாள் பாஞ்சாலி கூந்தல் முடிக்க பாரதத்துக் கந்தார்களிற்றுக் கழன் மன்னர் கலங்கச் சங்கம் வாய்வைத்தான்'' என்றும், ''சந்தமல் குழலாள் அலக்கண் நூற்றுவர்தம் பெண்டிரும் எய்தி நூலிழப்ப, இந்திரன் சிறுவன் தேர் முன் நின்ருன்'' என்றும் வரும் திருமங்கை மன்னன் திருவாக்காலும் தெற்றென உணரலாகும்.) இவ்வாறு செய்துங்கூட, கண்ணபிரான் திருவுள்ளத்தில் ஒரு குறைமட்டும் நீங்ககில்லாது நிலைத்து நின்றது; அதுதான் யாதெனில், ''அவளுக்கு ஏற்பட்ட மஹத்தான ஆபத்காலத்தில், தான் அவள் பொருட்டு நேரிற் சென்று உதவப் பெறவில்லையே'' என்றது; இப்படி, சர்வலோக சரண்யனையும் தன்மாட்டுக் குறைகொண்டு நெஞ்சு அங்கலாயத்துக்கொள்ளும்படி செய்யுங் குணத்தின் ப்ரபாவத்தை என்னென்பது! இத்தகைய திரௌபதிக்குக் கிராமங்கள் தோறும் கோயில்கள் எடுப்பித்து அவற்றை 'திரௌபதியம்மன் கோயில்' என வழங்கி, அவ்வம்மனுக்கு வந்தனை வழிபாடுகளும் திருவிழாக்களும் கொண்டாடி வருவதை நாம் இன்றும் கண்கூடாகக் காண்கிறோம்.

கல்லானும், கல்வி வல்லானும்

பூவண்ணன்

தாடகை வருகிருள். மாமலை ஒன்று பெயர்ந்து வருவது போல அந்த அரக்கி நடக்கிருள். அவள் கால் நிலத்தில் பதிந்த இடத்திலெல்லாம் பள்ளம் உண்டாகிறது; அங்கே கடல் நீரின் வெள்ளம் பாய்கிறது. அவள் நடக்கிற வேகத்தால் அருகே உள்ள சிறு குன்றுகள் பெயர்ந்து அவள் பின்னே உருண்டு செல்கின்றன. வானேர் இடங்களும், நெடுந்திசையும், ஏழுலகும் எங்கும் அடங்கலும் நடுங்க இடிபோல ஆர்க்கிருள்.

தன்னை அழிக்க வந்துள்ள இராமனை அழிக்கக் கருதி, பால் மதியை விழுங்கும் பாம்பு போன்ற மூவிலைச் சூலத்தை எறிந்தாள் தாடகை. அதைக் கண்ணுற்ற இராமன் ஓர் அம்பு தொடுத்தான். இராமனின் செயலும் அம்பின் செலவும் மனத்தினுல் நினைக்க வொன்ணு விரைவைப் பெற்றன. சூழநின்றவர்கள், இராமன் வில்லை வளைத்ததை, அம்பை இணைத்ததை, அதனைக் குறிபார்த்து இழுத்துச் செலுத்தியதைக் காணவில்லை. ஆனுல் தாடகை எமன் கையிலிருந்து பறித்து எறிந்த சூலம் இராம பாணத்தால் துண்டங்களாகி மண்மீது விழுந்ததைக் கண்டனர்.

மாலும் அக்கணம் வாளியைத் தொட்டதும்,
கோல வில், கால் குனித்ததும், கண்டிலர்;
கால னைப்பறித்து அக் கடியாள் விட்ட
சூலம் அற்றன; துண்டங்கள் கண்டனர்!

(தாடகை வதைப் படலம்—69)

பின்னே மிதிலையில், 'எடுத்தது கண்டனர்; இற்றது கேட்டார்' என்று கம்பன் வர்ணிக்கும் வேகத்தை முன்னே, தாடகை எறிந்த சூலத்தைத் தயரதன் மைந்தன் தகர்த்த செயலிலே கோடி காட்டுகிருன், கம்பன்.

சூலம் துண்டுகளாகி வீழ்ந்ததும் சூழ் இருள் போலும் நிறத்தவளான தாடகை இமைப்பொழுதினில் கடல் தூர்க்கச் செய்வது

போல. ஒரு கல்மாரியைக் காகுத்தன் மீது பொழிந்தாள்; அதை வில் மாரியால் வீரன் விலக்கினுன்.

இதற்கு மேலும் தாடகையின் போர்ச் செயலுக்கு இடந் தருதல் ஏற்றதன்று எனக் கருதிய இராமன் அலி ஒக்கும் நிறத்தினுளின், ஆகத்தை நோக்கி ஓர் அம்பை செலுத்தினுன். அது வேகத்தோடு சென்று அவளை வீழ்த்தியது.

இராமனின் பாணம் வில்லிலிருந்து புறப்பட்டால் வேறெங்கும் நில்லாது செல்லும் விரைவு மிக்கது. இலக்கைத் தாக்கினும் அங்கே தங்காமல் ஊடுருவி வெளியெறும் தகைமைத்து. தாடகையின் நெஞ்சம் வயிரக் குன்றக் கல்லொக்கும் திண்மை பெற்றது. அதனையும் ஓர் கணத்தே துளைத்து வெளிசெல்லும் இராமபாணத்தின் வேகத்துக்குக் கம்பன் ஓர் உவமை கூற விழைகிருன்.

வாயுவேகம், மனுேவேகம் எனவுள்ள பற்பல வேகங்கள் அக் கவிக்கோமான் அறிந்தவையே. ஆனுலும் மாமலை போன்ற அவள் மார்பகத்தைக் கைநொடிப் போதில் கடந்து சென்ற அம்பின் வேகத்துக்கு, ஓர் அரிய உவமை தேடுகின்ருன். அப்போது தான் கல்லாத புல்லன் அவர் கவனத்துக்கு வருகிருன். கல்லாத புல்லனுக்கு, யாவும் கற்ற நல்லோர் கூறும் அறிவுரைகள் ஒரு செவியில் நுழைந்து மறு செவியில் வெளியேறும் வேகத்தை நினைக்கிருர். மூடனுக்குக் கூறிய நல்லுரைகள் அவன் மனத்தே கணநேரமும் நில்லாதும் செல்லும். நல்ல சீடனுக்குக் கூறும் செவ்விய வுரைகள் செவியிலே நுழைந்து சிந்தையிலே தங்கும்!

குருவின் முன்னே சீடன் பணிந்து பாடம் கேட்கும் பான்மையை நன்னூல் விளக்குகிறது.

'சித்திரப் பாவையின் அத்தக அடங்கிச்
செவிவா யாக நெஞ்சுகள னுகக்
கேட்டவை கேட்டவை விடாதுளத் தமைத்து'

சீடன் கற்க வேண்டும். அவனுக்கு நல்லோர் சொல்லும் பொன்னுறைகள் காதை வழியாகக் கொண்டு, நுழைந்து இதயத்தைக் களனுகக் கொண்டு தங்கும். பேதைக்குச் சொல்லும் நல்லுரைகள் ஒரு செவியில் நுழைந்து மறு செவியில் வெளியேறும்.

இக்கல்லாத புல்லன் நல்லோர் நவின்றவுரைகளை வெளியேற்றும் வேகத்தைக் கண்டு கம்பன் வியந்தான் போலும். எதுவும் எளிதில் ஊடுருவாத வைரக்கற் குன்றமான தாடகையின் நெஞ்சில் நுழைந்து அங்கே தங்காது கழன்று வெளிப்போந்த இராம

னது அம்பின் செயல், புல்லோர்க்கு நல்லோர் சொன்ன பொரு ளுரை போன்றது என்று கூறுகிருன்.

சொல் ஒக்கும் கடிய வேகச் சுடு சரம், கரிய செம்மல்,
அல் ஒக்கும் நிறத்தினுள்மேல் விடுதலும், வயிரக் குன்றக்
கல் ஒக்கும் நெஞ்சில் தங்காது, அப்புறம் கழன்று, கல்லாப்
புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருள் எனப் போயிற்று
அன்றே!

(தாடகை வதைப் படலம்—71)

அணி என்று சொல்லுக்கு அழகு என்பது பொருள். கவிதை என்பதே பெண்ணைப் போலப் பேரழகினை இயல்பாகப் பெற்றது தான். ஆனுலும் அழகுப் பாவைக்கு ஒப்பனை செய்து, அணி மணிகள் அணிவித்து அழகினைப் பன்மடங்காய்ப் பெருக்கும் பான்மை போலப் பாவல்லார் தம் கவிதையின் அழகை அணிகள் மூலம் அதிகரிக்கச் செய்வர். தெரிந்ததைக் கொண்டு தெரி யாததை விளக்கும் உவமை அணி, அணிகளின் அரசி. கம்பன் கருத்திலே நிலைக்கும் கணக்கற்ற உவமைகளைத் தன் காவியத்தில் அள்ளித் தெளித்திருக்கிருன். அதிலே ஒரு துளிதான், தாடகை நெஞ்சை ஊடுருவிய இராம பாணம் கல்லாப் புல்லோர்க்கு நல் லோர் சொன்ன பொருள் எனப் போயிற்று எனும் உள்ளத்தை அள்ளும் உவமை.

கம்பனின் இந்த உவமை இராம பாணத்தின் வேகத்தை விளக்குவதினும் நமக்கு விவேகத்தை உண்டாக்குகிறது. ‘பன்றி கள் முன்னே பனிநிற முத்துகளை வீசுவது வீண் வேலை; செவிடன் காதிலே ஊதிய சங்கு போலப் பயனற்ற செயல், நல்லோரே! பொல்லாதார் முன்னே அறவுரைகளைக் கூறி அவற்றையும் உங்கள் அரிய நேரத்தையும் வீணுக்கவேண்டாம்’ என்று உபதேசிக்கும் இந்த உவமையை உவமையில் உவமை எனப் போற்றுவதும் பொருந்தும்.

கல்வெட்டில் இராமாயணம்

(N. சேதுராமன்)

காவல் நெறி பூண்டு மனு நெறி அல்லது நினையாது—அரு மறையின் நெறி வாழ அருந்தமிழோர் கிளை வாழ பொருவில் மனு நெறி வாழ பொன் மகுடம் கவித்தருளிய சோழ மன்னர்கள் பலராவர். அவர்களுள் மூன்றும் குலோத்துங்க சோழன் கி. பி. 1178 முதல் 1218 வரை ஆட்சி புரிந்தவன். இம்மன்னன் தனது ஆட்சிக் காலத்தில் சிங்களத்தின் மீது அதாவது இலங்கையின் மீது படையெடுத்து வெற்றி கொண்டான். குலோத்துங்கன் இலங்கையின் மீது படையெடுப்பதற்கு ஒரு காரணமும் இருந்தது. இம்மன்னனது தந்தையான இரண்டாம் இராஜராஜ சோழன் காலத்தில்—கி. பி. 1169-இல் சிங்களவர் இராமேஸ்வரம் தீவை பிடித்துக்கொண்டனர். சுமார் 20 ஆண்டுகள் இராமேஸ்வரம் சிங்களவர் வசம் இருந்தது. அத்தீவினைப்பிடித்து மீண்டும் சோழ ராஜ்யத்துடன் இணைக்கவேண்டும் என்பது குலோத்துங்கனின் திட்டம். கி. பி. 1189இல் குலோத்துங்கன் இராமேஸ்வரம் தீவைப்பிடித்து தமிழ்நாட்டுடன் இணைத்தான். இராமேஸ்வரம் தீவில் இருந்த சிங்கள படை வீரர்களைக் கொன்று—இலங்கைத் தீவிலும் நுழைந்து வெற்றி வாகை சூடினான். இப்போரில் இலங்கையின் அரசகுமாரன் ஒருவனும் மாண்டான். இந்நிகழ்ச்சி யினைக் கூறும் குலோத்துங்கனது கல்வெட்டுக்கள் இராமாயணத் தைப் படம் பிடித்துக் காட்டுகின்றன —

''தென்னவர் வந்து அடிபணிய—சிங்களவர் தலைமலையாற—திரை கடலை அடைக்க என்ன—தென் இலங்கையர் கோன் தலை யரிந்த திருநெடுமால் இவன் என்ன தென்னவனைத் தலையரிந்தவன்'' குலோத்துங்கன் என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

இராமபிரான் வானரங்களின் துணைகொண்டு—கடலில் அணை அமைத்து—இலங்கையுள் சென்று இலங்கையர்கோன் இராவ ணனைக் கொன்றான். குலோத்துங்கன் சிங்களப் படை வீரர்களைக் கொன்று—அவர்கள் தலைகளை மலைபோன்று குவித்து—கடலை அடைத்து—இலங்கையுள் நுழைந்து—இலங்கை மன்னனைக் கொன்று

திருநெடுமால் போன்று விளங்கினனும். இராவணனைக் கொன்றது இராமன் அல்லவா! அப்படி இருக்க இலங்கையர் கோன் இராவணனைக் கொன்ற திருநெடுமால் போன்று குலோத்துங்கன் விளங்கினன் என்று கல்வெட்டுக் கூறுகின்றதே! இது சரியா? குலோத்துங்கனுக்கு இராமாயணம் தெரியாதோ? நன்றாகத் தெரியும்! இராமனுக்கு ஒரே மனைவி. அவன் ஏகபத்னிவிரதம் கொண்டவன்! குலோத்துங்கன் வீரத்தில் இராமனாக விளங்கினன். ஆனால் அவனுக்கு இரண்டு மனைவிகள் இருந்தனர். ''இராமனோ'' இந்த இப் பிறவியில் இரு மாதரை சிந்தையாலும் தொடேன்'' என்று கூறியவன் ஆயிற்றே! ஆகவே இராமனுக்கு இழுக்கு வராவண்ணம் இராமனின் மூலமாகிய—ஸ்ரீதேவி பூதேவியுடன் கூடிய திருமாலை அறிமுகப்படுத்தி ''தென் இலங்கையர் கோன் தலையரிந்த திருநெடுமால்'' என்று நயம்படக் கூறுகிறது கல்வெட்டு. திருவுடை மன்னரைக் கண்டால் திருமாலைக் கண்டேனே என்னும் திருமங்கை ஆழ்வாரின் பாசுரம் இங்கு நினைவிற்கு வருகிறது.

குலோத்துங்கனின் இலங்கை வெற்றியை சில கல்வெட்டுக்கள் வேறு விதமாகவும் சித்தரிக்கின்றன. வெற்றி வாகை சூடிய மன்னன் வெள்ளைக் குதிரை மீது பவனி வருவது அரசர் மரபு—அவ்வாறு பவனி வரவேண்டும் என்னும் எண்ணம் குலோத்துங்கனுக்கு உண்டாயிற்று. யாரை வெல்வது? இலங்கையை வென்று வெள்ளைக் குதிரை மீது பவனி வரலாமே என்று கருதி அதனைச் செய்தும் காட்டினன். இதனைக் கூறும் கல்வெட்டு இராமாயணத்தையும் நினைவுபடுத்துகிறது.

''ஈழமண்டலம் எறிவதாக—திருவுள்ளமாய்—திரை கடல் மீது அழகாய் சேனை அனுப்பித்து''

ஈழத்தை—இலங்கையை வெல்லுவதற்கு குலோத்துங்கன் தன் படையை செலுத்தினன். அப்படை கடல் மீது சென்றது.

''வெள்ளிப்பரி செல்ல திருஉள்ளமாய் அன்னாள் இலங்காபுரி இருந்ததென நேகக் கேட்டருளி''

அக்காலத்தில்—இலங்காபுரி இராமனால் வெல்லப்பட்டதைப் போன்று இக்காலத்திலும் இலங்கையை குலோத்துங்கன் வென்றான்; வெற்றி வாகை சூடி வெள்ளைக் குதிரை மீது பவனி வந்தான்''.

''அன்னாள் இலங்காபுரி இருந்தது என்ன நக கேட்டருளி''— இராமாயணத்தை நினைவூட்டும் சுவை மிக்க சொற்றொடர்கள்.

இராமன் இலங்கையை வென்று இராவணனைக் கொன்றபின் இராமேஸ்வரத்தில் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்து சிவபெருமானை பூஜித்தான். இதனையும் குறிப்பிடுகிறான் குலோத்துங்கன்.

இலங்கை வெற்றியை, ''திருக்கயிலைச் சிவனருளால்'' அடைந்து—''தேசமெல்லாம் புகழ் விளங்க''—பிரகாசித்தான் குலோத்துங்கன் என்று இம்மன்னனது கல்வெட்டும் கூறுகின்றது.

அபயம் என்று கூறி—அடி பணிந்து சரணடைட்பவன்—பகைவனே ஆனாலும்—அவனுக்கும் அருள்பவன் இராமபிரான் அல்லவா! இந்த நற்பண்பை குலோத்துங்கனிடமும் காண்கிறோம்.

மதுரையில் ஆட்சிபுரிந்து கொண்டிருந்த முதலாம் சடையவர்மன் குலசேகர பாண்டியன் குலோத்துங்கனுடன் முரண்பட்டான். திரையிட மறுத்தான்—வெகுண்டெழுந்த குலோத்துங்கன் மதுரையின் மீது படையெடுத்தான்—குலசேகர பாண்டியன் நடுங்கினான்—தன் மகன்—மனைவி ஆகியவருடன்—அபயம் என்று அலறி குலோத்துங்கனிடம் சரணடைந்தான். சரணம்—என்று வந்தவன் பகைவனே ஆனாலும்—இராமன்போன்று—அவனுக்கும் ஆதரவளித்தான் குலோத்துங்கன். இதனைக் கூறும் கல்வெட்டு இராமாயணத்தில் வரும் சரணாகதிப்படலத்தை நினைவூட்டுகிறது.

''திரையிடாத் தென்னவன் மீது தண்டு ஏவ திருவுள்ளமாய்—வழுதி நாடு தனதாக்கி மதுரை நகர் திறைப்படுத்தினான்'' குலோத்துங்கன். ''குலசேகரபாண்டியன் சரணடைந்து'' புகழ் மைந்தனைப்பேர் சாட்டி அரசியார் கையோடு கூட வந்து வணங்குதலும்—**அபயம் என்று வருதலால் சினம்மறந்து திருவுள்ளமாய் தென்னவனும் என மொழிந்து** பட்டொளியும் திவ்யாசனமும் பரிசட்டமும் மிக நல்கி அரசும் ஆண்மையும் அணி மதுரையும் அவர்களித்து விடை குடுத்தான்—குலோத்துங்கன் எனக்கல்வெட்டுக் கூறும்.

அபயம் என்று வருதலால்—சினம் மறந்து—திருவுள்ளமாய் என்னும் தொடர்கள் இராமபிரானின் கல்யாண குணங்களை இங்கு நினைவூட்டுகின்றன.

இவ்வாறு இரமாயணத்தை நினைவூட்டும் மூன்றும் குலோத்துங்க சோழனின் கல்வெட்டுக்களை, தீர்த்தநகரி, திருப்புகலூர், திருவிடைமருதூர், திருஉசாத்தானம் என்னும் வடகோவிலூர், திருவிசலூர் — மருத்துவக்குடி, திருவெண்காடு ஆகிய ஊர்களில் உள்ள ஆலயங்களில் காணலாம்.

முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் கி. பி. 1251 முதல் 1283 வரை அரசு புரிந்தவன். இம்மன்னன் 1256 இல். இலங்கையை வென்றான். இவனது இலங்கைப் படையெடுப்பின் வெற்றியை—திருப்பதி வெங்கடேசப்பெருமான் ஆலயத்தில் உள்ள கல்வெட்டு ஒன்று சுவையாகக் கூறுகின்றது. கிரந்தத்தில் உள்ள இக்கல்வெட்டு கூறுவதாவது:

சமஸ்த ஜகத் ஆதார
சோமகுல திலக
மதுராபுரி மாதவ
லங்காத்தீவிப கண்டன த்வீதியராமா

எல்லா உலகங்களுக்கும் ஆதாரமானவன்—சந்திர குலத்திற்கு திலகம் போன்றவன் — மதுரைக்கு மாதவன் அதாவது மகா விஷ்ணு போன்றவன். அந்த சுந்தரபாண்டியன் இலங்கையை வென்ற இரண்டாவது இராமன் என்று கூறுகிறது கல்வெட்டு.

வீரத்தில் இராமனுக விளங்கிய சுந்தர பாண்டியன் குணத்திலும் இராமனு? என்ற வினு எழுகிறது. "பரதார சகோதரா" என்று விடையளிக்கிறது கல்வெட்டு. மாற்ருன் மனைவிக்கு சகோதரன் சுந்தரபாண்டியன் என்பது இதன் பொருள். இந்த இப்பிறவியில் இரு மாதரை சிந்தையாலும் தொடேன்'' என்று இராமன் கூறியதாக கவிச்சக்கரவர்த்தி கம்பரும் கூறுகிருர். சுந்தரபாண்டியனே **"பரதார சகோதரா—மாற்ருன் மனைவிக்கு தான் சகோதரன்"** என்கிருன். அப்படியானுல் அவன் உண்மையிலேயே இலங்கையை வென்ற இரண்டாவது இராமன் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை, ''மாற்ருன் மனைவிக்கு தான் சகோதரன்'' என்று கூறிய மன்னன் இச்சுந்தரபாண்டியன் ஒருவனே என்பதும் ஈண்டு நோக்கத்தக்கது. இங்கு சுந்தர பாண்டியன் சுந்தர ராமனுக காட்சியளிக்கின்ருன்.

இவ்வாறு கல்வெட்டுக்களில் ஆங்காங்கே இராமாயணத்தை காணும்போது—அன்றும் இன்றும் என்றும் ராமராஜ்யம் விளங்க வேண்டும் என்று நம் முன்னேர்கள் விரும்பினுர்கள் என்பதை அறிகிருேம். சாச்வதமாக அதனைக் கல்லிலும் வடித்தார்கள். குலோத்துங்கனின் திருவாலங்காட்டுக் கல்வெட்டு சோழ நாட்டைப் பற்றிக் குறிப்பிடும்போது

''கொல்வேங்கையும் மடமானும் வந்து ஒருதுறை நீருண்ண'' என்று கூறுகிறது. சோழநாட்டில் புலியும் மானும் ஒரு துறையில் நீர் அருந்துகின்றன என்று கூறும் இச்சொற்ருெடர்கள் ராம ராஜ்யத்தை நினைவூட்டுகின்றன.

கம்பனில் விழுப்பொருள்கள்

(Values in Kamban)

ஒரு மொழியில் ஆழமான பல்பொருளுடைய ஒரு சொல்லை மற்றொரு மொழியில் பெயர்த்தல் கடினம் என்பதை அத்துறையில் முயன்றவர்கள் நன்கு அறிவர். தமிழில் உள்ள ஆறம் என்ற சொல்லை வடமொழியிலோ ஆங்கிலத்திலோ பெயர்த்தல் இயலாத காரியம். அதேபோல (Values) என்ற ஆங்கிலச் சொல்லும் பெயர்க்கக் கடினமாக உள்ளது. எனினும் விழுப் பொருள்கள்' என்று கூறலாம் என்று கருதுகிறேன்.

ஒரு சொல் எவ்வாறு பொருள் ஆழம் பெறுகிறது என்பதைக் கூறவந்த அமெரிக்க சுப்ரீம் கோர்ட் நீதிபதி ஆலிவர் வென்டால் ஹோம்ஸ் என்ற இலக்கியத் திறனாய்வாளர் பின்வருமாறு கூறுகிறார். A word is not a crystal transparent and unchanged, it is the skin of a living thought and may vary greatly in colour and content according to the circumstances and the time in which it is used,—Justice G. W. Holmes, TOWNE Vs EISNER.

ஒரு சொல் என்பது வைரம் போன்று ஒரே மாதிரியாக என்றும் ஒளிவிட்டுக் கொண்டிருப்பதன்று. எண்ணங்கள் என்பவற்றின் உயிரோட்டமுடைய தோலாகும் சொல் என்பது. அது தோன்றும் 'நேரம் இடம் என்பவற்றிற்கேற்பச் சொல்லின் பொருள் மாறுபடும் இயல்புடையது' என்கிறார் ஹோம்ஸ்.

ஒருவன் ஒரு சொல்லைப் பயன்படுத்தினால் அது ஆயிரம் ஆண்டுகளாக வழங்கப்பெற்ற சொல்லாகலின் அத்தனை பொருள் வேறுபாடுகளுடன் கேட்பான் செவியில் புகுகின்றது. இத்தனை பொருளையும் அந்தச் சொல் நேரே தெரிவிக்காவிடினும் குறிப்பால் உணர்த்தும் (Suggestion) இயல்புடையது. Values என்ற ஆங்கிலச் சொல்லுக்கு 'That which is esteemed for its own sake' என்று ஆக்ஸ்பர்ட் அகராதி பொருள் கூறுகிறது. அதாவது வேறு பயன் ஒன்றையும் கருதாமல் எந்த ஒன்றை அதற்காகவே பெரிதும் போற்றி உயிரினும் மேலாக மதிக்கிறோமோ அதைத்தான் (Values)

விருப்பொருள்கள் என்று கூறுகிறோம். விருப்பொருள்கள் என்று கூறியவுடன் கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திலிருந்து மாரு மல் இவை இருக்க வேண்டும்போலும் என்று யாரும் நினைக்க வேண்டியதில்லை. விழுப் பொருள்களுள் மாறும் இயல்புடையவும் (Changing Values) மாருத இயல்புடையவும் (Permanent Values) உண்டு. சென்ற நூற்ருண்டில் விழுப்பொருள்கள் என்று உண்டு. சென்ற நூற்ருண்டில் விழுப்பொருள்கள் என்று இத் தமிழரால் கருதப்பெற்றவை இன்றும் அவ்வாறே கருதப் பெற வேண்டும் என்ற இன்றியமையாமை இல்லை. அதேபோல ஒரு சமுதாயத்தாரால் விழுப்பொருள்கள் என்று கருதப்படுபவை அதே கால கட்டத்தில் பிற சமுதாயத்தாரால் விழுப்பொருள்களாகக் கருதப்படத் தேவை இல்லை. தமிழர்களாகிய நமக்கு விழுப் பொருள்களாக உள்ளவை ஆந்திரர்க்கோ, வங்காளிகட்கோ அவ் வாறே இருக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை. இவை சமுதா யத்தைப் பொறுத்தவை.

அதேபோன்று தனி மனிதனுகிய நான் விழுப்பொருள்கள் என்று கருதுவனவற்றையே என் உடன் பிறந்தவனும் ஒன்ருகக் கருதவேண்டும் என்ற இன்றியமையாமை இல்லை. ஒரே மனிதன் கூட இன்று விழுப்பொருள் என்று கருதுவதை இன்னுஞ் சில ஆண்டுகள் கழித்து அப்படியே அதனைக் கருதவேண்டும் என்ற தேவையும் இல்லை.

உலக இலக்கிய கர்த்தாக்கள் அனைவரினும் மேம்பட்டு நிற்ப வனுகிய கம்ப நாடன் தனிமனிதனுக்குரிய பல்வேறு விழுப்பொருள் கள், சமுதாயத்துக்குரிய விழுப்பொருள்கள் ஆகிய பலவற்றையும் எடுத்துக்காட்டிச் செல்கிருன். தனி மனிதனுக்குரிய விழுப்பொருள் களிலும் பல வேறுபாடுகள் உண்டு. தசரதன் பிள்ளைகளாகிய இராம இலக்குவர்கள் என்று எடுத்துக்கொண்டாற்கூட இரு வருடைய விழுப்பொருள்களும் வேறு வேறு. விழுப்பொருள்கள் வேருக இருத்தலின் ஒருவருக்கொருவர் காட்டவேண்டிய அன்பில் குறைபாடிருக்கவேண்டிய இன்றியமையாமை இல்லை. ஒரே மனித னுடைய சூழ்நிலையும் அடிப்படையும் மாறும்போது பழைய விழுப்பொருளை உதறிவிட்டுப் புதியனவற்றை ஏற்றுக்கொள்கிருன்.

ஜனகனிடம் இராம இலக்குவர்களை அழைத்துச் செல்கிருன் விசுவாமித்திரன். பெண்ணைப் பெற்றவர்கட்கு, இளைஞர்கள் யாரை கண்டாலும் தம் மகளுக்கு ஏற்ற மணாளனுக இவன் அமைவானு என்ற எண்ணம் உண்டாவது இயற்கைதானே! எனவேதான் விசுவாமித்திரன் 'நின் வேள்வி காணிய வந்தார்; வில்லும் காண்பார்' என்று கூறுகிருன். இடையே இவர்கள் யார் என்று

5

அறிமுகப்படுத்தும் முறையில் தசரதனுடைய பிள்ளைகள் இவர்கள் என்பதைத் தெரிவிக்கிறான் முனிவன். இதனைக் கேட்டவுடன் எதிர்கால மாமனாராகிய ஜனகன் மனத்தில் ஓர் ஐயம் தோன்றத் தானே செய்யும்? அறுபதினாயிரம் மனைவியரைத் தந்தை மணந்தான் எனில் அவன் பிள்ளை எப்படி இருப்பானோ என்ற ஐயம் தோன்றுவது இயல்புதானே! அதற்கும் விடையளிக்கும் முறையில் முனிவன் பேசத் தொடங்குகிறான். பெற்ற கடமைதான் தசரதனுக்கே தவிர 'உபநயன விதி முடித்து வில்வித்தை முதலிய கலைகளைக் கற்றுத் தந்தவன் வசிட்டனே காண்' என்று கூறி முடிக்கிறான். முதற் காப்பியத்தில் சொல்லப்பட்ட முறையை மாற்றி விடுகிறான் கம்ப நாடான். பல மனைவியர் இருப்பதில் தவறு இல்லை என்பதைப் பழைய காப்பிய காலத்தில் விழுப்பொருளாகக் கொண்டிருந்தது. கம்ப நாடன் இலக்கிய காப்பியம் அந்த விழுப் பொருளை (Values) உதறிவிட்டுப் புதிய விழுப் பொருளை மேற் கொண்டுவிட்டது. ஒரு தாரமே சிறந்தது என்பது புதிய விழுப் பொருள்.

தனி மனிதனுக்கு விழுப்பொருள்கூறும் பொழுதுகூடக் கவிஞன் அந்தத் தனி மனிதனுடைய கல்வி, ஒழுக்கம், பண்பாடு, குடிப்பிறப்பு என்பவற்றிற் கேற்பவே விழுப்பொருளை அமைக்கிறான். காடு செல்ல முடிவு செய்த இராமன் தன் செல்வத்தைத் தானம் செய்கிறான். அதனைப் பெற்றுக்கொள்ள வந்தவர்களுள் கிழட்டு அந்தணன் ஒருவன். பசுக்களைத் தானமாகப் பெற வருகிறான் அவன். எவ்வளவு பசுக்கள் வேண்டும் என்று கேட்கப்பட்ட பொழுது தனது கைத்தடியைச் சுழற்றி எறிந்து அது எவ்வளவு தூரம் செல்லுமோ அந்த அளவு பசுக்கள் வேண்டும் என்று கூறி விட்டு அந்தக் கிழவன் மிக முயன்று கம்பை எறிகிறானும். அவன் ஆசைக்கு அளவில்லை. உள்ளவை அனைத்தையும் வழங்க முற்படும் இராமனும் அளவிலா ஆசை கொண்ட கிழட்டு அந்தணனும் அயோத்திலேயே ஒரே காலத்தில் வசித்தவர்கள்தான். ஆனால் இருவருடைய வாழ்க்கையிலும் எவ்வளவு மாறுபட்ட விழுப் பொருள்கள்!

கிழட்டு அந்தணனும், இராகவனும் சமுதாயத்தின் இரு துருவங்கள் போன்று இரண்டு முனைகளில் உள்ளவர்கள். அவர்களுக்குள் ஓர் ஒற்றுமையைக் காண்பது கடினம். ஆனால் ஒரே வீட்டில் அண்ணன் தம்பியாகப் பிறப்பவர்களுள்ளும் ஒத்தகுலம், ஒத்த கல்வி, ஒரே தாய் தந்தையர். என்றாலும் என்ன? அவரவர் வாழ்க்கையில் எவ்வெவற்றை வேல்யுஸ் என்று கொண்டார்கள் என்று பார்த்தால் உண்மை விளங்கும். இராமனும் இலக்குவனும் அண்ணன் தம்பியர்தாம்! இவர்கள் இருவரும் கொண்டிருந்த

விழுப்பொருள்கள் வெவ்வேறு அன்றே! இராமனைப் பொறுத்த மட்டில் அறம் ஒன்றே அவனுக்கு விழுப்பொருள்! அறத்தின் எதிரே தாய், தந்தை, மனைவி, ஆகிய அனைவரும் தாழ்ந்த உறவு களே! ஆனால், இலக்குவனுக்கோ விழுப்பொருள் வேறு! இராம பக்தி என்ற ஒன்றுதான் அவன் கொண்ட விழுப்பொருள். அதன் எதிரே தாய், தந்தை, சோதரன் ஆகிய அனைவரும் ஒதுக்கப்பட வேண்டியவர்களே! இந்த இருவரும் கொண்ட தனித் தனியான விழுப்பொருள்களை நன்கு எடுத்துக்காட்டி அந்த விழுப்பொருளுக் காக அவர்கள் எந்தத் தியாகத்தையும் செய்யத் தயாராக உள்ள னர் என்பதையும் கவிஞன் விரிவாகக் கூறுகிறான்.

இனி, ஒருவன் தன் வாழ்நாளில் கொண்டிருக்கும் விழுப் பொருளை, ஒரு குறிப்பிட்ட காலத்தில், குறிப்பிட்ட காரணத்திற் காக மாற்றிக்கொள்வதும் உண்டு. காரணம் அந்தக் குறிப்பிட்ட காரணம், தான் அதுவரைக் கொண்டிருந்த விழுப்பொருளை விட உயர்வானது என்பதுதான். காந்திஜி அஹிம்சையை உயிரினும் மேலாக மதிப்பவர். பசுப் பாதுகாப்பைப் போற்றுபவர். என் றாலும் இங்கிலாந்தில் ஒருமுறை ஜின்னாவை உணவுக்கு அழைத் தார். விருந்தினராக வந்த ஜின்னாவுக்கு மகாத்மா என்ன உண வைத் தந்தார் தெரியுமா? தாம் உண்ணும் வேர்க்கடலையை அல்ல. பசு மாட்டுக் கறியைத் தந்தார். இதன் உட்பொருளை அறியாத மக்கள் அவரைக் குறை கூறினர். ஆம்! பல சமயங்களில் ஒருவர் கொண்டிருக்கிற விழுப்பொருளை மாற்றிக் கொள்ளவேண்டும். மாற்றிக்கொள்வதற்குத் தகுந்த காரணமும் இருக்கவேண்டும்.

இந்த அற்புதமான கருத்தும் கம்பனில் இடம் பெறுகிறது. விசுவாமித்திரனுடன் காட்டிற்குச் செல்கிறான் இராமன். காட்டில் தாடகை எதிர்ப்படுகிறாள். அழைத்துவந்த விசுவாமித்திரன் அவளைக் கொல்லவேண்டும் என்னும் குறிப்பை அறிவித்தாலும் இராமன் கணையைத் தொடுக்கவில்லை. காரணம் 'பெண் என மனத்திடை பெருந்தகை நினைத்தான்' (தாட. வதை—36) வசிட் டனிடம் கல்வி பயின்ற இராமனுக்கு ஒரு பெண்ணின் மேல் அம்பு போடுதல் என்பது நினைக்கவும் முடியாத செயலாகும். எக்கார ணம் பற்றியும் பெண்ணின் மேல் அம்பு விடலாகாது. அதுவே தூய வீரத்திற்கு இலக்கணம் என்பது இராமன் கொண்டிருந்த விழுப்பொருளாகும். ஆனால் இப்பொழுது தருமசங்கடமான நிலைமை. தான் யாரைக் குரு, தந்தை, தெய்வம் என்று இராமன் இப்பொழுது கொண்டுள்ளானோ அந்த விசுவாமித்திரன் இதோ பேசுகிறான்:

'ஈறுகில் நல் அறம் பார்த்து இசைத்தேன்; இவள்
சீறி நின்று இது செப்புகின்றேன் அலேன்;
அறி நின்றது அற்ற அன்று; அரக்கியைக்
கோறி என்று எதிர் அந்தணன் கூறினான்'

(தா. வ . 44)

மிக விரிவாகப் பேசுகின்ற முனிவன் இரண்டு வலுவான காரணங்களை எடுத்துக் கூறுகிறான். முதலாவது 'முடிவில்லாத நல்ல அறத்தை நன்கு ஆராய்ந்து பார்த்துத்தான் இந்த முடிவுக்கு வந்தேன் என்பதாகும். அப்படியானால் அறம் பெண்ணைக் கொல்ல லாம் என்று பேசுகிறதா? என்ற வினாத் தோன்றுமல்லவா? அதற்கு விடை கூறுபவன் போல முனிவன் 'பின்னும் தாழ்குழல் பேதைமைப் பெண் இவள் என்னும் தன்மை, எளிமையின் பாலதே' (தா. வ. 43) என்று கூறிவிடுகிறான். அதாவது பெண்மை என்பது கேவலம் உடலை மட்டும் பொறுத்தது அன்று; தாய்மைத் தன்மை இல்லாத தாய் பேய் என்று எண்ணத் தகுந் தவள். எனவே பெண் கொலை பாவம் என்ற அறத்தை அப்படியே குருட்டுத்தனமாகப் பின்பற்றக்கூடாது என்பதே முனிவன் வாத மாகும். பொதுவான அறம் பெண் கொலை கூடாது என்பதாகும். நல்லறம் என்பது அவள் பெண்ணாக இல்லையானால் அவளைக் கொல்ல வேண்டும் என்பதே.

இதற்கு அடுத்தபடியாக ஒரு விழுமிய கருத்தைப் பேசுகிறான் முனிவன்.

இராமா! அறம் எது அறமல்லது எது என்ற ஐயம் தோன்றி ஆராய்ச்சியில் இறங்குபவனுக்கு மனத்தில் மாசு இருக்கக்கூடாது. விருப்பு வெறுப்பு உடையவன் நடுவுநிலையில் நின்று ஒன்றை ஆராய முடியாது. நான் இவள்பால் கொண்ட வெறுப்புணர்ச்சி யால் இவ்வாறு பேசுகிறேன் என்று எண்ணாதே! நடுவுநிலையில் நின்று விருப்பு வெறுப்பைக் கடந்த நிலையில்தான் இந்த முடி வுக்கு வந்தேன் என்று கூறுமுகமாக 'இவள் சீறி நின்று இது செப்புகின்றேன் கபிலன்' என்றும் கூறுகிறான். மனத்தில் காழ்ப் புணர்ச்சி இல்லாதவர் எடுக்கின்ற முடிவில் நியாயம் உறுதியாக இருந்தே தீரும். இராமனுடைய எண்ண ஓட்டங்களை நன்கு அறிந்துகொண்ட முனிவன் தாடகையைக் கொல்லுமாறு தான் பணித்தது அறத்திற்கு மாறுபட்டதன்று என்பதையும், அறம் எது என்று ஆராயும்பொழுது தன் மனத்தில் காழ்ப்புணர்ச்சி இல்லை என்பதையும் நடுவுநிலையில் நின்றே இந்த முடிவுக்கு வந் திருக்கிறான் என்பதையும் மிக ஆணித்தரமாகவும் அழுத்தமாகவும் கூறிவிட்டான்.

இப்பொழுது இராமன் தருமசங்கடமான நிலையில் அகப் பட்டுக் கொள்கிறான். விசுவாமித்திரன் எத்துணைச் சிறந்த முனிவனாயினும் அவன் தாடகையால் தீங்கு இழைக்கப்பட்டவன் (affected party) என்பதை மறுக்கவோ மறைக்கவோ முடியாது. தவறு இழைக்கப்பட்டவன் மனம் காழ்ப்புணர்ச்சியை முற்றிலும் தவிர்க்க முடியுமா என்பது வினா? இதனை முடிவு செய்தல் அத்துணை எளிதான காரியமன்று. எனவே இராமன் மற்றொரு வழியைக் கையாள முற்படுகிறான். விசுவாமித்திரனைக் குரு என்றும் வழிபாட்டிற்கு உரியவன் என்றும் மனத்துட் கொண்டு விட்ட பிறகு அவனைப் பற்றியும், அவன் மனநிலை பற்றியும் ஆராயத் தொடங்குவது பெருந் தவறாக முடியும். எனவே அவன் கூறியதை ஏற்பதே முடிவு என்ற நிலைக்கு வருகிறான் இராமன்.

தன் மனமாற்றத்தைக் கூறத் தொடங்கிய இராகவன் மிகக் கவனத்துடன் பேசுகிறான். 'ஐயனே! அறம் அல்லாததைச் செய்க என்று நீயே ஏவினால் நின் சொற்களை வேதம் என்று கொண்டு செய்வதே எனக்கு அறமாகும்' என்ற பொருளில்

'ஐயன் அங்கு அதுகேட்டு, 'அறன் அல்லவும்
எய்தினால், 'அது செய்க' என்று ஏவினால்
மெய்ய! நின் உரை வேதம் எனக்கொரு
செய்கை அன்றோ! அறம் செயும் ஆறு என்றான்.

(தா. வதை – 45)

என்று கவிஞன் இராமனைப் பேச வைக்கின்றான். இதுவரை இராமன் எதனை விழுப்பொருள் என்று கொண்டிருந்தானோ அதனை மாற்றிக்கொள்ள முடிவு செய்துவிட்டான். பெண்ணைக் கொல்லுதல் தவறு என்பது எப்பொழுது? தானே அந்த முடிவை மேற்கொண்டால் அது அவனுடைய வேல்யூஸ்ன்படித் தவறுதான். ஆனால் இராமனுடைய பிற விழுப்பொருள்களில் தாய், தந்தை குரு, தெய்வம் என்றவர்கள் ஏவியதை உடனடியாகச் செய்ய வேண்டும் என்பது தலையாய விழுப்பொருளுமாகும். இராமன் மேற்கொண்டிருந்த இவ்விரு விழுப்பொருள்களுள் (values) முரண் பாடு ஏற்பட்டுவிட்டது இப்பொழுது. இவை இரண்டின் இடையே உள்ள தாரதம்மியங்களை ஆராய்ந்த இராமன் இறுதியாக ஒன்றை எடுத்துக்கொண்டு ஒன்றை விட்டு விடுகிறான்.

'அறன் அல்லவும் எய்தினால் 'அது செய்க' என நீ ஏவினால்' என்று கூறும்பொழுது இராமனுடைய மனப் போராட்டத்தை அறிய முடிகிறது. அறன் அல்லது எய்தாது என்பதை எய்தினால் என்று ஒரு ஆல் தருகிறான். மேலும் அது செய்க என நீ ஏவினால் என்று கூறும்பொழுது நீ ஏவமாட்டாய் என்ற பொருளும் அதில்

தொக்கி நிற்கிறது. எது அறம்? பெண்ணைக் கொல்லக்கூடாது என்பது பொதுவான அறம் அல்லது சட்டம். நீண்ட காலமாக எழுத்தில் உள்ள இந்தச் சட்டத்தின் மாறுபட்ட இப்பொழுது ஒரு நீதிபதி தீர்ப்பளிக்கின்றார். அவர் ,யார்? ஓர் உலகத்தையே தன் தவ வலிமையால் படைக்கும் பேராற்றலும் பேர் அறிவும் உடைய பெரு மகன். எனவே எழுதப்பெற்ற சட்டத்தை விளக்கும் தகுதியும் (Capacity to interpret written law) ஆற்றலும் உடைய விசுவாமித்திரன் அந்தச் சட்டத்திற்குப் புதிய விளக்கம் தருகிறான். என்ன புதுமை? பெண் உடம்பை மட்டும் வைத்துக் கொண்டு குருட்டுத்தனமாகப் பெண் என்று முடிவு செய்வது தவறு. பெண் தன்மை இருந்தால் ஒழிய புற உடம்பை மட்டும் வைத்துக்கொண்டு ஒருவரை ஆண் என்றோ பெண் என்றோ முடிவு செய்துவிடக்கூடாது என்பது விசுவாமித்திரன் தந்த புது விளக்கம். 'பெண் என்று இவளை நினைப்பது பேதைமையின்பால தாகும்' என்பது அவன் வாதம்.

இனி இத்தகைய ஒரு விளக்கத்தை மதிநுட்பம் நூலோடு உடைய விசுவாமித்திரன் தந்துவிட்ட பிறகு இது Case law என்ற சிறப்பைப் பெற்றுவிடுகிறதல்லவா? எனவேதான் இராமன் 'நீ ஏவினால் நின் உரை வேதம் எனக் கொடு செய்கைதான் எனக்குச் சிறப்புடைய வழியாகும் என்று பேசுவது அவன் தன்னுடைய விழுப்பொருளை மாற்றிக் கொண்டான் என்பதைக் காட்டுகிறது. தன்னலம் அல்லது அற்பப் பயன் கருதி அவன் தான் கொண்டிருந்த விழுப்பொருளை மாற்றிக்கொள்ளவில்லை. எனவே இதுவும் உலகிடை உண்டு என்பதைக் காட்டக் கம்பன் இப் போராட்டத்தையும் இராமனின் இந்த முடிவையும் நமக்குக் காட்டுகிறான்.

இவ்வாறு கூறும்பொழுதுகூட தென் சொற்கடற்கு எல்லை தேர்ந்தவனாகிய இராமன், சொற்களை அளந்து போட்டுப் பேசுகிறான். 'இராமா இது செய்யலாமா?' என்று விசுவாமித்திரன் கேட்டிருந்தால் ஒருவேளை இராமன் 'இது தவறு என்று எனக்குப் படுகிறது முனிபுங்கவா!' என்று கூறி இருப்பான். அப்படி ஒரு நிலையை வைத்துக்கொள்ளாமல் அது செய்க என நீ ஏவினால்' என்று கூறிவிட்டமையின் இந்தச் செயலால் விளையும் பாவ புண்ணியங்கட்கு நீயே பொறுப்பாளி ஆகிறாய் என்றும் இராமன் கூறிவிட்டான். குருவாகவும் தெய்வமாகவும் உள்ள ஒருவன் ஏவியதைச் செய்வதுதான் ஒருவனுக்குத் தலையாய விழுப்பொருள் என்பதையும் இராமன் எடுத்துக் கூறிவிட்டான். தனி மனிதன் கொண்டுள்ள விழுப்பொருள்கூடத் தக்க காரணங்களால் மாற்றிக் கொள்ளப்படலாம் என்பதற்கு இது எடுத்துக் காட்டாகும்.

இராமன் தன் விழுப்பொருளை மாற்றிக்கொண்டாலும் அவனுடைய நிழலாகவும், அணுக்கனுகவும், தொண்டனுகவும் உள்ள இலக்குவன் தான் கொண்ட விழுப்பொருளை மாற்றிக் கொள்ளத் தயாராக இல்லை. அயோமுகியைக் கொன்றுவிட்டாயா என்று இராமன் கேட்டதற்கு இலக்குவன் கூறும் இங்கிதம் நிறைந்த விடையைக் கண்டால் இவ்வுண்மை நன்கு விளங்கும். 'புன்தொழில் அணையவள், புகன்ற சீற்றத்தால் கொன்றிலையோனுமால்? கூறுவாய்' (அயோ—90) என இராமன் கேட்டவுடன் இளையவன்

''துளைபடு மூக்கொடு செவி துமித்து உக,
வளை எயிறு இதழொடு அரிந்து, மாற்றிய
அளவையில், நகலிட்டு அரற்றினுள்'
என இளையவன் விளம்பி நின்று இரு கை கூப்பினுன்'
(அயோ—91)

'கொல்லவில்லை; பெண் கொலை கூடாதாகலின்' என்று வாயினுல் கூருமல் அவள் அரற்றினுள் என்று கூறி வணங்கினுன் அப் பெருமகன். இக்குறிப்பை அறிந்து கொண்டு சக்கரவர்த்தி திருமகன்

'தொல்இருள், தனைக் கொலத் தொடர்கின்றுளையும்
கொல்லலை! நாசியைக் கொய்து நீக்கினுய்!
வல்லைநீ! மறு முதல் மரபினேய்! என....
(அயோ—92)

நீ மறு முதல் மரபின் வந்து அந்தப் பழமையான அறத்தைக் காப்பவன் ஆதலின் பெண் கொலை செய்யவில்லை. நின்னை வாழ்த்துகிறேன் என்முன். இராகவன் தான் தன் விழுப்பொருளை மாற்றிக்கொண்டதுபோல இளையவனும் மாற்றிக்கொள்ள வேண்டும் என்று நினைக்கவில்லை. இதுவே அறத்தின் மூர்த்தியாகிய இராகவனுக்குப் பெருமை.

இருவரும் அண்ணன் தம்பிகள்தாம். என்றுலும் இருவருடைய விழுப்பொருள்களும் மாறுபடுகின்றன. என்றுலும் என்ன? தான் கொண்ட விழுப்பொருள் அண்ணன் கொண்ட விழுப்பொருளினும் மாறுபட்டது என்றுலும் அதை வெளிப்படையாகக் கூறி அண்ணன் மனம் நோகுமாறு செய்ய இலக்குவன் விரும்பவில்லை. ஆனுல் அதன் அருமைப்பாட்டை நன்குணர்ந்து கொண்ட இராகவன் 'மனுவின் மரபு கெடாமல் காக்கின்றவன் நீயே' என்ற பெரியதொரு புகழ் மாலையைத் தம்பிக்குச் சூட்டி மகிழ்கின்முன். மாறுபட்ட கருத்துக்கு மதிப்புத் தருவதே இருவருக்கும் ஒத்த விழுப்பொருள் போலும்!

இலக்குவனுடைய விழுப் பொருளுக்கு இப்பொழுது மரியாதை தந்து ஏற்றுக்கொள்ளும் இராமன், முன்னர் இவ்வாறு செய்யவில்லை. தான் கூறினவுடன் இலக்குவன் மயங்கிவிடுவான் என்று தவருக எடைபோட்டு விடுகிருன். இலக்குவனுடைய உண்மையான ஸ்வரூபத்தை இங்குதான் இராமன் காண்கிருன். அதிலிருந்து கற்றுக்கொண்ட பாடந்தான் அயோமுகி நிகழ்ச்சியில் இராமன் தக்கவாறு நடந்துகொள்ள உதவிற்று போலும்.

பரதனுக்கு முடி வழங்கக் கைகேயி அரசனிடம் வரம் பெற்றுவிட்ட செய்தி இலக்குவன் காதில் விழுந்துவிட்டது. அந்த நேரத்தில் இராகவன் அவனுடன் இல்லை. எனவே கொதித்து எழுகிருன் சுமித்திரை சிங்கம்.

'புவிப்பாவை வரம் கெட, போரில் வந்தோரை எல்லாம்
அவிப்பானும், அவித்து அவர் ஆக்கையை அண்டம் முற்றக்
குவிப்பானும், எனக்கு ஒரு கோவினைக் கொற்ற மௌலி
கவிப்பானும் நின்றேன்; இது காக்குநர் காமின்'

(நகர் நீங்கு 117)

என்று கூவிக்கொண்டு நிற்கிருன். தேவரும் அஞ்சும் அந்த நிலையில் அவனிடம் சென்று பேச யாருக்குத் தைரியம் வரும்? இராகவன் இலக்குவனிடம் வந்து 'என் அத்த! என்? நீ இமையோரை முனிந்திலாதாய் சன்னத்தன் ஆகித்தனு ஏந்துதற்கு ஏது?

(நகர்—நீ—122)

இதற்கு இலக்குவன் கூறிய விடை நாம் நன்கு அறிந்த ஒன்ருகும். இராமன் என்ன கூறியும் இலக்குவன் சினம் அடங்குவதாகத் தெரியவில்லை. 'இது விதியின் பிழை' (129) என்ற இராமனுக்கு 'விதிக்கும் விதியாகும் என் வில் தொழில் காண்டி' (130) என்று விடை கூறிவிட்டான் இளையவன். இவ்வாறு இளையவன் கோபிக்கக் காரணம் யாது? 'வாய் தந்தன கூறுதியோ மறைதந்த நாவால்' (131) இதிலும் இலக்குவன் அடங்கவில்லை. இதற்கு மேல் ஒருபடி சென்ற இராமன் 'ஐய! இவ் வையம் மையல் தோன்ற நெறிவாழ் துணைத் தம்பியைப் போர் தொலைத்ததோ? சான்ருேர் புகழும் தனித் தாதையை வாகை கொண்டோ? ஈன்ருளை வென்ருே இனி இக் கதம் தீர்வது? (134) என்று கூட இராமன் தன் துயரை வெளியிட்டான்.

இந்தப் பேச்சுக்கள் எதுவும் இலக்குவன் காதில் ஏற மறுத்துவிட்டன. காரணம் என்னவாக இருக்கும்? இராமனுடைய விழுப்பொருளும் இலக்குவனுடைய விழுப்பொருளும் முற்றிலும் மாறுபட்டு நிற்பதேயாகும். இராமனைப் பொறுத்தவரையில் அவனுக்குத் தாய், தந்தை சோதரன் என்று பாகுபாடு உண்டு.

முன்னர் உள்ள இருவரும் என்ன 'ஏவினுலும்' ஏன் என்று கேளா மல் உடனே கீழ்ப்படிய வேண்டும் என்ற கொள்கை உடையவன். அவன் உயிரினும் மேலாக மதிக்கின்ற விழுப்பொருள் அவ்வாறு கீழ்ப்படிதலே என்ற கொள்கையுடையவன. அதனுல்தான் கைகேயி 'அரசன் உன்னை வனஞ் செல்ல ஆணையிட்டுள்ளான்' என்று கூறினவுடன் மறு வார்த்தை பேசாமல் ''எந்தையே ஏவ நீரே உரை செய இயைவது உண்டேல் உய்ந்தனன் அடியேன்'' (கை. சூழ்வினை—110) என்றும் ''மன்னவன் பணி அன்ருகில் நும் பணி மறுப்பனே? என் பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றது அன்ரே? (114) என்றும் கூறி, 'விடையுங் கொண்டேன்' என்று புறப்படுகிருன். இராமனுடைய விழுப்பொருள் இவ்வாறு இருத்தலின் அவன் எதிர்பேசாது உடன் புறப்படச் சித்தமான தில் புதுமை இல்லை.

ஆனுல் இளையபெருமாளைப் பொறுத்தமட்டில் நிலைமையே வேறு. அப்படியானுல் அவனுக்குத் தாய் தந்தை என்ற மதிப்பு இல்லையா? நன்ருக உண்டு. தாய் தந்தையரை உயிரினும் மேலாக மதிக்கின்றவன்தான் இலக்குவனும் அப்படியானுல் ஏன் இராமன் 'தந்தையை வாகை கொண்டோ? ஈன்ருளை வென்ரே இக்கதம் (கோபம்) தீர்வது?' என்று கேட்டபொழுதும் இலக்குவன் அது பற்றிக் கவலைப்படவில்லை என்ற வினு நியாயமானதே! இதில் ஒரே ஒரு சிறு வேறுபாடுதான் உண்டு. அதனைப் புரிந்துகொள்ளா விடின் விளைவது தவறேயாகும். இளையவனைப் பொறுத்தமட்டில் அவன் தாய், தந்தை, சோதரர்கள் யார் தெரியுமா? இதோ அவனே இராமனிடம் பேசும்போது இந்த உண்மையைக் கூறு கிருன்.

> 'நல் தாதையும் நீ! தனிநாயகன் நீ; வயிற்றில்
> பெற்ருயும் நீயே பிறர் இல்லை'.
>
> (நகர்—நீ—132)

இப்பொழுது புரிகிறதல்லவா? ஏன் இலக்குவன் தசரதனையும், கைகேயியையும், பரதனையும் மதிக்கவில்லை என்று! அவனைப் பொறுத்தமட்டில் சுமித்திரை அவனைப் பெற்றவள் என்பதைக் கூட ஏற்க மறுத்துவிட்டான்!. 'வயிற்றில் பெற்ருயும் நீ' என்று ஆண்மகனுகிய இராமனைப் பார்த்துக் கூறியது கூட வியப்பில்லை. அடுத்து ஒரு சொல்லைப் போட்டானே அதுதான் சிறப்பு. 'வயிற்றில் பெற்ருயும் நீயே; பிறர் இல்லை' என்ற சொற்கள் இலக்குவனுடைய அந்தரங்கத்தில் உள்ள விழுப்பொருள் யாது என்பதை நமக்குக் காட்டிவிடுகிறது. ஒரு தாய் ஏவினதை ஏற்றுக்கொண்டான் இராமன். ஆனுல் இலக்குவனைப் பொறுத்தமட்டில் இராமனுக்கு

ஆபத்து என்ருல் அவனுடைய தாய், தந்தை, தெய்வம் (தனி நாயகன்) ஆகிய அனைவருக்கும் ஒரு சேர ஆபத்து வந்துவிட்டதாக வல்லவா பொருள்! எனவே இராமன் கூறிய தசரதன், பரதன் கைகேயி என்பவர்கள் இராமனுக்குத் தந்தை, தம்பி, தாய் எனப் படுபவார்களே தவிர இலக்குவனைப் பொறுத்தமட்டில் இவர்கள் அனைவரும் அந்நியர்களே! அவன் தாய், தந்தை, தெய்வம் அனை வரும் இராமனே ஆதலின் அவன் தசரதனைப் போரிட்டுக் கொல்ல துணிந்ததில் தவறு இல்லையல்லவா? இவர்கள் அந்நியர்களாக ஆகவிட்டது மட்டுமன்று; பகைவர்களாகவும் ஆகிவிட்டனர். ஏன்? அவன் தாயும், தந்தையுமாக உள்ள இராமனுக்குத் தீமை புரிகின்றவர்களை அவன் எவ்வாறு பார்த்துக்கொண்டு பொறுமை யோடு இருக்க முடியும்? எனவேதான் அவன் தெய்வமாகிய இராமனுக்குத் தீமை நினைந்து செய்யத் துணிந்தவர்களை அழிக்க முற்பட்டால் அதில் யார் தவறு காண முடியும்? அவன் பகை என்று கருதுபவர்கள் துரதிர்ஷ்டவசமாக இராமனுக்குத் தாயும் தந்தையுமாக இருந்துவிட்டனர். அது ஒரு தற்செயல் (accident) இதற்காக இளையவன் என்ன செய்ய முடியும்? அவன் விழுப் பொருள் என்று கருதும் இராமனுக்கு வரும் தீமையைத் தடுக்க முற்படுகிருன். எனவே அவனுடைய கோபம் தவருனது என்று கூறமுடியாத நிலை. இதனை இராமனும் புரிந்துகொள்கிருன். அவன் எப்பொழுது புரிந்துகொண்டான்? 'பெற்ருயும் நீயே பிறர் இல்லை' என்று இலக்குவன் அடித்துப் பேசியபொழுதுதான் இராமன் இலக்குவனையும் அவனுடைய விழுப்பொருள் யாது என்பதையும் புரிந்துகொண்டான்.

புரிந்துகொண்ட இராமன் மற்ருென்றையும் தெரிந்து கொண்டான். தான் கூறிய வாதங்களில் இலக்குவன் கட்டுப்பட மாட்டான் என்பதனையும் இவனை இப்படியே விட்டால் விளைவது தீமையே என்பதையும் நன்கு தெரிந்துகொண்டான். அப்படி யானுல் அடுத்துச் செய்யவேண்டியது யாது? இலக்குவன் எதனைத் தனது விழுப்பொருள் என்று கருதுகிருனே, அதன் வழியியே சென்றுதான் அவனை மடக்கவேண்டும் என்ற உண்மை இராம னுக்கு நன்கு புலனுயிற்று. தனக்கு விழுப்பொருளாக உள்ள தாய், தந்தை, சோதரன் என்பவர்களைக் காக்க வேண்டுமானுல் இலக்கு வனை அடக்கவேண்டும். அவனை அடக்கவேண்டுமானுல் அவனு னுடைய விழுப்பொருளுக்கு ஊறு நேராமல் அதன் வழியே சென்று அதனை முடிக்கவேண்டும். இந்த வழி தெரிந்தவுடன் இராமன் தான் இதுவரைப் பேசிய முறையை மாற்றிக்கொண்டு விட்டான். தசரதனையோ, பரதனையோ குறித்துப் பேசினுல் இலக்குவன் கோபத்திற்கு எண்ணெய் ஊற்றியதுபோலாகிவிடும்.

ஆனல் அவர்களை விட்டுவிடவும் முடியாது. இதற்கு வழி என்ன? இதோ அற்புதமான வழியைக் கண்டு பேசுகிருன் மூத்தவன். 'தம்பீ! எனக்கு நல்ல அறிவுரைகளை அன்ருடம் கூறி நாளொரு மேனியும் பொழுது ஒரு வண்ணமுமாக வளர்த்த என் தந்தையின் கட்டளையை மீறி அரசை மறுபடியும் ஏற்பது எனக்குத் தக்கதன்று என்ற முடிவுக்கு நான் வந்துவிட்டேன். காரணம் என் விழுப் பொருள் அதுதான். உன்னைப் பொறுத்தமட்டில் உன் விழுப் பொருள் என் ஒருவனை மட்டுமே பொறுத்துள்ளது. அப்படியாணு யாளுல் உன்னுல் தாய், தந்தை,தெய்வம் என்று வழிபடப்படு கின்ற என் சொல்லைத் தட்டி நடப்பது உனக்கு முறையாகுமா? என் சொற்படி நடந்துகொண்டால் அதனுல் உனக்கு ஏதேனும் ஊனம் உண்டாகுமென்று நினைக்கிருயா? என்ற பொருளில்

> 'நான் சொற்கள் தந்து ஆண்டு, நாளும் எனை வளர்த்த
> தாதை
> தன் சொல் கடந்து ஏற்கு அரசாள்வது தக்கது அன்ருல்
> என் சொல் கடந்தால், உனக்கு யாது உளது ஊனம்? என்ருன்
> தென் சொல் கடந்தான், வட சொற் கடலுக்கு எல்லை
> தேர்ந்தான்
> (ந. நீ–132)

செல்லுஞ் சொல் வல்லானுகிய இராமன் ஒரு சில சொற் களைக் கூறுவதன்மூலம் தேவரும் மூவரும் செய்ய முடியாத காரி யத்தைச் செய்துவிட்டான். 'என் சொல்லைத் தட்டாமல் ஏற்ருல் உனக்கு அதனுல் என்ன இழுக்கு நேரப் போகிறது?' என்ற விணு வில் ஓர் ஆணையல்லவா அடங்கி இருக்கிறது. ஆம் இலக்குவ னுடைய விழுப்பொருளுக்கு மதிப்புக் கொடுக்கும் முறையில் அவனை முற்றிலுமாக ஆட்படுத்திவிட்டான் இராமன்.

இதன் விளைவு என்ன தெரியுமா?

> 'சீற்றம் துறந்தான்; எதிர்நின்று தெரிந்து செய்யும்
> மாற்றம் துறந்தான்; மறை நான்கு என வாங்கல் செல்லா
> நால் தென் திரை வேலையின், நம்பிதன் ஆணையாலே
> ஏற்றம்,தொடங்காக் கடலின் தணிவு எய்தி நின்ருன்'.
> (ந. நீ.–137)

உடனடியாக இலக்குவன், கோபம் இருந்தவிடம் தெரியாமற் போய்விட்டது! வார்த்தைக்கு வார்த்தை பதில் சொல்லும் வகை மறைந்துவிட்டது! அடங்கிய கடலைப்போல அடங்கி விட்டான் தம்பி. ஆம்! அவனுடைய விழுப்பொருளுக்கு (Values) அவனுல் வணங்கப்படும் அண்ணனே இப்பொழுது மதிப்புக் கொடுத்துவிட்டான். இலக்குவன் விழுப் பொருள் என்று எதனை

உயிரினும் மேலாகக் கொண்டிருந்தானே அதற்கு மதிப்புக் கொடுப்பதன்மூலம் இராமன் இலக்குவனை இன்னும் நெருக்கத் திற்குக் கொண்டுவந்துவிட்டான். இலக்குவன் இராம அனுஜனாக ஆகிவிட்டான். ஒவ்வொருவரும் தத்தம் விழுப்பொருளை விட்டுக் கொடுக்காமலே கூட உயிரினும் இனிய உறவுடன் இருக்க முடியும் என்பதைக் கம்பன் காட்டும் இடம் இது.

ஒரே மனிதனுடைய வாழ்க்கையில் புதிய நிகழ்ச்சிகள் அவ னுடைய பழைய விழுப்பொருள்களை மாற்ற உதவியாக இருக்க லாம். அந்த நிகழ்ச்சிகளைக் கண்ட அல்லது கேட்ட அனைவருக்கும் அவை ஒரே மாதிரியான எதிர்த் தாக்குதல்களைத் தரவேண்டும் என்று நினைக்கக்கூடாது. உதாரணமாகக் கற்பைப் பற்றித் தமி ழர்கள் எவ்வளவு உயர்வாகவும் இன்றியமையாத சிறப்பினை உடையதாகவும் நினைக்கிறார்களோ அதே போன்ற நினைவுடைய வர்தான் மகாத்மா காந்தியும். நவகாளியில் நடை உலாச் செல் கையில் அடிகளாருக்குப் பல கடிதங்கள் வந்தன. இந்து முஸ்லிம் கலவரத்தில் கற்பழிக்கப்பட்ட சகோதரிகள் பலர் கருவுற்றுள்ள னர் என்றும் அவர்களை என்ன செய்யலாம் என்றும் பலர் அடிக ளாரைக் கேட்டிருந்தனர். காந்திஜி என்ன பதில் எழுதினார் தெரி யுமா? ஆண்மை உடையவர்கள் என்று தம்மைக் கூறிக்கொள்ளு பவர் யாவரும் அந்தப் பெண்களை மணஞ் செய்து கொண்டு வாழ வேண்டும் என்று எழுதினார். பெரிய சனாதனிகள் என்று பறை சாற்றிக்கொண்டு கள்ள வாழ்க்கை வாழும் போலிகள் சிலர் ஆகா! காந்தி இந்து தர்மத்தை அழித்துவிட்டார் என்று காட்டுக் கூச்சல் போட்டனர். ஆனால் அடிகளாரின் அடிப்படை விழுப் பொருளையே மாற்றக்கூடிய மாபெரும் கொடுமை நடந்துவிட்ட நிலைமையில் அடிகளார் தம் விழுப்பொருளை மாற்றிக் கொண் டார். இவ்வாறு மாற்றிக்கொண்டதும் அந்தக் குறிப்பிட்ட நிகழ்ச்சி நடந்த அந்தக் குறிப்பிட்ட கால எல்லைக்கு மட்டுமே பொருந்தும். இம்மாதிரியாக தற்காலிக மாற்றம் நிகழ்வதும் உண்டு. இதன் எதிராக, நடைபெற்ற நிகழ்ச்சி காரணமாக நிலையான விழுப்பொருள் மாற்றம் ஏற்படுவதும் உண்டு. நிலை யான விழுப்பொருள் மாற்றம் ஏற்பட வேண்டுமானால் அதற்கு இரண்டு முக்கியமான சூழ்நிலைகள் வேண்டும். நிலையான விழுப் பொருளை அதுவரைக் கொண்டிருந்த ஒருவன் மாற வேண்டு மாயின் அவன் வளர்ச்சி அடைகிறான் என்பதையே அது குறிக்கும். அற்ப சொற்ப ஊதியங்கட்காகவோ, இலாபம் வருகிறது அல்லது வாழ்க்கையில் முன்னேறலாம் என்பதற்காவோ, பட்டம் பதவி கட்காகவோ விழுப்பொருளை விட்டுக்கொடுப்பவன் சாதாரண மனிதன். இன்னும் கூறவேண்டுமாயின் சாதாரண மனிதனும் ஒருபடி தாழ்ந்தவன்.

இரண்டாவது சூழ்நிலை எதிரே நடைபெறும் நிகழ்ச்சியைப் பொறுத்தாகும். அற்பமான ஒன்றுக்காக விழுப்பொருளை மாற்றிக் கொள்வது கீழ்மகன் வேலை என்று கண்டோம். இதன் எதிராக மிக உயர்ந்த ஒன்றிற்காக வேறு பயன் ஒன்றையுங் கருதாமல் விழுப்பொருளை மாற்றிக்கொள்வதும் உண்டு. இது மிக அருகி நடைபெறும் ஒன்றாகும். இதற்கும் கம்பனில் இடம் உண்டு.

ஆதி காவியமாகிய வான்மீகத்திலும் வங்காள இராமாயணம் போன்றவற்றிலும் வாலி என்ற பாத்திரம் சாதாரணக் குரங்காகவே படைக்கப்பட்டுள்ளது. உலக இலக்கியம் எதிலும்காணப் படாத முறையில் கம்பநாடன் வாலியையும் அனுமனையும் படைத்துள்ளான். வாலியின் தவ வலி, கல்வி முதலியவற்றிற்கு ஈடு இணையே இல்லை என்னும்படி படைக்கப்பட்டுள்ளான். கதை அனைவருக்கும் தெரியுமாதலின் இதனை வளர்த்தவேண்டிய தேவை இல்லை. வாலி இராமன் அம்பால் அடிபட்டு வீழ்ந்து கிடக்கின்றான். தன் மார்பையும் ஒருவனுடைய அம்பு துளைக்க முடியும் என்று அவன் கனவிலும் கருதினவன் அல்லன். எனவே மார்பைத் துளைத்துக்கொண்டு செல்ல முற்பட்ட இராமன் அம்பைத் தன் வாலாலும் காலாலும் பற்றி அது மேலே போகாமல் நிறுத்தி விட்டான். இராமன் அம்பை மேலே செல்லாமல் தடுத்து நிறுத்திய ஒரே பாத்திரம் இரமாயணம் முழுவதிலும் வாலி என்பவனேயாகும். வியப்பிலும், ஐயத்திலும் ஆழ்ந்துவிட்ட வாலி அந்த அம்பைத் தடுத்து நிறுத்தியதன் நோக்கம் அதை எய்தவன் யார் என்பதை அறிவதற்கேயாகும்.

அம்பில் பொறிக்கப்பெற்ற பெயர் இரண்டு எழுத்துக்களால் ஆயது. அதன் தன்மையைக் கூற வந்த கவிஞன் 'செம்மை சேர் நாமம்' என்று கூறுகிறான். அந்தப் பெயரைக் கண்டவுடன் வாலிக்கு ஆத்திரமோ சினமோ முதலில் தோன்றவில்லையாம். அதற்குப் பதிலாக வெட்கப்பட்டானாம். ஏன் தெரியுமா? சூரிய குலம் இராமன் பிறந்த காரணத்தால் நல்லறம் துறந்துவிட்டது என்றுதான் நாணம் அடைந்தான். தந்தை சொன்னான் என்பதற்காக வனத்திடை வந்தவன் கேவலம் என் பொருட்டால் வில் அறம் துறந்துவிட்டானே! என்று நினைத்தவுடன் சிரிப்பு வந்துவிட்டதாம் வாலிக்கு. இவ்வாறு வாலி நினைக்கக் காரணம் யாது? சுத்த வீரனாகிய வாலி வீரத்தைப்பற்றிக் கொண்டிருந்த விழுப்பொருளின் அடிப்படையில் பிறந்தது இந்நகை! தூய வீரம் தேவையற்ற இடத்தில் போர் செய்யத் துணியாது; காரணமில்லாமல் ஒருவனைக் கொல்ல விரும்பாது. எல்லாவற்றையும் விட மறைந்து நின்று ஒருவன் மேல் சுத்த வீரன் அம்பு போட

மாட்டான். இவை அனைத்தும் வாலியின் மனத்தில் தூய வீரம் பற்றிக் கொண்டிருந்த விழுப்பொருள்கள் (Values).

இத்தகைய விழுப்பொருள்களை உயிரினும் மேலாக மதித்திருந்தான் வாலி. இந்த மனநிலையில்தான் இராமனைப்பற்றி அவன் எடைபோட்டிருந்தான். அவன் மனைவியாகிய தாரை, இராமன் சுக்ரீவனுக்குத் துணையாக வந்துள்ளான் என்று கூறியதைக் கேட்ட வாலி பெருங்கோபங்கொள்கிறான். ஏன் தெரியுமா? அவன் எவ்வெவற்றை உயிரினும் மேலான விழுப்பொருள்கள் என்று கருதி இருந்தானோ அவற்றைக் கொண்டே தசரதன் புத்திரனை எடைபோட்டிருந்தான். வாலி, தன் குறிக்கோளாக இருந்த விழுப்பொருள்களுக்கு (Values) நேரிய இலக்கணமாக உள்ளவன் இராமன் என்று எண்ணியிருந்தான் வாலி. ஆதலால் தான் சுக்ரீவனுக்குத் துணையாக இராமன் வந்துள்ளான் என்று கூறிய தாரையை (வாலியின் மனைவி)ப் பெரிதும் கோபித்துக் கொண்டான் வாலி. அத்துணைத்தூரம் தன் விழுப்பொருளுக்கு ஒரு வடிவமாக அமைந்தவன் இராமன் என்று நினைத்திருந்த வாலிக்கு இப்பொழுது இராமன் அம்பைக் கண்டவுடன் பெருத்த இடி விழுந்தது போலாயிற்று. அவன் கருது கோளாக இருந்த விழுப்பொருள் கீழே விழுந்து நொறுங்கிவிட்டது.

எனவேதான் நாணத்தால் சிரித்துவிட்டான் வாலி. இராமன் பெயர் அம்பில் பொறித்திருந்தாலும் அதைப் பார்த்தவுடன் நம்பத் தயாராக இல்லை வாலி. தன் கண்களே தன்னை ஏமாற்றுகின்றனவோ என்றுகூட நினைத்துவிட்டான். பலமுறை பார்க்கிறான். கண்ணால் கண்டதை மனம் நம்ப மறுக்கிறது! இந்த இக்கட்டைக் கவிஞன் அற்புதமாகப் படம் பிடித்துக் காட்டுகிறான். 'செம்மை சேர் நாமம் தன்னைக் கண்களால் தெரியக் கண்டான்' (வாலி—79) என்பது கம்பன் வாக்கு. கண்களால் கண்டான் என்றாலே போதுமே. தெரியக் கண்டான் என்று வேறு கூறவேண்டுமா? ஆம் மனம் முதலில் ஏற்க மறுத்து இறுதியில் வேறு வழி இல்லாமல் ஏற்பதைத்தான் இவ்வாறு கவிஞன் பாடிக் காட்டுகிறான்.

இராமனைப்பற்றி வாலி என்ன என்ன நினைத்திருந்தான் என்பதை இப்பொழுது நினைவுக்குக் கொண்டுவர வேண்டும். ஒன்று தனக்குக் கிடைத்த அரசைத் துச்சம் என நினைத்துத் தம்பிக்கு வழங்கியவன். இரண்டு அத்தகையவன் வந்த இடத்தில் அண்ணன் தம்பியின் சண்டையில் தலையிடமாட்டான். மூன்றாவது தனக்கும் அவனுக்கும் எவ்விதப் பகையும் இன்மையால் தன்னிடம் போர் தொடுக்கமாட்டான். நான்காவது சுத்த வீரனாகிய

இராமன் நேர்நின்று பொருவானே தவிர மறைந்து நின்று அம்பு போடக் கனவிலும் கருதமாட்டான். இந்த நான்கு பண்புகளும் இவற்ருல் தோன்றிய விழுப்பொருள்களும் இப்பொழுது நொறுங் விட்டன.

இதனுல்தான் இராமன் தன் எதிரே வந்தவுடன் வாலி அவனை ஏசத் தொடங்குகிருன். இராமன் அவன் கண் எதிர் வந்து தந்த காட்சியைக் கவிஞன் வேறு ஒரு காரணத்திற்காக விரிவாகக் கூறுகிருன்.

''கண்ணுற்ருன் வாலி கார்முகில் கமலம் பூத்து
மண் உற்று வரிவில் ஏந்தி, வருவதேபோலும் மாலை
புண் உற்றது அனைய் சோரி பொறியொடும் பொடிப்ப
நோக்கி
எண்ணுற்ருய்! என் செய்தாய்? என்று ஏசுவான்
இயம்மறுற்ருன்
(வாலி—83)

கார்முகில் கமலம் பூத்து மண் உற்று வரிவில் ஏந்தி வருகின்றது போன்ற திருமாலைக் கண்ணுற்று....நோக்கி.... ஏசுவான் இயம்பலுற்ருன் என்று இயைத்துக் காண்டல் வேண்டும். மாபெரும் தவறு செய்துவிட்டான் இராமன் என்று நினைத்துச் சூரியகுலமே இவனுல் வழிபட்டுவிட்டது என்று வருந்தும் வாலி இராமனைக் கண்டான் என்று கூறவந்த கவிஞன் 'கார்....மாலை' என்று கூறுவது பொருந்துமா? சாதாரண நிலையில் இது பொருந்தாதுதான். கவிஞன் கூறுகின்ற இந்தக் காட்சி வாலியின் கண்ணில் பட்டிருந்தால் ஏசுவானு? ஏச மனம் வருமா? உறுதியாக வாராது! அப்படியானுல் கவிஞன் தேவை இல்லாமல் முன் இரண்டு அடிகளில் பரம்பொருளைப் பற்றிய விளக்கம் தரக் காரணம் என்ன? பாடுபவன் கவிச் சக்கரவர்த்தி! எனவே நின்று நிதானித்துக் காண்டல் வேண்டும். நாம் நின்று நிதானித்துப் பொருள் காணவேண்டும் என்பதற்காகவே கவிஞன் இரண்டு சொற்களை இப் பாடலில் பெய்துள்ளான். கண்ணுற்ருன் என்று தொடங்கி நோக்கி என்று முடித்துள்ளான். இந்த மூன்று அடிகளும் கவிஞன் கூற்று. கண்ணுற்ருன் என்ருல் கண்ணிஞற் கண்டான் என்று பொருள்படும். நோக்கி என்ருல் கருத்திஞல் ஆராய்ந்து என்று பொருள்படும். எனவே எதிரே வந்து நிற்பவனைக் கண்ணிஞல் முதலில் கண்டான்; பிறகு கருத்திஞல் நோக்கிஞன். இவை இரண்டும் உடனடியாக நிகழ்ந்த செயல்கள் என்ருலும் இவற்ருல் விளைந்த பயன்கள் வெவ்வேருனவை. கை, கமலம், வாய் கமலமாக உள்ளவனைக் கண்ணிஞல் கண்டான். அழகே வடிவானவனைக் கண்ணிஞல் கண்டால் ஈடுபாடுதானே ஏற்பட வேண்டும்.

இந்தப் பார்வை அவனிடம் ஈடுபாட்டை ஏற்படுத்த முயல்கிறது. ஆனால் இந்த அழகன் செய்த அடாத செயலை சிந்தித்தவுடன் சினம் பொங்குகிறது. இந்தச் சிந்தனை ஓடிய முறையைத்தான் கவிஞன் 'நோக்கி' என்ற சொல்லால் குறிக்கிறான். ஏன் இவ்வாறு ஒரே பாடலில் இந்த முரண்பாட்டைக் கவிஞன் கூறவேண்டும்? பின்னர் வாலியின் மனமாற்றமாகிய பூட்டின் திறவுகோலாக அமைந்துள்ளது இந்தப் பாடல்தான்.

ஒருவனுடைய வடிவில் ஈடுபாடும் அவன் செய்லில் சினமும் உண்டாவது இயற்கையே. இந்த முரண்பாடு தோன்றினால் இறுதியில் இவை இரண்டில் ஒன்று வெற்றிபெறும். ஒன்று அந்த ஈடுபாடு மிகுந்து சினம் தணிந்துவிடும். இன்றேல் சினம் மேலோங்கி ஈடுபாட்டை அழித்துவிடும். ஒன்று மட்டும் உறுதி. வாலியைப் பொறுத்தமட்டில் கண்ணிற்கண்ட வடிவில் ஈடுபாடும் நோக்கியதால் சினமும் தோன்றியது உண்மை. இந்த வினாடி, போராட்டத்தில் அவன் ஈடுபாட்டை மீதூர்ந்து சினம் வெற்றி பெற்றுவிட்டது. அதனால்தான் ஏசத் தொடங்கிவிட்டான்.

இதேபோன்ற ஒரு சூழ்நிலையை மற்றோர் இலக்கியத்திலும் காணலாம். நம்பியாரூராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருமணத்தில் கிழவேதியன் வடிவில் இறைவன் வருகிறான். 'உனக்கும் எனக்குமிடையே பெரிய வழக்கு ஒன்று உண்டு. அதைத் தீர்த்தால் ஒழியத் திருமணத்தை நடத்த ஒட்டேன்' என்றான் கிழவேதியன். வழக்கு என்ன என்று கேட்டவுடன் 'இந்த ஆரூரனும் இவன்மரபுளோரும் எனக்கு அடிமை என்று வாதிட்டான். அதிசயமான இந்த வழக்கில் பிரதிவாதியாக நிற்பவர் திருமண மாப்பிள்ளையான நம்பியாரூர். கிழவரைக் கண்ட மாத்திரத்தில் ஆரூரருக்கு அவர்பால் எல்லையில்லாத ஈடுபாடு ஏற்படுகிறது. ஆனால் அந்தக் கிழவன் பேசும் வார்த்தைகள் எல்லையற்ற கோபத்தை உண்டாக்குகிறது. இந்த முரண்நிலையைக் கூறவந்த சேக்கிழார் பெருமான் சற்று வெளிப்படையாகவே இதனைக் கூறுகிறார்.

''கண்டது ஓர் வடிவால் உள்ளம் காதல் செய்து உருகா நிற்கும்

கொண்டது ஓர் வித்தவார்த்தை கோபமும் உடனே யாக்கும்

(தடு, விரச)

பார்த்த வடிவில் ஈடுபாடும் செயலில் கோபமும் வருதல் உண்டு என்பதைக் காட்டவே இந்த எடுத்துக்காட்டு. இதன் விளைவு என்ன தெரியுமா? கோபம் முதலில் வெற்றிபெறும்; அதற்குரிய ஏச்சு நடைபெறும் பொருளைகூட கண்ணிற் கண்ட காட்சி மனத்தினுட் சென்று மனமாற்றத்தை உண்டாக்கிவிடும்.

இப்பொழுது மறுபடியும் வாலியிடம் சென்றால் கம்ப நாடன் ஏன் கண்ணுற்றான் என்று தொடங்கி, இறுதியில் 'நோக்கி ஏசுவான் இயம்பலுற்றான்' என்று முடிக்கிறான் என்பதை அறிந்து கொள்ள முடியும். பின்னர் அந்த வாலியே அவ்வளவு கோபத் திலுங்கூட

'உங்கள் குலத்து உதித்தோர்கட்கு எல்லாம்—
ஓவியத்து எருதவொண்ணா உருவத்தால்!' (86)

என்று விளித்துப் பேசுகிறான் என்றால் அந்த வடிவழகில் வாலி எவ்வளவு தூரம் சிக்கித் தவிக்கிறான் என்பது விளங்கும். இது கருதித்தான் போலும் வியாக்யான கர்த்தராயுங்கூட 'ஒரு நாள் கண்டதால் அந்த வடிவ அழகுபடுத்தும்பாடு இதுவாயிற்றிரே' என்று கூறிப் போனார். இந்த அழகில் ஈடுபட்டான் வாலி என் பதைக் குறிப்பால் கூறவந்த கவிஞன் 'கண்ணுற்றான்' என்று கூறிப் பாடலைத் தொடங்குகிறான். இதனை அடுத்து இராமன் செய்த செயலால் கோபமும் நாணமும் ஒருங்கே கொண்டமையின் ஏசத் தொடங்குகிறான்.

ஏசத்தொடங்கிய வாலி ஒரேயடியாக ஏசிவிடவும் இல்லை. எள்ளி நகையாடல் ஏசல், இரக்கப்பட்டு மொழிதல் முதலிய பல் வேறு வழிகளிற் பேசுகிறான். 'நீ பரதனுக்கு அண்ணனாகப் பிறந் தாயே!' 'தேவியைப் பிரிந்த பின்னைத் திகைத்தனை போலும் செய்கை; வலியவர் மலிவு செய்தால் புகழின்றி வசையும் உண்டோ' என்பன போன்றவை என்பால் குறிப்பில் எழுந்தவை. 'இலங்கை வேந்தன் முறையல செய்தான் என்று முனிதியோ?— முனிவிலாதாய்!' 'வாலியைப் படுத்தாங்காலை, அறவேலியைப் படுத்தாய் விரல் வீரனே! என்பன போன்றவை ஏசல். 'வீரம் அன்று விதி அன்று நின் மண்ணினுக்கு என்னுடல் பாரமன்று; பகையன்று' 'ஒளித்து நின்று, விரிகிலை குழைய வாங்கி வாய் அம்பு மருமத்து எய்தல் தருமமோ? பிறிது ஒன்று ஆமோ?' என்பன போன்றவை இரக்கத்திற் பிறந்தவை. இந்த ஏசல்கள் மாறி மாறி மின்னல் வேகத்தில் வந்தன. இராமன் ஒன்றும் விடை கூறக் கூடிய நிலையில் இல்லை. ஒருவேளை அவனுடைய முகமண் டலமே இரக்கத்திற்கு உரியதாக இருந்திருக்கும் போலும்.

வாலி செய்த தவறுகள் யாவை என்று இராமன் அடுக்கிக் கூறவும் வாலி ஒரே வாக்கியத்தில் அவற்றை அடித்து விடுகிறான். 'இராமா! நீ பேசும், அறம், பிறன்மனை நயத்தல் என்ற விழுப் பொருள்கள் உன்னுடைய மானிட சமுதாயத்திற்கு ஏற்ற விழுப் பொருள்கள். அந்த நீதிகளை எங்கள் குரங்குச் சமுதாயத்திற்கு ஏற்றி நியாய அநியாயம் காண முற்படுவது தவறு என்கிறான்.

6

அடுத்து அவை ஒருபுறம் இருக்கட்டும். போர்க்களத்தில் நேர் நின்று போர் புரியாமல் புதர் மறைந்து வேட்டுவன் போல ஏன் அம்பு எய்தாய் என்னும் பொருளில் 'செருக்களத்து உருத்து வெவ் விய புளிஞர் என்ன, விலங்கியே மறைந்து, வில்லால் எவ்வியது என்னை? என்றான்'' (124) இந்த வினா எங்கே வந்துவிடுமோ என்று அஞ்சிக்கொண்டிருந்தான் இராகவன். இவ்வினா வந்த வுடன் இளையபெருமாள் அண்ணனைக் காப்பாற்ற முனைந்து 'எதிரே வந்தால் நீயும் அடைக்கலம் என்று வந்துவிட்டால் என்ன செய்வது என்று கருதியே மறைந்து நின்று எய்தான்' என்று விடை கூறுகிறான். இந்த விடையை இன்று படிக்கின்ற நமக்குக் கூட சிரிப்புத்தான் வருகிறது என்றால் அன்று இதனைக் கேட்ட வாலிக்கு எவ்வாறு சிரிப்பு வராமல் இருந்திருக்கும்?

வீடணன் அடைக்கலம் என்று வந்தபொழுது 'இன்று வந் தான் என்று உண்டோ? எந்தையை யானையை முன்னம் கொன்று வந்தான் என்று உண்டோ?' (வீ. அடை 106) எந்த நிலையிலும் அடைக்கலம் என்று வந்தவனை ஏற்பதே முறை என்று கூறும் இராமன், வாலி அடைக்கலம் என்று வந்துவிட்டால் மட்டும் கலங்கிவிடவா போகிறான்? எனவே இளையவனுடைய இந்த சமாதானம் நொண்டிச் சமாதானம் என்பது மட்டுமன்று. நகைப்புக்கும் இடமான ஒன்றாகும்.

அப்படியானால் இந்த நகைப்புக்கு இடமான சமாதானத் தைக் கேட்டவுடன் வாலி மனம் மாறிவிட்டான் என்றல்லவா கவிஞன் கூறுகிறான்.

'கவிக்குலத்து அரசும் அன்ன கட்டுரை மனத்துட்
கொண்டான்
அவியுறு மனத்தன் ஆகி', அறத்திறன் அழியச் செய்யான்
புவியுடை அண்ணல்' என்பது எண்ணினன் பொருந்திமுன்னே
செவியுறு கேள்விச் செல்வன் சென்னியின் இறைஞ்சிச்
சொன்னான்

(வா. வ. 126)

சற்று நின்று, நிதானித்தால் ஓர் உண்மை விளங்காமற் போகாது. வாலி திடீரென்று முற்றிலும் மனம் மாறிவிட்டான். இராமன் காட்டிய ஏதுக்களால் மனம் மாறாதவன் இலக்குவன் கட்டுரையால் மாறினான் என்பது சரியன்று. ஆனாலும் மாறினான் என்பது உண்மை. அப்படியானால் மாறினமைக்குரிய காரணம் யாதாக இருக்கும் என ஆராய வேண்டும். இங்கேதான் கவிஞன் பற்பல விழுப்பொருள்களை நேரிடையாகவும் குறிப்பாகவும்

புகுத்திக் காட்டுகிருன். வாலி மனம் மாற வேண்டுமாயின் அவன் இதுவரை கொண்டிருந்த பார்வையும் எண்ணங்களும் மாறி இருக்கவேண்டும். நிகழ்ச்சிகள் நிகழ்ந்துவிட்டமையின் அவற்றில் மாற்றம் என்பது இயலாத காரியம். அப்படியானுல் இந்த நிகழ்ச் சியை இதுவரை வாலி கண்ட விதம் வேறு; இப்பொழுது காணும் விதம் வேறு. ஒருவன் அடிபட்டு வீழ்ந்து இறந்துவிட்டான் என்று வைத்துக்கொள்வோம். பிறரிடம் பட்ட அடியால் இறந்துவிட் டான் என்று கருதிஞல் அந்தப் பிறர்மேல் எல்லையற்ற சினம் கொள்கிருேம். அதற்கு மாருக பிணத்தை அறுத்துக் காண்பவர் பட்ட அடியால் இறக்கவில்லை. இருதயக் கோளாருல் இறந்து விட்டார் என்று சான்று கூறிவிட்ட பிறகு அடித்தவரிடம் நாம் வெறுப்பும் சினமும் கொள்ளமாட்டோம் அல்லவா? இதே உவமை யைச் சற்று மாற்றிக்கண்டால் மற்ருேர் உண்மையும் நன்கு புலப் படும். மருத்துவர் அறுவை சிகிச்சையில் நோயாளி இறந்தாலும் நாம் மருத்துவனைக் குறை கூறுவதில்லை

அதுபோல இப்பொழுது வாலி நினைக்கத் தொடங்கிவிட் டான். அறத்தின் மூர்த்தியாகிய இராமன் அறத்திறன் அழியும் படியாக நடந்திருக்கமாட்டான் என்பதை முதலில் மனத்தில் வாங்கிக்கொண்டான். இந்த எண்ணம் தோன்றியதற்குக் கார ணம் கூறவந்த கவிஞன் 'அன்ன கட்டுரை மனத்துள் கொண்டான்' என்று நுணுக்கமாகக் கூறிவிட்டுவிட்டான். அன்ன கட்டுரைஎன்ற சொற்களுக்கு முதற் பாடலில் உள்ள இலக்குவன் கூறிய சமா தானம் என்று பொருள் கொண்டுவிட்டால் பெரிய இடர்ப்பாடு நேர்ந்துவிடும். இந்த வார்த்தைகளாலா வாலி மனம் மாறிவிட் டான் என்ற விஞவிற்கு விடை கூற முடியாமற் போய்விடும். எனவே அன்ன கட்டுரை எனக் கவிஞன் கூறுவது ஏதோ ஒன்றை நினைவூட்டவேயாகும் என்பதை அறிதல் வேண்டும். அது யாதாக இருக்கும் என்று ஆராயுமுன்னர் இன்னுஞ் சில அடிப்படைகளை யும் நினைவுகூற வேண்டும்.

முதலாவது வாலி இராமனைப்பற்றிக் கொண்டிருந்த மிக உயரிய எண்ணங்கள். இரண்டாவது தாரையிடம் இராமனைப் பற்றி அவன் கூறிய தகவல்கள். இவை இரண்டும் கூடி, வாலி யின் அகமனத்திலும் புற மனத்திலும் இராமனைப் பற்றிய மிக உயர்ந்த எண்ணங்களே நிறைந்திருந்தன என்பதைக் காட்டு கின்றன. மூன்ருவது நிலையில் 'கார்முகில் கமலம் பூத்து மண் ணுற்று வரிவில் ஏந்தி வருகின்ற' காட்சியைக் கண்ணுற்ருன் வாலி. இதற்கு ஒரு விஞடி முன்னர்த்தான் 'மும்மை கால் உலகுக்கு எல்லாம் மூல மந்திரத்தை' கண்களில் தெரியக் கண்டான். அதாவது

''முன்னம் அவனுடைய நாமம் கேட்டான்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணங் கேட்டான்
நாமம் கண்களால் தெரியக் கண்டான்.

அடுத்துக் கமலம் பூத்து வருவதைக் கண்ணுற்ருன். நான் காவதாக அதே இராமன் அடிபட்ட வாலியிடம் சில வார்த்தைகள் கூறினன். தான் அவனேக் கொன்றதற்குச் சமாதானமாக இராமன் இவற்றைக் கூறினுலும் இதிலுள்ள தத்துவம் வாலியின் அகமனத்துள்ளுரைத்தது.

''பொறியின் யாக்கையதோ? புலன் நோக்கிய
அறிவின் மேலது அன்ரே அறத்து ஆறுதான்?
நெறியும் நீர்மையும், நேரிது உணர்ந்த நீ
பெறுதியோ, பிழை உற்றுறு வெற்றிதான்?
'நன்றி தீது என்று இயல் தெரிநல் அறிவு
இன்றி வாழ்வது அன்ரே விலங்கின் இயல்?
நின்ற நல்நெறி, நீ அறியா நெறி
ஒன்றும் இன்மை, உன் வாய்மை உணர்த்துமால்!
'தக்க இன்னன, தசரதன இன்ன என்று
ஒக்க உன்னலர் ஆயின், உயர்ந்துள
மக்களும் விலங்கே; மனுவின் நெறி,
புக்கவேல் அவ்விலங்கும் புத்தேளிரே?' ''

(வா—வ—116, 1920)

நடைபெற்ற உரையாடற் போட்டியை மறந்துவிட்டு இச் சொற்களைப் படித்தால் ஓர் உண்மை விளங்கும். இராமன் வாலிக்கு உபதேசஞ் செய்த பகுதியாகும். இது தன் செய்கைக்கு சமாதானங் கூறும் முறையில் இராமன் இதனைக் கூறினுலும் உண்மையில் இந்த உபதேசம் வாலியின் அகமனத்தில் சென்று தைக்கவேண்டும் என்று இராகவன் கருதினன் போலும்!

உண்மையிலேயே இச்சொற்கள் வாலியினுடைய வெறுப் புணர்ச்சி நிறைந்த புறமனத்தை ஊடுருவிச் சென்று அவனுடைய அகமனத்தில் ஆழப் பதிந்துவிட்டது. 'அன்னகட்டுரை கருத்தில் கொண்டான்' என்று கவிஞன் கூறுவது இதனையே யாகும். இச் சொற்கள் அகமனத்தில் சென்று பதிந்தவுடன், வாலி இதுவரைக் கொண்டிருந்த விழுப்பொருள்கள் (Values) முற்றிலும் மாறத் தொடங்கிவிட்டன.

'தக்க இன்னன' தகாத இன்ன என்று ஒக்க உன்னவேண்டும் என்ருல் இராமன், தக்கவை, தகாதவை என்பவைகூட ஒருவன் மன வளர்ச்சிக்கு ஏற்ப மாறுபடும். சூழ்நிலைக்கு ஏற்பக்கூட மாறு

படும். உதாரணமாக ஒருவனுக்கு தந்தையானவன் கடவுளுக்குச் சமமானவன். தந்தையை ஒருவன் தெய்வமாக மதித்துப் போற்றி வழிபட வேண்டும். ஆனல் அந்த ஒருவன் துறவியாக மாறி விட்டால் இதே தந்தை அத்துறவியின் காலில் விழுந்து வணங்க வேண்டும். விழுப்பொருள் சூழ்நிலையால் மாறிவிடக் காண்கிறோம்.

பகை பாராட்டுபவனுடன் மட்டுமே போர் புரிய வேண்டும், காரணமில்லாமல் போர் புரியக்கூடாது, நேரே நின்றுதான் போர் புரியவேண்டும் என்ற இவை எல்லாம் விழுப்பொருள்கள்தான். எப்பொழுது? ஒரு நிலேயில் இருக்கும்பொழுது இவை விழுப் பொருள்கள். சாதாரண விருப்பு வெறுப்புக்கள் நிறைந்த சராசரி மனிதனுக்கு இந்த உலக வாழ்க்கையில் ஈடுபட்டிருப்பவனுக்கு இவை எல்லாம் சிறந்த விழுப்பொருள்கள் (Values) என்பதை மறக்க முடியாது.

ஆனல் பகை என்ற ஒன்று உண்டா? யார் பகைவர்? யாருக்கு யார் பகை? உயிர்கள் மற்ற உயிர்களுடன் பகைப்பது முறையா? காரணம் இல்லாமல் போர் புரியக்கூடாது என்றல் காரணம் இருந்தால் மட்டும் போர் புரியலாமா? மாற்சரியமே கூடாது என்ற பின் பகைவர், உறவினர் என்று யாருமே இருக்க முடியாதே! அப்படி இருக்க நேர் நின்று போரிடுதல், மறைந்து நின்று போரிடுதல் என்பவை அர்த்தமற்ற வெற்றுரைகள் அல்லவா? விருப்பு வெறுப்பு இல்லாமல் சமதிருஷ்டியுடன் இருப் பவன் ஒருவனேக் கொல்கிறன் என்றல் அது அறுவை மருத்துவன் செய்யும் ஆப்பரேஷன் போன்றதல்லவா? அறுவை மருத்துவம் செய்யும்பொழுது நோயாளி இறந்துவிட்டான் என்றல் யாரே னும் மருத்துவனேக் குறை கூறுவார்களா? இம்மாதிரிக் கோணத் தில் நின்று நடைபெற்ற நிகழ்ச்சிகளே வாலி ஆயத்தொடங்கி விட்டான். அதற்குரிய மனப்பக்குவத்தை அவன் இப்பொழுது பெற்றுவிட்டான். அந்தப் பக்குவம் அவனுக்கு வரக் கீழே கொடுக்கப்பெற்றுள்ளவை துணைபுரிந்தன.

(1) இராமனேக் காணுமுன் அவன்மாட்டு வாலி கொண் டிருந்த பெருமதிப்பு.

(2) மும்மைசால் உலகுக்கெல்லாம் மூலமந்திரத்தைக் கண் களில் தெரியக்கண்டது.

(3) கமலம் பூத்த கார்முகிலேக் கண்ணுற்றது.

(4) இராமன் சொற்களால் செய்த உபதேசம்.

இந்த நான்கின் எதிரே, இராமன் மறைந்து நின்று அம்பு எய்ததும், நியாய அநியாயங்களும், போர் அறம் எனக் கூறப்

பெற்ற சட்டதிட்டங்களும் பொடி சூரணமாகிவிட்டன. இந்த நான்கும் சித்திக்குமுன்னர் இவை பெரிய விழுப்பொருள்கள். இந்த நான்கும் சித்தித்த பிறகு அனைத்தும் பிள்ளை விளையாட்டு. எனவே அவற்றிற்கு எவ்வித மதிப்பும் தர வாலி தயாராக இல்லை. ஒரு கோடு எவ்வளவு பெரியது என்று நினைத்தாலும் அதனையடுத்து மற்றொன்று அதைவிட நீளமாகப் போட்டுவிட்ட பிறகு பழைய கோடு மதிப்பை இழந்துவிடுதல் போல இப்புதிய பார்வையில் பழைய விழுப்பொருள்கள் சிறப்பு இழந்துவிடுகின்றன. இப்புதிய பார்வை வருமுன்னர் அந்த் விழுப்பொருள்கள் மிகப் பெரியவை; மிக உயர்ந்தவை. புதிய பார்வை வந்துவிட்ட பிறகு அவ்விழுப்பொருள்கள் மிக அற்பமானவையாய் மிகச் சிறியனவாக ஆகிவிட்டன. இத்தனையும் மனத்துட் கொண்டு வாலியினுடைய மாற்றத்தைக் கவிஞன் கூற முற்படுகிறான். ஆம்! வாலி முற்றிலும் மாறிவிட்டான். அதாவது வாலி அதுவரைக் கொண்டிருந்த விழுப்பொருள்கள் அனைத்தும் மாறிவிட்டன. எனவே சிறியவையாக மாறிவிட்ட அந்தப் பழைய விழுப்போருள்களை இப்பொழுது வாலி நினைக்கக்கூட விரும்பவில்லை என்கிறான் கவிஞன். 'சிறியன சிந்தியாதன்' என்ற அடைமொழியை வாலிக்குத் தருகிறான் கவிஞன்.

வாலியின் விழுப்பொருள்கள் மாறிவிட்டன என்பதை எவ்வாறு அறிய முடிகிறது? எந்த இராமனை! 'பரதன் முன் தோன்றுயே!' என்று ஏசினானோ அந்த இராமனை இதோ பேசுகிறான்.

''தாய் என உயிர்க்கு நல்கி, தருமமும், தகணம், சால்பும்
நீ என நின்ற நம்பி! நெறியினின் நோக்கும் நேர்மை
நாய் என நின்ற எம்பால் நவை அற உணரலாமே?
தீயென பொறுத்தி!'' என்றான்—சிறிய்ன ' சிந்தியாதான்'
(வாலி—வ. 127)

இராமனைத் தாய் என்று கூறுவதோடு அமையாமல் தருமம், தகவு, சால்பு என்பவற்றின் வடிவம் என்றுங் கூறுகிறான்.

யார் வழிற்றைக் கிழிக்கிறார்கள் என்று அறிந்துகொள்ளாமல் கிழிக்கப்படும் செயலை மட்டும் பார்த்த ஒருவன் இது கொலை என்று கூறுகிறான். சில விநாடிகளில் கிழிப்பவர் மருத்துவர் என்று தெரிந்தவுடன் அன்புள்ளங் கொண்ட மருத்துவர் என்று பேசுகிறான். இரண்டிலும் நடைபெறுவது அறுவைதான் என்றாலும் இரண்டிற்கும் இடையே விழுப்பொருள் மாறிவிடுகிறது. இதே நிலையில் வாலி இருந்தமையின் விழுப்பொருளில் மாற்றங் கண்ட பிறகு சிறியன சிந்தியாமல் நடைபெற்ற நிகழ்ச்சியை நோக்கினான் உடன் அதன் சிறப்புத் தெரியத் தொடங்கிற்று. இராமனைத் தாய் என்றும் சால்பு ஊன்றிய தூண் என்றும் பேசத் தொடங்கிவிடு

கிறான். முன்னர் விழுப்பொருள்களாகக் காட்சியளித்தவை இப்பொழுது அற்பமாகத் தோன்றத் தொடங்கிவிட்டன. அவற்றைச் சிறியன என்று கூறுகிறான் கவிஞன். வாலியைச் 'சிறியன சிந்தியாதான்' என்று கூறுவதன் பொருள் இதுவேயாகும். எனவே வாலி திடீரென்று மனம் மாறக் காரணம் இலக்குவன் தந்த விடையன்று. இராகவன்பால் பெற்ற உபதேசத்தால் வாலி திடீரென்று வளரத் தொடங்கிவிட்டான். அவனுடைய இந்த ஆன்ம வளர்ச்சியால் புதிய ஒரு பார்வையை அல்லது கண்ணோட்டத்தைப் பெறுகிறான். எல்லையில்லாத ஆனந்தத்தில் அமிழ்ந்துவிடுகிறான். இந்த ஆன்மிக வளர்ச்சியில் நின்று அதனால் பெற்ற புதிய கண்ணோட்டத்துடன் இந்த உலகைப் பார்க்கிறான். இந்த உலகில் உள்ள சட்டதிட்டங்கள், விழுப்பொருள்கள் ஆகிய அனைத்தும் இப்பொழுது அற்பமானவையாக அவன் கண்ணுக்குப் படுகின்றன.

முன்னர் உலகியல் நிலையில் நின்று பார்க்கையில் சில கட்டுப்பாடுகள் இருந்தன. தூரப் பார்வை இல்லை. எதிர்காலத்தை அறிய முடியவில்லை. விருப்பு வெறுப்புகள் நிறைந்திருந்தன. நண்பர், பகைவர், நொதுமலர் என்ற வேறுபாடுகள் இருந்தன. இன்னுங் கூறவேண்டுமானால் நன்மை—தீமை; பகை—நட்பு; ஒளி—இருள்; பாவம்—புண்ணியம் என்ற இரட்டைகள் இப்பொழுது அர்த்தமற்றவையாய்விட்டன. கீதையின் வழியில் கூறவேண்டுமானால் வாலி 'ஸ்திதப் பிரஞ்ஞ'னாகி விட்டான். 'சமதிருஷ்டி' பெற்றுவிட்டான். எனவேதான் பழைய விழுப்பொருள்கள் சிறியனவாகிவிட்டன. இப்பொழுது புதிய விழுப்பொருள்களைப் பெற்றுவிட்டான் (New Values) இந்தப் புதிய விழுப்பொருளை எவ்வாறு பெற்றான்? எப்பொழுது பெற்றான்? இதோ அவனே விடை கூறுகிறான்.

''ஏவுகூர் வாளியால் எய்து, நாய் அடியனேன்
ஆவிபோம் வேலைவாய், அறிவு தந்து அருளினாய்
மூவர்நீ! முதல்வன் நீ! முற்றும் நீ! மற்றும் நீ!
பாவம் நீ! தருமம் நீ! பகையும் நீ! உறவும் நீ!

(வா. வ. 129)

ஆம்! எப்பொழுது புதிய விழுப்பொருளைப் பெற்றான்? ஆவி போம் வேளையில் பெற்றானும். எவ்வாறு பெற்றானும்? ஏவுகூர் வாளியால் பெற்றானும். பெற்றதனால் விளைந்த பயன் யாது? துவந்தங்கள் எனப்படும் இரட்டைகள் ஒழிந்து ஒழிந்து சமதிருஷ்டி கிடைத்தது. இதைத்தான் வாலி விளக்குகிறான். இந்த விழுப்பொருள் கிடைக்குமுன் உன்னை தசரத புத்திரன் இராமன் என்று நினைத்து, என் உயிரைப் போக்கும் பகைவன் என்று எண்ணி நீ பாபம் செய்துவிட்டாய் என்ற முடிவுக்கு வந்து உலகம்

உள்ளளவும் வழிபூண்டுவிட்டாய் என்று கருதிவிட்டேன். இப் புதிய அறிவை நீ தந்தவுடன் நீ தசரதன் புத்திரன் அல்லே. நீயே மூவர்! நீயே முதல்வன்! நீதான் புகழ்! நீதான் இகழ்; நீதான் பாபம் நீதான் புண்ணியம்; பகையும் நீயே உறவும் நீயே; உன்னே அன்றி மற்று ஒன்றும் இல்லே என்ற புதிய விழுப்பொருளேப் பெற்றுவிட்டேன் என்று கூறுகிருன் வாலி.

இன்னும் ஒருபடி மேலே சென்றும் பேசுகிருன். இயங்கியற் பொருள், நிலேயியற் பொருள் (சர அசரம்) களாக உள்ளான். பூவும் அதில் உள்ள மனமும் போல எல்லாவற்றிலும் ஊடுருவி நிற்கின்றவன் என்று அறிஞர் கூறுவதை இன்று உணர்ந்துகொண் டேன் என்ற பொருளில்,

'யாவரும் எவையுமாய், இருதுவும் பயனும் ஆய்
பூவும் நல் வெறியும் ஒத்து; ஒருவ அரும் பொதுமையாய்
ஆவ நீ ஆவது' என்று அறிவினர் அருளினர்;
தாவரும் பதம் எனக்கு அருமையோ? தனிமையோய்
(வா. வ. 131)

என்றும் கூறுகிருன். வாலியின் மனத்தில் நிகழ்ந்த இந்த விழுப்பொருள் மாற்றத்தை உணர்ந்து கொண்டவன் (Change in values) இராமன் ஒருவனேயாவான்.

நல்லதொரு சந்தருப்பங் கிடைத்தவுடன் தான் கொண் டிருந்த பழைய விழுப்பொருள்களே மாற்றிக்கொண்டான் வாலி. அதனுல் உடனடியாகத் தேவர்கட்கும் கிட்டாத வீடுபேற்றைப் பெற்றுவிட்டான் என்கிருன் கவிஞன். ஆனுல் இதை கம்பன் மற் ருெரு பாத்திரத்தின்மூலம் என்ன நிகழ்ந்தாலும் தான் கொண்ட விழுப்பொருள்களே மாற்றிக்கொள்வதில்லே என்ற உறுதியுடன் உயிரை விடுகின்ற நிகழ்ச்சியையும் காட்டிச் செல்கிருன்.

போர்க்களத்தில் வந்து நிற்கும் கும்பகருணனேக் கண்ட இராமனே வியப்பெய்துகிருன். அவனுடைய நேர்மையைப்பற்றி வீடணன் கூறி இந்த நல்லவனேக் கொன்று ஒரு பயனும் இல்லே. அறவுரை கூறி இவனே அழைத்து வருகிறேன் என்று இராமனிடம் அனுமதி பெற்றுக் கும்பனிடம் வருகிருன் வீடணன். அவனேக் கண்ட கும்பகருணன் வியப்பும் வருத்தமும் ஒருங்கே எய்தியவனுய் 'ஏன் நீ என்னிடம் வந்தாய்? இறக்கும் தறுவாயில் இருக்கும் எங்களே நாடி வருவது நியாயமா?' என்ற கருத்தில்

'கவிஞரின் அறிவு மிக்காய் காலன்வாய்க் களிக்கின்றேம்பால்
நவை உற வந்தது என் நீ? அமுது உண்பாய் நஞ்சு
உண்பாயோ?
(கும்ப. வதை—131)

என்று பேசுகிருன். வீடணன் பக்குவமாகக் கும்பனிடம் பேசத் தொடங்கி 'நீ இதுவரை உன் வாழ்நாளை வீணுளாக உறங்கியே கழித்துவிட்டாய்! வேதங்களைக் கற்ற நீ இப்பிறவி நோயிலிருந்து விடுபட வேண்டாமா? இராமனிடம் சரணம் புகுந்துவிட்டால் இலங்கை அரசுடன் வீட்டரசும் உனக்கு நல்குவான்' என்று பல்வேறு காரணங்களைக் காட்டிப் பேசினுன்.

வீணனிடம் எல்லையில்லாத அன்பு பூண்டவன் கும்பகருணன். ஆனுல் அண்ணன் தம்பியராகிய இவர்கள் இருவருக்கும் விழுப்பொருள்கள் வேறு வேறு. இராமனிடம் சேர்வது

'மருள் உறு பிறவி நோய்க்கு மருந்தும் ஆம்; மாறிச் செல்லும்'
உருள் உறு சகட வாழ்க்கை ஒழித்து வீடளிக்கும். . . .
(கு. வதை—139)

என்று கருதுபவன் வீடணன். வீடணனைப் போலவே கல்வி, கேள்வி ஞானங்களில் நிறைந்தவன்தான் கும்பகர்ணனும். என்ருலும் என்ன? இருவருடைய விழுப்பொருள்களும் இருவேறு துருவங்களாக அமைந்துவிட்டன. இரு துருவங்களாக விழுப்பொருள்கள் இருப்பினும் ஒருவர்மாட்டு ஒருவர் கொள்ளும்அன்பு இதனுல் குறைய வேண்டியதில்லை என்பதை எடுத்துக்காட்டவே கவிஞன் இந்தக் காட்சியை அமைத்துக் காட்டுகிருன்.

அண்ணனுகிய கும்பனைத் தன்னுடன் வருமாறு வேண்டிய வீடணன் தரையில் வீழ்ந்து அண்ணனை வணங்குகிருன். வணங்கும் தம்பியை எடுத்து மார்புறப் புல்லிக் கண்ணீர் சோரப் பேசுகிருன் கும்பகர்ணன். தன் முடிவையும் தமையன் முடிவையும் மிக நன்ருக அறிந்திருந்தான் கும்பன். என்ருலும் என்ன? வீடணன், இம்மையில் இலங்கை அரசும் மறுமையில் கிடைக்கும் என்று கூறினதால் தன் விழுப்பொருளை மாற்றிக்கொள்ள இசைந்தானு கும்பன். அப்படியானுல் அவனுடைய விழுப்பொருள்தான் என்ன?

'ஒருத்தரின் முன்னம் சாதல் உண்டவர்க்கு உரியது (157)
'தம்பியர் இன்றி மாண்டு கிடப்பனே தமையன்' (158)
'(யமனிடம்) துணை இன்றி (அண்ணன்) சேரல் நன்ருே?'

இவ்வாறு அண்ணனிடம் தன் கடமை உணர்ச்சியை வெளிப் படுத்தினுன். இனி தன் வீரத்தின்பால் அவன் கொண்ட உறுதிவருமாறு:

'கும்பிட்டு வாழ்கிலேன் யான் கூற்றையும் ஆடல் கொண்டேன் (160)
'பனி துடைத்து உலகம் சுற்றும் பரிதியின் திரிவென்'
'கறங்கு எனத் திரிவென்'
'ஒருவரும் திரிய வொட்டேன் உயிர் சுமந்து உலகில்' (163)


இவைதான் கும்பகருணனுடைய விழுப்பொருள்கள். இவ்வாறு கூறுவதால் முட்டாள்தனத்துடன் பகைவனின் வன்மை அறியாமல் தன்னைப்பற்றி உயர்வாக நினைத்துள்ளானே என்று யாரும் நினையவேண்டியதில்லை. தன் முடிவு என்ன? இராவணன் முடிவு என்ன? இலங்கை அரக்கர் முடிவு யாது என்பவற்றை மிக நன்றாக அறிந்த ஒருவன் இலங்கையில் உண்டு என்றால் அவன் கும்பகருணன்தான். என்றாலும் என்ன? அவன் கொண்டிருந்த விழுப்பொருள்களை அவன் விட்டுக்கொடுக்கவோ வேறு விழுப்பொருள்களை ஏற்றுக்கொள்ளவோ அவன் தயாராக இல்லை. தம்பியாக வீடணனுக்கு இராமனிடம் சரணமாதல்தான் தக்கது என்பதையும் தான் போர் புரிந்து மரணமடைவதுதான் புகழ் என்பதையும் நன்கு அறிந்தவனாகலின் அவரவர் விழுப்பொருள்களை அவரவர் காப்பதே முறை என்று கருதினான். எனவே களத்தில் வீடணனிடம் பேசும்போது

''மலரின்மேல் இருந்த வள்ளல் வருஇலா வரத்தினால்
உலைவு இலாத் தருமம் பூண்டாய்; உலகு உளதனையும் உள்ளாய்
தலைவன் நீ, உலகுக்கு எல்லாம்; உனக்கு அது (சரணம் அடைதல்) தக்கதேயால்
புலைநறு மரணம் எய்தல் எனக்கு இது புகழுதேயால்'
(கும்ப. வ. 156)

என்று திட்டவட்டமாகக் கூறுகிறான்.


மனிதன் ஒருவனுக்குத்தான் விழுப்பொருள் என்ற ஒன்று உண்டு. குறிக்கோளுடன் வாழவேண்டும் என்று நினைப்பவன்தான் மனிதன். குறிக்கோள் இலாத வாழ்க்கை விலங்கு வாழ்க்கையே யாகும். அந்தக் குறிக்கோள் உயர்ந்ததாகவும் சிறந்ததாகவும் இருக்கவேண்டுமாயின் வாழ்க்கையில் சில உயர்ந்த விழுப்பொருள்கள் இருத்தல் வேண்டும். இலக்கியத்தில் வரும் பாத்திரங்கள் அனைத்தும் விழுப்பொருளை உயிரினும் மேலாகப் போற்றும் பாத்திரங்களாகத்தான் அமையும். அதில் தனிமனித விழுப்பொருள், சமுதாய விழுப்பொருள் என இருவகை உண்டு. தனிமனித விழுப்பொருள்களை மாற்றிக்கொள்கிறவர்கள் உண்டு; மாற்ற மறுப்பவர்களும் உண்டு. அதேபோலச் சமுதாய விழுப்பொருள்கள் காலத்துக்கு ஏற்ப மாறும் இயல்புடையன. தனி மனிதர்கள் கொண்ட விழுப்பொருள்களும் தக்க காரணங்களால் மாறும் இயல்புடையன. உறவு காரணமாக இருவர்க்கு ஒரே வகையான விழுப்பொருள்தான் இருக்கவேண்டும் என்ற தேவை இல்லை. ஆக விழுப்பொருள் இல்லாதவன் மனிதனே இல்லை என்பது கம்பநாடன் காப்பியங் காட்டும் உண்மை.

THE SCRIPT OF
A LIGHT AND SOUND
SPECTACLE




கம்பர்

KAMBAN



Chinmaya
Yuva Kendra,
Madras.



SCENE ONE

(Mithilai)

(Rama and Lakshmana follow Vishwamitra walk across the stage. Sita watches them from the balcony of her private chambers. Rama looks up and sees Sita looking at him.)

Com.: Rama saw her as he went,
(sings) And with his, Sita's eyesight blent.
Their eyes beheld and held each other,
Delving deep to raptures gather.
Can mortal words ever truly greet
When Divine, Eternal lovers meet?

(Rama walks reluctantly away, looking back longingly. Sita sighs)

Com.: Through the high-way he went away -
but entered through the "eye-way".

SCENE TWO

(Janaka's palace)

(Courtiers throng the place where Rama is about to try and string the mighty bow. Soldiers drag the bow forward in a wheel-carriage. Vishwamitra beckons and Rama goes near the bow, where he stands praying. Some women begin to sing.)

Gr.1 If marriage is his desire first,
why not in this lad he vest.

Gr.II His noble daughter, and gladly rest?
Why at all this perilous test?

(Rama lifts the bow and bends it. A thunderous sound.)

Com.: They saw him take
And heard it break.

SCENE THREE

(Sita's chambers)

(Sita is in lonely comtemplation. A rejoicing bevy of maids come running to her.)

Sita
(pleads) Sundari, say it fast!

V.1: Dasaratha's son!

V.2: Excels Cupid!

V.3: Has strung the bow!

V.1: Rama is his name.



காட்சி 1

மிதிலை

(இராமனும் லக்ஷ்மணனும் தொடர, விச்வாமித்ரர் நடந்து செல்கிறார். கன்னிமாடத்தில் சீதை நிற்கிறாள் அண்ணலும் நோக்கினான், அவளும் நோக்கினாள்.)

கண்ணொடு கண் இணை கவ்வி
ஒன்றையொன்று உண்ணவும்
அண்ணலும் நோக்கினான்
அவளும் நோக்கினாள்.
கருங்கடல் பள்ளியில் கலவி நீங்கிப்போய்
பிரிந்தவர் கூடினால் பேசல் வேண்டுமோ?

(இராமனும் ஏனையோரும் போகிறார்கள்)

மண்வழி நடந்துபோனவன் கண்வழி நுழையும் கள்வன்!

காட்சி 2

ஜனகன் அரண்மனை

(சபையோர் கூடிநிற்க, இராமன், லக்ஷ்மணன், விச்வாமித்ரர் மூவரும் வருகின்றனர். முனிவர் சமிக்ஞை செய்ய, இராமன் வில்லை அணுகிப்பார்த்து, கடவுளை வணங்கி நிற்கிறான். பெண்கள் பாடுகிறார்கள்).

வள்ளல் மணத்தை மகிழ்ந்தனன் என்றால்
'கொள்' என முன்பு கொடுப்பதை அல்லால்
வெள்ளை மனத்தவன் வில்லையெடுத்து இப்
பிள்ளைமுன் இட்டது பேதைமை யன்றே.

(இராமன் வில்லையெடுத்து வளைக்கிறான். பேரொலி.)

எடுத்தது கண்டனர், இற்றது கேட்டார்.

காட்சி 3

(சீதையின் இருப்பிடம். தனியே உட்கார்ந்து சிந்தையில் இருக்கிறாள். பாட்டு, களிப்புடன் தோழிமார் ஓடிவருகின்றனர்.)

சீதை : சுந்தரி, சொல் (தொழுது கேட்கிறாள்).
தோழி : தயரதன் புதல்வன்
தோழி : மதனற்கும் மேன்மையான்
தோழி : நாண் ஏற்றினான்,
தோழி : இராமனென்பது பெயர்.
சீதை : (தனக்குள்) தாமரைக்கண்ணினான் ... ஆம், அவனே! கோமுனியுடன் வந்த கார்முகில்.

(சீதை மெள்ள நடந்து வருகிறாள். கீதம், நாதஸ்வரம்.)

Sita *(to herself)* — The lotus-eyed....yes, it is he! The black prince with the royal-sage!

(Sita walks slowly towards the Palace Hall. Songs, Nadaswaram.......)

Swans, fairies and nectar sweet,
Hung their lovely heads in shame.
None could boldly Sita meet,
As into the palace hall she came.

(softly).....As into the palace hall she came.....

SCENE FOUR

(Marriage hall)

(Sita, blushing, stands apart. Rama, in full splendour, enters.)

Com.: *(Sings)* — Can splendours add to Rama ever,
Whom even the Gods rever?

(All along the way, the happy people shower flowers, coloured powder, perfumes and coins.)

Com. — They showered gold and flowers with wonder,
And drank, with joy, our Rama's splendour.

(Rama and Sita face each other. Janaka sprinkles the sanctified water, places Sita's hand over Rama's and blesses them.)

Janaka: — May you live in a noble fashion,
Like the Divine couple in the milky ocean.

(All the usual rituals are gone through. Sita and Rama receive the blessing of their elders. Nadaswaram sounds. The citizens of Mithila rejoice outside the palace. Frequent cheers - "Long live Janaki" "Long live Raghavan" - are heard.)

V.1: — Sita needs a thousand eyes to see Rama.

V.2: — See the Bride!

V.3: — See the brother!

V.1: — The world is blessed!

SCENE FIVE

(Ayodhya)

(The Coronation of Rama has been announced. The people of Ayodhya are in a jubilant mood. Standing in front of a palace, Kausalya is giving alms to the poor. From the opposite balcony, Kooni sees her.)

Com.: — Kooni's eyes red-hot with hate
With spite arising in tumultous spate

அன்னமும் அரம்பையரும் ஆரமிழ்தும் நாண
மன்னவை இருந்த மணி மண்டபம் அடைந்தாள்

காட்சி 4

விவாக மண்டபம்

(சீதை நாணி ஒருபுறம் நிற்க, மணக்கோலத்தில் இராமன் வருகிறுன்.)

முப்பரம் பொருளிற்குள் முதல் மூலத்தை,
அப்பனே, ஒப்பனே உரைக்க ஒண்ணுமோ?

(வழியே மக்கள் பூ சொரிகின்றனர். சந்தனமும் வர்ணப் பொடியும் தூவுகின்றனர்).

சொரிந்தனர் மலர் மழை சுண்ணம் தூவினர்
விரிந்தொளிர் காசு, பொன், தூசு வீசினர்,
பரிந்தனர் அழகினைப் பருகினுர்.

(இராமனும் சீதையும் எதிரெதிர் நிற்க, ஜனகன் புனித நீர் விட்டு, கையொடு கை சேர்த்து ஆசி தருகிறுன்.)

ஜன : பூமகளும் பொருளும் என நீ என் மாமகள் தன்னெடு வாழ்வாய்.

(சங்கு, பேரிகை முழங்க, வேதியர் மந்திரம் ஓத, சீதை அம்மி மிதித்து அருந்ததி கண்டு, பெரியோரையும் மாமி யாரையும் வணங்குகிறுள்.

(நாதஸ்வரம். வெளியே மக்கள் பாடி, ஆடிக் களிக்கின்றனர். இடையே 'வாழி சானகி, வாழி இராகவன்' என்ற பேரொலி).

குரல் :—நம்பியைக்காண நங்கைக்கு ஆயிரம் நயனம் வேண்டும்.

குரல் 2 : கொம்பினைக் காணும்!

குரல் 3 : தம்பியைக் காண்மின்!

குரல் 1 : தவமுடைத்து உலகம்!

காட்சி 5

அயோத்தி

(மக்கள் குதூகலம், மகிழ்ச்சி. கும்மி, தானம் வழங்கு கிறுள் கோசலே. தொலேவில் நின்று பார்க்கிறுள் கூனி.) (உரை)

கூனி. துடிக்கும் நெஞ்சினுள், உளேக்கும்
உள்ளத்தாள், எரிநயனத்தாள், மூன்றுலகினுக்
கும் இடுக்கண் மூட்டுவாள்.

(கூனி மக்கள் மகிழ்ச்சியைக் கண்டு கொதிக்கிறுள். விரைந்து போகிறுள்.)

Would drive the World to the devil's gate.

(Kooni, angered by the merriment of the people, rushes down the street)

SCENE SIX

(Kaikeyi's Chambers)

(Kaikeyi is lying down. Kooni comes in quietly and wakes her up.)

Kooni : A peril vast is coming fast, and here you are, sleeping peacefully!

Kaikeyi: A peril to me, the mother of Rama - the beacon of this world?

Kooni: Alas! You're sunk. By sheer wit shall Kausalya flourish. Rama will be crowned tomorrow!

(Kaikeyi gives her a golden necklace. Kooni hurls it aside.)

Kooni: Born as one in a royal lot,
And dwelling in a royal heart.
O Royal queen! You soon will see, (sighs)
Yourself deep in melancholy.

Kaikeyi: Enough! You mean well to neither me nor Bharata. Go away!

Kooni: If the whole Kingdom goes to Kausalya, would not your parent's and relatives come and see you in her hold?

(Kaikeyi is confused and has a change of heart)

Kaikeyi: You really love me. You are my son's well wisher. Tell me a ruse to get him the crown.

(Kooni whispers in Kaikeyi's ears and leaves. Kaikeyi dishevels herself and lies on the floor. Enter Dasaratha, who tries to lift her. Kaikeyi shrugs his hands off her body.)

Dasaratha: What happened? Whoever has upset you shall die. Tell me first and watch the rest.

Kaikeyi: Oh! Am I still loved?

Dasaratha: I will gladly do anything for you. I swear by Rama, your noble son.

Kaikeyi: I need both the boons that you gave that day. By one boon, Bharata, my son, must rule the land. By the other, Sita's puppet shall go and rule the jungle.

(Dasaratha stunned, drops to the floor)

Dasaratha *(slowly rising)*: Nay. Your son shall not get this empire. Oh! Lady! Kekaya's daughter! I will readily give even my eyes. Do you need my soul? When was it not yours? Well,



காட்சி 6

(கைகேயி படுத்திருக்கிறாள். கூனி மெள்ள வந்து காலைத் தொட்டு எழுப்புகிறாள்.)

கூனி : பேரிடர் வந்தது. நீ உறங்குவாய்!

கை : புவிக்கெல்லாம் வேதமேயென இராமனைப்பயந்த எனக்கு இடர் உண்டோ?

கூனி : வீழ்ந்தது நின் நலம். வாழ்ந்தனள் கோசலை— மதியினால் இராமன் கோமுடி சூடுவான் நாளை.

(கைகேயி பொன்மாலையைக் கழட்டிக்கொடுக்கிறாள். கூனி அதை வாங்கி விட்டெறிகிறாள்.)

கூனி : அரசர் இல் பிறந்து, அரசர் இல் வளர்ந்து, அரசர் இல் புகுந்து, பேரரசியான நீ, துயர்க்கடலில் வீழ்கின்றாய்.

கை : எனக்கு நல்லையும் அல்லை நீ, என் மகன் பரதன் தனக்கு நல்லையும் அல்லை. போதி.

கூனி : பூதலமெல்லாம் கோசலைக்கு உடைமையாம் என்றால், உந்தை, அன்னையும், மற்றுன் குலத்துள்ளோர் வந்து காண்பது உன் மாற்றவன் செல்வமோ?

கை : (மனம் மாறி) எனை உவந்தனை, இனியை என் மகனுக்கும் அவன் நீள்முடி பெறும்படி புகல்வாய்.

(காதில் சொல்லிப்போகிறாள் கூனி. கைகேயி அலங்கோலமாய்க் கீழே கிடக்கிறாள். தசரதன் வருகிறான். அவனைப் புறக்கணித்து, கையை உதறித்தள்ளுகிறாள்.)

தச : என்னை நிகழ்ந்தது? உன்னை இகழ்ந்தவர் மாள்வர். உற்றதெல்லாம் சொன்னபின் என் செயல் காண்டி.

கை : அருள் உண்டோ என்பால்?

தச : உள்ளமுவந்தது செய்வேன். வள்ளல் இராமன் உன் மைந்தன் ஆணை.

கை : நீ அன்று தந்த வரங்கள் இரண்டும் வேண்டும். ஒன்றினால் என் சேய் உலகாள்வது. மற்றொன்றினால் சீதை கேள்வன் போய் வனம் ஆள்வது.

(தசரதன் திகைத்து விழுகிறான்)

தச : (மெள்ள எழுந்து) கொள்ளான் நின்செய் இவ்வரசு.

பெண்ணே, கேகயன் மானே! கண்ணே வேண்டினும் ஈயக்கடவேன் உள்நேர் ஆவி வேண்டினும் இன்றே உனதன்றோ? மண்ணேகொள். மற்றையதொன்றும் மற. (காலைத் தொடுகிறான்).

take the land, but forget the other boon! Please!

(Begs her, touching her feet)

Kaikeyi *(Moving away mocks)*: What is this, O King? You have already granted me these boons!

Dasaratha: You and your son shall gladly rule. But, spare My son - My eye - My life. Don't plunge the entire land in lifeless darkness.

Kaikeyi: To beg back the boon you have already given - Does this befit you?

(Dasaratha swoons. Kaikeyi orders a soldier to call Rama. Rama, in his wedding attire, comes in and is shocked to see Dasaratha's state.)

Kaikeyi *(Sings)*: Your father will not speak.
While Bharata rules this fate-torn globe,
You don an ascetic's sacred robe;
And live in the forest for twelve and two,
These are the words of the emperor, true.

Rama: Aren't his words the same as thine?
And Bharata's wealth as good as mine?
This very day I shall leave for the forest.

SCENE SEVEN

(Ayodhya)

(Lakshmana walks angrily up and down the street, plucking the bow-string noisily.)

Lak.: Even if the Gods, King and the public accept, I shall bear with this woman's rule no more.

(Enter Rama)

Rama: Peace! My father, Please!

Lak.: She has slâin all ethics.

Rama: My father! Why have you lifted your bow?

Lak.: That woman blacker than Kajal! I have resolved to crown you under her ugly nose.

Rama: Fate's folly.

Lak.: O! How shall I quench the blazing fire in my heart?

Rama *(Sings)*: Drought is not the river's fault,
Nor is this our mother's assault.
Our father and brother are not to blame,
All this is Fate's puzzling game.

கை : முன்னே தந்தாய் இவ்வரம். என்னே மன்னு?

தச : நின் மகன் ஆள்வான், நீ இனிது ஆள்வாய். என் மகன், என் கண், என் உயிர், எல்லா உயிர் கட்கும் நன்மகன் இந்த நாடு இறவாமை நய.

கை : தந்த வரத்தை தவிர் என்றல் நல்லறம் ஆமோ?

(தசரதன் மூர்ச்சித்து விழுகிருன். காவலனே அழைத்து இராமனைக் கூப்பிடச்சொல்லுகிருள் கைகேயி.)
இராமன் திருமணக்கோலத்துடன் வருகிருன். தசரதனைக் கண்டு திகைக்கிருன்.)

கை : நாயகன் உரையான் வாயால்.
ஆழிசூழ் உலகமெல்லாம் பரதனே ஆள, நீ போய்
தாழிருஞ்சடைகள் தாங்கி, தாங்கரும் தவம்
மேற்கொண்டு
பூழி வெம் கானம் நண்ணிப் புண்ணியப் புனல்கள்
ஆடி
ஏழிரண்டு ஆண்டில் வா என்று ஏவினன் அரசன்.

இராம : மன்னவன் பணி அன்ருகில் நும்பணி மறுப் பெனே? என் பின்னவன் பெற்ற செல்வம் அடிய னேன் பெற்றதன்ருே? இன்றே போகிறேன் கானம்.

காட்சி 7

அயோத்தி

(தெருவில் நின்று வில்லை 'டங்காரம்' செய்து சினந்து நடக் கிருன் இலக்குவன்.)

லக்ஷ் : விண் நாட்டவர், மன்னவர், மற்றும் எந்நாட்ட வர் யாவரும் நிற்க. இனிப் பெண் நாட்டம் ஒட்டேன்.

(இராமன் வருகிருன்.)

இராம : என் அத்த!

லக்ஷ் : மெய்யைச் சிதைவித்தாள்.


இராம : என் அத்த! தனு ஏந்தி நின்றதென்ன?

லக்ஷ் : மையில் கரியாள், அவள் எதிர் நின்னை அம் மௌலி சூட்டத் துணிந்தேன்.

இராம : விதியின் பிழை.

லக்ஷ் : கொதிக்கும் மனம் ஐயனே! எங்ஙனம் ஆற்று வேன்?

இராம : நதியின் பிழையன்று நறுப் புனல் இன்மை, அற்றே
பதியின் பிழையன்று, பயந்து நம்மைப் புரந்தாள்
மதியின் பிழையன்று, மகன் பிழையன்று, மைந்த!
விதியின் பிழை. இதற்கு என்னை வெகுண்டது?



(Leads Lakshmana away.)

SCENE EIGHT

(Ayodhya Street)

(Huddled groups of citizens speak out their feelings after Dasaratha decides to go back on his word and send Rama to the forest.)

V.1: Queer enough are our King's ways!

V.2: It is not wrong to give it (the crown) first, and then pass it over to his brother (Bharata)?

V.3: Neither would Bharata rule....

(Sighs resignedly):

V.1 :

(Depressed): Nor would Rama return either.

V.2:

(In anguish): The fate of this earth! (i.e. Kingdom).

V.3:

(In sympathy): The poor girl's (Sita's) Fate!

V.1:*(Grief stricken)* The fate of our eyes! (for having to espy this heart–throbbing catastrophe)

(Women wail in panic and apprehensive fear)

(Another)

V.1: Alas!...would we survive this ordeal (separation)?

(Enter Vasishta, visibly shaken by the rude shock.)

Vasishta *(Consoles)* Even if the Creator came
Can the fate be ever tame?

SCENE NINE

(The River Ganga)

(Rama and companions are ferried across the Ganga by Guha, the tribal chieftain. Guha sings as he moves)

Guha: She with a milky voice.....Aye! Aye!
And he with a Sun-like poise....Aye! Aye!
Played with the lively spray....Aye! Aye!
With both hearts full & gay....Aye! Aye!

(They cross the river and step down. Rama warmly embraces Guha.)

Rama: We have now become five. (Guha is the fifth in the string of brothers.)

லக்ஷ் : கோள் இழைத்தாள் அவள் மதிக்கும் மதியாய்
வானவர் விதிக்கும் விதியாய், என் வில்தொழில்
காண்டி.

இராம : (அமைதியாக) வாய் தந்தன கூறுதியோ,
மறைதந்தநாவால்?
தாய்தந்தை என்றால் சலிக்கின்ற தென்னோ?

(அணைத்து, அழைத்துச் செல்லுகிறான்.)

காட்சி 8

அயோத்தி

(மக்கள் கூடிநின்று பேசுகின்றனர்.)

குரல் 1 : என்னே நிருபன் இயற்கை!

குரல் 2 : முன்னே கொடுத்து, முறை திறம்பத்தம்பிக்குப்
பின்னே கொடுத்தால் பிழையாதோ?

குரல் 3 : ஆளான் பரதன் அரசு.

குரல் 1 : ஐயன் இனி மீளான்.

குரல் 2 : மண் செய்த பாவம்.

குரல் 3 : பெண் செய்த பாவம்.
கண் செய்த பாவம்
(பெண்கள் ஓலம்.)

குரல் 1 : அந்தோ ... பிரிதுமோ?

கு1,2,3 : ஆ, விதியே! ஓ.

வசிட் : சூழ்வினை நான்முகத்து ஒருவன் சூழினும்
ஊழ்வினை ஒருவரால் ஒழிக்கற் பாலதோ?

காட்சி 9

(கங்கை கடக்கும் காட்சி. ஓடம், நதி)

பாலுடைமொழியாளும்—ஐலஸா
பகலவன் அணியானும்—ஐலஸா
சேலுடை நெடு நன்னீர்—ஐலஸா
சிந்தினர் விளையாட—ஐலஸா

(நீரைக் கடந்தவுடன்)

இராமன் (குகனை அணைத்து) இனி நாம் ஐவர் ஆனோம்.

காட்சி 10


கைகேயி அரண்மனை

(விதவைக் கோலத்தில் இருக்கிறாள். குழம்பி, மனம்பதைத்து
பரதன் வருகிறான்) தாயை வணங்குகிறான்.

கை : கேகய நாட்டில் எந்தையும் அன்னையும் நலமோ?

பர : ஆம். எந்தை, கோமகன் எங்கே?

கை : (தலைகுனிந்து) வானகம் எய்தினான். வருந்தல் நீ.



SCENE TEN

(Kaikeye's chambers)

(Beholding his mother in the attire of a widow, a confused and shocked Bharata rushes to her side and salutes his mother.)

Kaikeyi: Are my parents in Kekaya fine?

Bharata: Yes, Where is my father, the king?

Kaikeyi *(bowing her head)*: He has reached the Heavens. Despair not.

Bharata *(In fury)*: Who but you would think of ear-scorching words full of treachery? Well, where is my Lord, the noble Rama?

Kaikeyi: Gone to the woods with his wife and his brother.

Bharata: The son to the forest when the father's alive? Why?
The wrath of the Gods or the rise of fate?

Kaikeyi: The king gave the word
And I sent him yonder.
I got you the world,
And the king was torn asunder.

Bharata *(Enraged)*: Ahh! You still live, and I still stand. A king for the heavens and a son for the forest. Is Bharata for this world? (Seething with fury)....Nay! The world will not accept, and I shall not sin. I shall go to the forest and repent my birth in your bedamned womb.(Goes)

SCENE ELEVEN

(Bharadwaja's hut)

(Bharata salutes the Sage. People stand behind him.)

Bharad.: Sir, you rule not the empire given to you, But have come here to penance pursue. May I ask why?

Bharata *(Provoked yet again)*: No! No!! You say words befitting neither you nor me.

Com. *(Sings)*: Thus said Bharata, burning ablaze like a fire in fury.
(Bharadwaja embraces Bharata, blesses him and signals for food and fruit. Maids entertain them with songs and dances.)

Com. *(Sings)*: Celestial maidens of peerless beauty
Like servant-maids did do their duty;



பர : தீயைச் செவியில் வைத்த தீய சொல் நீ அலது எவரும் நினைப்பரோ? பெருங்குணத்தி இராமன், எம்பிரான் எங்கே?

கை : தேவி, தம்பியென்றிருவரோடும்கானகம் ஏகினன்

பர : பெற்றவன் இருக்கவே பிள்ளை கான் புக, உற்ற தென்ன? தெய்வம் சீறியோ, ஓங்கிய விதியினோ?

கை : மன்னவன் வாக்கினுல் வரம்தர, மைந்தனைப் போக்கினேன் வனத்திடை. பார் உனக்கு ஆக்கி னேன். அது பொறுக்காமல் நீக்கினுன் தன்னுயிர் மன்னன்.

பர : ஆ!, நீ இனும் இருக்கிருய், யானும் நிற்கிறேன். மாளவும் ஒரு மன்னன், கான் ஆள ஒரு வீரன், பார் ஆளவும் உளனே ஒரு பரதன்! ... (ஆவே சத்தோடு) பாரோர் கொள்ளார், யான் இப் பழி பூணேன். உன் பாவி வயிற்றினிடை தோன் றிய பாதகம் தீர தவம் பூண்டு யானே செல் கின்றேன்.

காட்சி 11

பரத்வாஜ முனிவர் ஆச்ரமம்

(பரதன் சடைமுடியொடு வந்து வணங்குகிருன். மக்கள் தொடர்ந்து நிற்கின்றனர்).

பர : ஐய, மாமுடிசூடு என இசைந்து தந்த பேரரசு ஆண்டிலை நீ. வார்சடையொடு முனிவர் தூசு உடுத்து வந்தது ஏனோ?

பர : இயம்பிலை, இயம்பிலை.
எனக்கடுத்தது இயம்பிலை நீ

(கீதம்) : உனக்கடுத்ததுமன்று உறவோய் என
சினக்கொடுந்திறல் சீற்ற வெந்தீயினுன்.


(பரத்வாஜர் எழுந்து அணைத்துக்கொண்டு ஆசி தருகிருர். அவர் சமிக்ஞை செய்ய, பெண்கள் பூவும், பழமும் உணவும் கொண்டு வருகின்றனர். ஆடிப்பாடிக் களிக்கின்றனர்.)

(கீதம்) : மாதர் யாவரும் வானவர் தேவியர்
கோதில் செல்வத்து வைகினர் கொவ்வை வாய்
தீதில் செல்வ மடந்தையர் சேடியர்
தாதிமார் எனத் தம்பணி கேட்கவே

காட்சி 12

(சித்ரகூடம் இராமனும் சீதையும் குடிசை வாயிலில் அமர்ந்திருக்க, அருகே மரத்தின் மேல் நின்று நாலுபுறமும் பார்க்கிருன் லக்ஷ்மணன் விரைந்து கீழே குதித்து இராமனிடம் விரைந்து வருகிருன்).

லக்ஷ் : பரதன்! பெருஞ்சேனை!
மதித்திலன் பரதன், நின் மேல் வந்தான்,
சேனையைப் பரப்பினுன்.



And all of Ayodhya's maiden fair,
Lost themselves in the 'eavenly affair.

SCENE TWELVE

(Chitrakudam)

(Rama and Sita sit beside their hut, while Lakshmana atop a tree, scans the jungle all around. He suddenly jumps down and rushes to Rama.)

Lakshmana Bharata! A vast army!
Notwithstanding your prowess, he has come upon you and spread his men. Now he has lost both the worlds. Hearten at the sight of my single bow against the bulge of his shoulders and the valour of Dasaratha's army.

Rama: Lakshmana! Would you listen for a minute?

Lak.: Behold Kaikeyi writhing fast!
(Sings): She, who snatched your kingdom vast,
And beamed at your mother in agony lost.

Rama: Lakshmana, need it be said that it is hard to preach to any one raving thus? When that noble man comes out of love for me, why do you think he has come for war? He is the deity of dharma- the heralder of virtues.

(Bharata comes with upheld hands and sunken eyes, attired in saffron robes.)

Com. The all-knowing Rama fully saw
Brief portrayed without a flaw
Sings: With arms upheld and body slim
And tears making the eyes look dim.

(Bharata prostrates himself before Rama, who embraces him and eyes him intently.)

Bharata: Oh Lord! Owing to your separation, and my ugly mother's boon called Death, Father has departed heavenwards!

Rama: Alas! Who remains for Truth since he? Oh! Father! Have you died?

Vasista *(comes forward)*: Have you, who transcends the scriptures great, forgotton that Birth and Death are nature's plays? Who at all could escape the trap of time?

Rama: The world (i.e.Kingdom) has come to a standstill since he went. Why have you come in this guise without taking over?



ஆனால்
இருமையும் இழந்தவன் பரதன், அவன்
ஏந்துதோள் பருமையும், மன்னவன் படைத்த
சேனையின் பெருமையும், நின்னெடு பின்பு வந்த
என் ஒருமையும் கண்டு உள்ளம் மகிழ்வாய்.

இராம : இலக்குவ, ஒரு பொருள் புகலக்கேள்.

லக்ஷ் : வையகம் துறந்து வந்து அடவி வைகுதல் எய்தியது உனக்கு என நின்னை ஈன்றவள் நைதல் கண்டு உவந்தனள்—நவையில் ஓங்கிய கேகயன் மகள். (அவள்) விழுந்து அரற்றல் காண்டி

இராம : இலக்குவ, நீ ஓர் உலகம் ஏழும் ஏழும் கலக்குவை என்பது கருதினுல் அது விலக்குவது அரிது. இது விளம்பல் வேண்டுமோ? ... பெருமகன் என்பால் பிறந்த காதலால் வருகிருன் எனக் கருதாமல் போர் செய்ய வந்தான் என நினைக்கலாகுமா? அவன் தருமத்தின் தேவு, செம்மையின் ஆணி ..

(பரதன் கூப்பிய கரத்தொடு அழுத கண்ணெடு, காவியுடுத்தி வருகிருன்).

தொழுதுயர் கையினன் துவண்ட மேனியன்
அழுதழி கண்ணினன் அவலம் ஈதுஎன
எழுதிய படிவம் ஒத்து எய்துவான் தனை
முழுதுணர் சிந்தையான் முடிய நோக்கினுன்.

(பரதன் அடிபணிய, இராமன் அவனை அணைத்துப் பலமுறை உற்று நோக்குகிருன்).

பர : ஐய, நின் பிரிவு எனும் பிணியினுல், என்னைப் பெற்ற அங்கரியவள் வரம் எனும் காலனுல், விண்ணிடை அடைந்தனன் தந்தை.


இராம : அந்தோ! இனி வாய்மைக்கு யார் உளர்? எந்தாய் இறந்தனையோ?

வசிட்டர் (முன்னே வந்து) இறத்தலும் பிறத்தலும் இயற்கை என்பதை மறத்தியோ, மறைகளின் வரம்பு கண்ட நீ? கால மென்ருெரு வலை கடக்கலாகுமோ?

இராம : ஐயன் போனபின் வையம் நின்னதே. மகுடம் தாங்காது விரத வேடம் நீ பூண்டது என்ன?

பர : இவ்வுலகை நோய் செய்த பாவ காரியிற் பிறந்த பாவி, சாவதும் அறியேன், தவம் செய்ய இயலேன். தந்தை தீமையும், தாய்செய் தீமையும் நீங்க, மீண்டரசு செய்க, எந்தையே!

இராம : தாய் வரம் கொளதந்தை ஏவலால் நம்குலத் தருமம் மேவினேன். நீ வரம்கொளத் தவிர்தல் நீர்மையோ?



Bharata: A sinner born of a sinner - I
Can neither do penance nor die.
To dispel my parent's evil act,
Do come and rule, my father, please!

Rama: I did this to uphold my mother's boon, father's order and our family-trait. Is it right to foil it yourself?

Bharata: If the world that gave the peerless one (you), be mine, here! I give it to you. Don the crown.

Rama: Your thought is always deep with love...While I spend the fourteen years in the forest, you rule in my name.

Bharata *(Hesitates, then salutes)*: Give me the sandals of Truth Manifest (i.e. you).

(Rama gives his sandals, which Bharata places on his head, comes round Rama and goes slowly away.)

Com. Bharata, who would cry no more,
The sandals as his crown he wore.

SCENE THIRTEEN

(Panchavadi)

(Rama and Sita relax near their hut. Lakshmana stands a few feet away. Surpanaga comes with luring looks and an enticing gait.)

Com.: *(sings)* The lovely maiden of evil ways,
With tender feet and glossy face,
Moving with a silken grace,
Comes in with a lustful gaze,
Comes in with a lustful gaze.

Rama: Fruitful be your visit? What be your name? Who be your kin?

Surp: I am the sister of Ravana, the grandson of Brahma's Peer. Ravana, who rooted Mt. Kailash and protects the Three Worlds. My name is Kamavalli.

Rama: What is the purpose of your coming escort-less to me?

Surp *(Blushes)*: The terrible tortures of lust....Both my beauty and youth go wasted fast.

Rama: O maiden fair! You are from a sagely clan, I from a royal one.



பர : நின்னை ஒப்பிலா நீ பிறந்த பார் என்னதாகில், யான் இன்று தந்தேன். நீ மகுடம் சூடு.

இராம : பசைந்த சிந்தை நீ ... ஆண்டு ஏழோடேழ் நான் வனத்துள் வைக, நீ அந்த நாளெலாம் ஆள், என் ஆணையால்

பர : (தயங்கி, வணங்கி) செம்மையின் திருவடித்தலம் தந்து ஈக.

(இராமன்பாதுகை கொடுக்க, பரதன் தலைமேல் தாங்கி வலம் வந்து மெள்ளப் போகிறான்).

அடித்தலம் இரண்டையும் அழுத கண்ணினான்
முடித்தலம் இவையென முறையிற் சூடினான்.

காட்சி 13

பஞ்சவடி

(நதிக்கரையில் பர்ணசாலை. இராமன், சீதை. சற்று விலகி லக்ஷ்மணன்).

சூர்ப்பனகை வருகிறாள். ஒய்யார நடை, மயக்கும் சைகையுடன் எதிரே நிற்கிறாள்)

பஞ்சிஒளிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்க
செஞ்செவிய கஞ்ச நிமிர் சீறடி பெயர்ப்பாள்
அஞ்சொல்இள மஞ்ஞையென அன்னமென மின்னு
வஞ்சியென நஞ்சம்என வஞ்சமகள் வந்தாள்

இராம : நின் வரவு நல்வரவாக. ஏது பெயர்? யாவர் உறவு?

சூர் : பூவிலோன் புதல்வன் மைந்தன், வெள்ளிமலை யெடுத்துலக மூன்றும் காக்கும் ராவணன் பின்னை —காமவல்லி.

இராம : ஒரு துணையுமின்றி நீ வருவதற்கு ... என்பால் என்ன, காரியத்தைச் சொல்.

சூர் : (நாணி) காமன் என்றொருவன் செய்யும் வன்மை ... பெண்மையொடு இளமையும் பயனின்றி நாளும் கழிந்தன.

இராம : சுந்தரி, அந்தணர் பாவை நீ, யான் அரசர் இல் வந்தேன்.

சூர் : காதலில் கலந்த சிந்தை—மாந்தர்க்கும், மடந்தைமார்க்கும், மறைகளே வகுத்த கூட்டம் 'காந்தர்ப்பம்' என்பதுண்டு. அறியாயோ?

(இராமன் ஏளனமாய்ச் சிரிக்கிறான். சூர்ப்பனகை சினந்து சீதையைக் கவரப் போகிறாள். லக்ஷ்மணன் தொடர்ந்து அவளை நிறுத்த முயல்கிறான். அவள் திமிர, அவளது நாசியை அறுக்கிறான்).

Surp: "Gandharva" - mentioned in the scriptures themselves - is always there for love-bound hearth.

(Rama breaks into peals of mocking laughter. Surpanaga enraged, tries to abduct Sita. Lakshmana tries to stop her, and when confronted by demonly resistance, chops off her nose.)

Surp *(Flees wailing)*: Wouldn't an insult to me, the one
With both my shame and nose undone,
Cloud the glory you have won?
Ravana O! Ravana.......!

SCENE FOURTEEN

(Ravana's palace)

(Ministers and maidens adorn his court. Gentle music is being played. A screaming Surpanaga comes bolting in.)

Ravana: *(Furious)* What? Who did this?

Surp: Two men chopped it with their swords.

(Courtiers laugh at the incredibility of the whole thing.)

Ravana: Stop lying. Tell the truth.

Surp.: They equal cupid....Great with a bow, who said there's only one cupid!

(Sings) Who can match their beauty sweet?
Their talents or their valour sheer?
Can mortals ever their greatness meet?
Only a few are Trinity's peer.

Ravana: What wrong did you commit?

Surp.: For the sake of that maiden fair - with slender shoulders and shining skin. Her (eye) brows like bows and eyes like spears, her rubied lips...

(Sings): That brows are bows and eyes are arrows,
That teeth are pearls and lips are rubies,
Would only mean that swans are sparrows
Truly peerless her beauty is.

(Ravana, determined, walks about)

Surp : Why should I say it? See it yourself......See it yourself (laughs)

சூர் : (அழுகிறாள்)
நசையாலே மூக்கிழந்து நாணமிலாநான் பட்ட
வசையாலே நினதுபுகழ் மாசுண்டது ஆகாதோ?
இசையாலே நிறைந்த புயத்து இராவண ஓ.

காட்சி 14

இராவணன் மாளிகை

(மங்கையர், மந்திரிமார் புடைசூழ வீற்றிருக்கிறான். யாழ் ஒலிக்கிறது. அலறிக்கொண்டு வருகிறாள் சூர்ப்பனகை.)

இராவ : (சினந்து) ஆ! இது யாவர் செயல்!
சூர் : மானிடர் தடித்தனர், வாள் உருவி.
(சபையில் சிரிப்பு, ஏளனம்)
இராவ : பொய்தவிர், புக்க புகல். உம்.
சூர் : மன்மதனை ஒப்பார், விற் கலையர் — மதரன் ஒருவன்தானா?
மாரர் உளரே, இருவர் ஓர் உலகின் வாழ்வார்?
வீரர்உளரே அவரின் வில் அதனில் வல்லார்?
யார் ஒருவர் அன்னவரை ஒப்பவர்கள் ஐயா?
ஒ ரொருவரே இறைவர் மூவரையும் ஒப்பார்.
இராவ : நீ இடை யிழைத்த குற்றம் என்ன?
சூர் : மென்தோள் கொண்டாள், பொன்மேனிகொண்டாள் பொருட்டு ... அவள் பாதம் தீண்ட பாக்கியம் படைத்தது பார்! அவளது தோளையே சொல்லுகேனோ ... விற் போன்ற புருவமும் வேலை ஒத்த விழியும், பவள மான இதழும் ...
வில் ஒக்கும் நுதல் என்றாலும் வேல் ஒக்கும்
விழி என்றாலும்
பல் ஒக்கும் முத்து என்றாலும் பவளத்தை
இதழ் என்றாலும்
சொல் ஒக்கும் பொருள் ஒவ்வாதால்,
சொல்லலாம் உவமையுண்டோ?
நெல் ஒக்கும் புல் என்றாலும் நேர் உரைத்து
ஆக ... அற்றே

(இராவணன் எழுந்து ஏதோ உறுதி கொண்டு நடக்கிறான்)

சூர் : நான் உனக்கு உரைப்பதென்ன? நாளையே காண்டி ... நாளயே காண்டி. (சிரிக்கிறாள்).

காட்சி 15

(மாரீசன் ஆச்ரமம். இராவணன் வருகிறான்)

மாரீ : (வரவேற்று) என் இருக்கைக்கு வந்த கருத்து என்ன?
இராவ : வன்மை தரித்தோர் மானுடர் ... (குழைந்து) செவ்வாய் வஞ்சியை கவ்வத் துணைகொண்டு ...



SCENE FIFTEEN

(Mareecha's ashram)

(Enter Ravana)

Maree.: The purpose of your visit to my abode?

Ravana: Two mortals have turned violent...*(sweetly)* to help me in abducting the lovely lass....

Maree.: Fie upon you! *(shudders)* O King! You would foolishly ruin your life....No, don't.

Ravana: You are unaware of their deeds...
(Angry) You have insulted my heart's feelings.... I pardon you.

Maree.: You said "lass", would that be Sita? Isn't it wrong?.... You will die with your kith and kin.

Ravana *(furious)*: If you refuse, my sword will quench my anger.

Maree.: When a disaster impends, even advice looks like ill-meant words. Well, utter what sin I must perform.

Ravana *(Pleased)*: Let us capture Sita, the dainty deer, using Maya's ways.

SCENE SIXTEEN

(Panchavadi.)

(Sita is alone gathering flowers. The illusory deer comes. As it approaches her, other deer run away in fright. Sita is enchanted by the golden deer. Rama comes by. Sita by gesture asks Rama to catch the deer. Rama laughs. Lakshmana enters.)

Lak.: It is false, not true....Mmm....Golden skin with limbs, ears and tail dazzling like gems. Do you call this a deer?

Sita *(Pleads)*: Please fetch this for me.

Lak.: This is a trick played by demons with malice.

Rama: I will capture that deer. You remain here and protect my beloved.

(Rama follow the deer as it lures him away. From far away, a scream "O Lakshmana! Sita!")



மாரீ : சீ, சீ, (செவி பொத்தி) மன்னா, நின் வாழ்வை முடித்தாய் மதியற்றாய் ... வேண்டாம், வேண்டாம்.

இராவ : (சினந்து) நிகழ்ந்ததை நினைத்திலை, நீ என் நெஞ்சின் நிலையை இகழ்ந்தனை ... பிழை பொறுத்தேன் ...

மாரீ : பெண் உருவமென்றாய். சீதை உருவோ? ... நிருதர்தீவினை யன்றோ? ... உறவினோடும் அழிவாய்.

இராவ : (சினந்து) மறுத்தனை யென்றால் நின்னை வாளால் ஒறுத்து என் மனக்குறை முடிப்பேன்.

மாரீ : நன்மையும் தீமையன்றோ நாசம் வந்துற்ற போது! ... யான் செய்யும் வினை விளம்பு.

இராவ : (நெகிழ்ந்து) மான் அவள் ஆதலால் மாயையால் (பயங்கரச்சிரிப்பு)

காட்சி 16

பஞ்சவடி

(சீதை தனியே மலர் கொய்து நிற்கிறாள். மாயமான் வருகிறது. அதைக்கண்டு மான்கள் அஞ்சி ஓடுகின்றன. மாய மானைக் கண்டு வியக்கிறாள் சீதை. இராமன் வருகிறான். 'அதைப் பிடித்துத் தா' என்று சைகை செய்கிறாள். இராமன் சிரிக்கிறான். லக்ஷ்மணன் வருகிறான்.)

லக்ஷ் : மெய் அல்ல, மாயம். உம் ... உடல் கனகம், கால், செவி, வால் மணிரத்னம். மானா இது?

சீதை : (கெஞ்சி) இந்த மானைத் தருதி.

லக்ஷ் : வல்லரக்கர், வஞ்சம் விரும்பிச் செய்யும் கைத்வம்மான்.

இராம : மானை நான் பற்றி வருவென். மயில் அன்னாளைக் காத்து, இருத்தி.

(இராமன் போகிறான், மான் இழுத்துச்செல்லுகிறது.)
தொலைவில் 'ஆ லக்ஷ்மணா, ஸீதா' என்ற குரல்.

காட்சி 17

பர்ணசாலை

(வாயிலில் கவலையுடன் உட்கார்ந்திருக்கிறாள் சீதை. அடிக்கடி இராமன் சென்ற திசையை நோக்கிப் பெருமூச்சு விடுகிறாள். துறவிக்கோலத்தில் வருகிறான் இராவணன். கண் இமைக்காமல் பார்க்கிறான். வியக்கிறான். மெள்ள அணுகுகிறான்).

சீதை : (கண்ணைத் துடைத்து) எழுந்தருளும். (ஆசனம் தருகிறாள்.)

இராவ : யாவர் மகள், காட்டிடை அரும்பகல் கழிக்கின்றீர்?

SCENE SEVENTEEN

(Panchavadi)

(A worried Sita sits near the hut. Glances time and again in the direction Rama went and sighs. Enter Ravana in the guise of an ascetic. Gazes unwinkingly at her in lust and amazement. Approaches her slowly.)

Sita *(Mops her fears)*: Please come in. (Offers him a seat)

Ravana: Whose daughter are you, spending precious day—time in the jungle?

Sita: Janak's daughter. Name is Janaki. I am the wife of Kakutta (an epithet of Rama). Which way did you come here?

Ravana: Indra's Peer; of untold
Beauty; Hails from Brahma's lineage.
Rules all the worlds including the Heavens.
scriptures dwell on his lips.

All the Celestial maidens desert Paradise, come down to Lanka, the golden city.....

Sita: ....and many diabolical, devilish Rakshashas.

Ravana: O sweet-faced one! Who do you think am I? Is any—thing out of Ravana's capabilities?

(Sings) To root a mount, or smash the sky,
To swirl the ocean and drench the sun,
To swoop the globe....Truth, no lie!
Impossible for Ravana! Tell me one?

Sita: Will sin ever trounce dharma?

Ravana: See my might ruling the Gods. You say mortals are powerful. Being a woman, you survive still, or I would consider munching you....(vexed) and then die. Come on, rule the world, while immortal maidens wait upon you.

Sita *(shrinking away from him)*: If you still love your life, Run! Scramble!!

(Ravana uproots the entire hut with Sita and goes away. Sita frantically throws up her arms in despair.)

Sita: *(wails)*: O birds and bears and boars and bees!
O mountains, meadows, mortal life!
Do fastly rush to my Rama, Please



சீதை : சனகன் மாமகள், பெயர் சானகி, சாகுத்தன் மனைவி யான். நீர் எவ்வழி இங்கு எய்தினீர்?

இராவ : இந்திரற்கு இந்திரன் எழுதலாகாச்
சுந்தரன் நான்முகன் மரபில் தோன்றினான்
அந்தரத்தோடும் எவ்வுலகும் ஆள்கின்றான்
மந்திரத்து அருமறை வைகும் நாவினன்.
மேனகை, திலோத்தமை யெல்லாம் வானகம் துறந்து வந்து, பொன்நகர் என்னும் இலங்கை நன்னகர் சேர்ந்து ...

சீதை : பாதகர், அரக்கர் வருக்கத்தோடு முடிவர்.

இராவ : திங்கள் முகத்தினாய்! யாரெனக் கருதிச்
சொன்னாய்? இராவணனால் ஆகாதது உண்டோ?
மேருவைப் பறிக்க வேண்டின், விண்ணினை
இடிக்கவேண்டின்
நீரினைக் கலக்கவேண்டின், நெருப்பினை
அவிக்கவேண்டின்
பாரினை எடுக்கவேண்டின், பலவினை ...
சிலசொல், ஏழாய்
யாரெனக் கருதிச் சொன்னாய், இராவணற்கு
அரிது என்?

சீதை : தருமம் தன்னை வெல்லுமோ பாவம்?

இராவ் : விண்ணவர் ஏவல் செய்யும் வீரம் பாராய். மானிடர் வலியரென்றாய். பெண்ணெனப் பிழைத்தாய். அன்றேல் உன்னை யான் பிசைந்து தின்ன எண்ணுவேன் ... (சலித்து) பின்னே என் உயிர் இழப்பேன்.

அமரர் மாதர் அடியினை ஏவல் செய்ய, உலகம் ஆளும் செல்வத்துள் உறைதி நீ.

சீதை : (காதைப் பொத்தி) உன் உயிர்க்கு உறுதி நோக்கின் ஓடி ஒளித்தி.

(இராவணன் சீதையைத் தரையோடு பெயர்த்து தேரில் வைத்துப் போகிறான். சீதை கையை உயர்த்திப் புலம்புகிறாள்.)

மலையே, மரனே மயிலே, குயிலே
கலையே பிணையே களிறே பிடியே
நிலையா உயிரே நிலைநேடினர் போய்
உலையா வலியார் உழைநீர் உரையீர்.
(மலையே, மரனே ... மலையே ...)

காட்சி 18

(ராமனும் லக்ஷ்மணனும் தேடித்தேடி அலைகின்றனர். சோர்வுற்று நிற்கும் சமயம் கீழே கிடக்கும் சடாயுவைக் காண்கின்றனர். அருகில் சென்று)

And tell the sorry fate of his wife.
O birds and bears and boars....

SCENE EIGHTEEN

(In the forest)

(Rama and Lakshmana, tired after a long and weary search, espy Jatayu lying down, bleeding. They go near him.)

Rama *(Shocked)*: O horrors! You too...(disgusted). Do I still need to live? Down with this mortal life of strifes and struggles.

Jatayu *(Rises slowly)*: Pleasures and pains are plays of fate. Can you ever ever hope to outwit fate? I confronted his mighty sword with my little strength. He slew me, and here I lie.

Rama *(seething with fury)*: For Ravana's flight with my lonely wife, and your fully unjust plight here. See the whole Universe, Gods and all, get destroyed!

Com.: *(Sings)*
Fury of his noble heart
Shook the entire globe apart;
The Universe will never stand
The blow of virtue's angry wand.

(The sun hides behind a mountain; elephants run in panic. The whole forest shudders at his anger.)

Jatayu: You went after an illusory deer and earned this calamity....Well, hurry and wipe the chaste maid's grief. (Dies)

SCENE NINETEEN

(Kishkinda)

(Hanuman leads Rama and Lakshmana to Sugreeva)

Rama: I have heard your plight through the sagely Sabari. I have come to wipe your sorrows.

Sug.: *(Salutes)*: I take refuge in you. Please save me.

Rama: Let the past be gone. From now, your joys and worries are mine too. What else? An insult to you is an insult to me. Your kith and kin, good or bad, are mine also. Mine are yours. You are my bosom friend.

Hanu.: Vali is his name; Unruly.



இராம : எந்தாய், ஓ! எதற்காக நீயும் இறந்தனையோ? நீண்டேன் மரம்போல ... வேண்டேன் இம் மாயப் புன்பிறவி.

சடா : (மெள்ள எழுந்து) இன்ப துன்பம் விதிவயம். மதிவலியால் விதி வெல்ல வல்லமோ? ... இராவணன் எடுத்தனன், ஏகுவானை எதிர்த்து என தாற்றல் கொண்டு தடுத்தனன். அரன் தந்த வாளால் படுத்தனன், இங்கு வீழ்ந்தேன்.

இராம : (சினந்து) பெண் தனி ஒருத்தி தன்னை வாளரக்கன் பற்றிக்கொண்டு ஏக, நீ இக்கோள் உற, இவ் வுலகங்கள் ஏழும் வானவர்களோடு களையுமாறு காண்டி வெஞ்சுடர்க் கடவுள் மீண்டு மேருவின்
மறையுலுற்ருன்
எஞ்சலில் திசையில் நின்ற யானையும் இரியல்
போய்
துஞ்சின உலகமெல்லாம் என்பதன் துணிந்த
நெஞ்சின்
அஞ்சினன் இளைய கோவும் அயலுளோர்க்கவதி
உண்டோ

சடா : கொம்பிழை மானின் பின் போய்க் குலப்பழி
கூட்டிக்
கொண்டீர் ... அருந்ததியனைய கற்பின் காதலாள் துயரம் நீக்கு. (இறக்கிருன்)

காட்சி 19

கிட்கிந்தை

(சுக்ரீவன் நிற்கிருன். இராமலக்ஷ்மணர்களை அனுமன் அழைத்து வருகிருன்.)

இராம : தவத்தின் வந்த சவரி நீ இருந்த தன்மை இயம்பினள். நின்ஞல் துயரம் கடப்பது கருதி வந்தோம்.

சுக் : (தாள் வணங்கி) சரண் உனைப் புகுந்தேன். என்னைத் தாங்குதல் தருமம்.

இராம : உனக்குரிய இன்ப துன்பங்கள், முன்ஞல் சென்ற போக, எனக்கும் நிற்கும் நேர். மற்றினி உரைப்பதென்ன? நின்னைச் செற்றவர் என்னைச் செற்ருர். தீயரே எனினும் உன்ஞேடுற்றவர் எனக்கும் உற்ருர். என் காதல் சுற்றம் உன் சுற்றம். நீ என் உயிர்த் துணைவன்.

அனு : வாலி என்றுளான், வரம்பிலாதான்.

இராம : (சுக். பார்த்து) மனைக்குரிய பூவையைப் பிரிந்துளாய் நீயும்?

அனு : ருமையென்றி வர்க்குரிய தாரமாம் அருமருந்தையும் அவன் விரும்பினுன்.

Rama *(To Sug.)* You too have lost your wife?

Hanu.: He desired Rama - Sugreeva's wife - too.

Rama: I will give your wife to you today. Lead me to him.

SCENE TWENTY

(Forest)

(Vali and Sugreeva are wrestling with each other. Rama aims an arrow, and Vali falls.)

Com. *(Sings)*
He saw the word – The complete Hymn –
The whelming Grace, the perfect cure
To birth and death and finite whim –
"Rama" – The Peerless panacea pure.

Vali: What have you done? The son of the martyr of truth. Why were you born before Bharata? How right would it be to pursue things you save others from? Which law-code permits you to avenge a demonic deed on an innocent monkey? Pray, tell me what flaw you found in me? Isn't Justice ever the heirloom of your lineage? Perhaps, the sad separation of the Sweet Swan, Sita, has clouded your mind! O Great Warrior! You have slain, not Vali, but Truth and Justice themselves.

Rama: You have abducted your dear brother's wife. He is my bosom friend.

Vali: You are truly Justice Manifest!

SCENE TWENTY ONE

(Forest)

(Rama bids farewell to Hanuman, who is ready to depart for Lanka.)

Rama: That I saw her in the regal palace as I entered Mithila with the sage....and that she asked "which tortures most, the forest or your seperation?"... Tell her all that.

(Gives him a ring and blesses him.)

(Scene switches to Lanka. Hanuman gapes in wonder at Lanka's splendour.)

Hanu.: Gold or gems or lightning bright? What is this city made of?

இராம : நின் தாரம் உனக்கின்று தருவேன். அவனுறை விடம் காட்டு.

காட்சி 20

காடு

(வாலியும் சுக்ரீவன் மற்போர் செய்கின்றனர். வாலி மீது அம்பு விழ, அவன் விழுகிருன்).

மும்மைசால் உலகுக்கெல்லாம் மூலமந்திரத்தை,
முற்றும்
தம்மையே தமர்க்கு நல்கும் தனிப்பெரும்
பதத்தை, தானே
இம்மையே எழுமை நோய்க்கு மருந்தினை,
'இராம' என்னும்
செம்மை சேர் நாமம் தன்னை கண்களில்
தெரியக் கண்டான்.

வாலி : என் செய்தாய்? வாய்மையும் மரபும் காத்து மன்னுயிர் துறந்த தூயவன் மைந்தனே! நீ பரதன் முன் தோன்றினுயே? தீமைதான் பிறரைக் காத்து, தான் செய்தால் தீங்கு அன்ருமோ?

அரக்கர் ஓர் அழிவுசெய்து கழிவரேல், அதற்கு வேருேர் குரக்கினத்து அரசைக் கொல்வது மனு நெறி கூறிற்ருே? என்பால் எப்பிழை கண்டாய், அப்பா?

கோஇயல் தருமம் உங்கள் குலத்துதித்தோர்கட்கெல்லாம் உடைமையன்ருே? ஆவியை, சனகன் பெற்ற அன்னத்தை, அமிழ்தின் வந்த தேவியைப் பிரிந்த பின்னர் திகைத்தனை போலும் செய்கை.

வாலியைப் படுத்தாய் அல்லை, மன் அற
வேலியைப் படுத்தாய், வீரனே!

இராம : அருமை உம்பிதன் ஆருயிர்த் தேவியை எய்தினை. அவன் எனக்கு ஆருயிர்க் காதலான்.

வாலி : ஆ ... (இறக்கிருன்)

காட்சி 21

(இராமன் அனுமானுக்கு விடைகொடுத்தனுப்புகிருன், இலங்கை செல்ல.)

ராம : முன்னை நான் முனியொடு மிதிலைவாய் வேள்வி காண, அக்கன்னி மாடத்து இடை கண்டதும் ... மாநகர் துறந்து ஏகு நாள் மதில் கடந்திடுதல் முன் 'அரியவெம் கானம் யாதோ?' எனச் சொல்லினுள், அதெல்லாம் நீ சொல்லுவாய்.

(மோதிரம் தந்து ஆசி தருகிருன்)

(Sings): In dazzling marble mansions white,
In lust and lovely gardens bright,
I see each soul in joyous delight,
But not a grieving one in sight!

(Goes in search of Sita)

SCENE TWENTY TWO

(Ashoka Vana)

(Sita - a pitiable picture of melancholy - sits under a tree, sighing constantly and scanning the horizon incessantly.)

Com.: The pangs of parting portrayed true, She scanned the entire horizon blue.

(Sings): She brought before her weeping eyes
The Peerless Face that brushed aside
His fortune's sudden fall and rise,
Like a golden flower blooming wide.

Hanu.: Which saved Sita! Virtues' favour? or Janaka's good deeds? or Sita's chartity? Fine! Oh Fine!!

(Ravana enters, Heaps gift before her. Sita filled with remorse, shrinks away from the gifts.)

Hanu.: Long live Sita! Long live Rama!
Long live moral virtue great!!

Ravana: O lovely one! Would bygone days of youth come twice? This day shall go and so shall the next. Would you join me only after my death? Despite having beauty, strength and grace and charm, why does Janaka's race not boast of mercy, my dear?

Sita: Would you shed all your ten heads by uttering unworthy words? Why did you go astray from righteousness? To lose your famous frame and die with your kith and kin? Even a snake would listen to good counsel. You, but, revel in your folly! Are there none to reprimand you? Your doomsday has certainly come!

(Sings): A serpent too would counsel heed
You, but, revel in lust and greed!
Are there none to boldly lead
You, away from this sinful deed?

Ravana: Enough! I will tear you apart and eat you!

(Goes forward....Hesitates....slowly advances....hesitates....turns back and goes away slowly. The demon guards gather around Sita.)



காட்சி 21

இலங்கை

(நகரின் எழிலைக் கண்டு வியக்கிறான் அனுமான்.)

பொன்கொண்டு இழைத்த? மணியைக்கொடு
பொதித்த?
மின்கொண்டு அமைத்த? என்கொண்டு
இயற்றிய?
பளிக்கு மாளிகைத் தலந்தோறும்,
இடந்தொறும், பசுந்தேன்
துளிக்கும் கற்பகத்தண்நறும் சோலைகள்
தோறும்
அளிக்கும் தேறல் உண்டு ஆடுநர் பாடுநர் ஆகிக்
களிக்கின்றார் அல்லால் கவல்கின்றார் ஒருவரைக்
காணேன்.
(தேடுகிறான்)

காட்சி 22

அசோக வனம்

(சீதை மரத்தடியே உட்கார்ந்து, ஏங்கி, பெருமூச்சு விடு கிறாள். அடிக்கடி அடிவானத்தைப் பார்க்கிறாள்.)

பிரிவெனும் துயர் உருவு கொண்டு, மாதிரம்
அனைத்தையும் அளக்கின்ற கண்ணாள்.
மெய்த்தி ருப்பதம் மேவு என்ற போதினும்
இத்தி ருத்துறந்து ஏகு என்ற போதினும்
சித்தி ரத்து அலர்ந்த செந்தாமரை
ஒத்தி ருந்த முகத்தினை உன்னுவாள்.


அனு : (மேலேயிருந்து) தருமமே காத்ததோ, சனகன் நல்வினைக் கருகமே காத்ததோ? கற்பின் காவலோ? அருமையே, அருமையே!

(இராவணன் வருகிறான். பரிசுகள் வைத்து வேண்டுகிறான். சீதை கூசி, உடல் குறுகி, வெறுக்கிறாள்.)

அனு : (தனக்குள்) வாழி சானகி, வாழி இராகவன்
வாழி நன் மறை, வாழி நல்லறம்.

இராவ : திலகமே! நாட்களும் இளமையும் மீண்டு வருமோ? இன்றும் இறந்து சென்று, நாளை கழிந்து, பின் நான் இறந்தபின் என்னை கூடுவயோ? பெண்மையும் அழகும் திண்மையும் பொருந்தியிருந்தும், ஈகையெனும் வண்மை சனகர் குலத்தில் இல்லாததேனோ?

சீதை : தகாது சொல்லித் தலை பத்தும் சிந்துவையோ! ஒப்பிலாத் திருவும் நீங்கி, உறவோடு இறக்கக் கருதியோ தப்பினாய் அறம்? பாம்பும் கேட்கும் மந்திரம். நீயோ களிக்கிறாய். உன்னை இடித்துச் சொல்ல ஒருவரும் இல்லையா? முடிவு காலம் வந்துவிட்டது.



Demon 1: What other crime has that man-a Peer to thousand vedas-committed, save developing a true passion for you?

Demon 2: By thrusting red-hot spears into tender wounds, you are paving the way for the utter demolition of your men. Will you never realise the truth!

Demon 3: You fool! You will never survive now; who but you will kindle fiery anger? (Threatens). tcus).

(The demons fall into a deep sleep)

Sita: Oh Narayana! My sovereign Lord!! Did you not say, "I shall come back in a few days. Don't come to the forest"? Is this all your concern for me?....I sent you after the evil deer; chided him-guarding me-out too and have now entered the abode of this Venomous King. The world shall no longer tolerate me.

(Ready to part with her life, she goes near a tree.)

Hanu.: *(Jumps down, praying)*: I have arrived on Rama's orders. Having come, O lady, I have seen thy noble feet. Discard all your worries! I have with me both his directions and message. O Radiant One, have no second thoughts about me.

Sita: God or devil or monkey mere? Who are you?

Hanu.: After being separated from you, he sought the help of the noble king called Sugreeva. I preach him good counsel. Taking the jewels you hurled that day as a cue, he has sent me southwards.

Sita *(Crying)*: How would you describe my Lord?

Hanu.: *(Sings)*:
If his face be a lotus blue;
What could be his eyes? No clue!
Are they moons is his tranquil face?
The moon, but, has an ebbing phase!

Listen to the Lord's words. The way you readily started off to the forest in spite of his persistent pleas; The way you requested Sumandra - in the forest - to protect your parrot....Shall I repeat?

(Hands her the ring.)

Sita *(Over whelmed by emotions)*: You have given me back my life! You are the hope of Grace on earth!

கடிக்கும் வல்லரவம் கேட்கும் மந்திரம்
களிக்கின்றோயை
அடுக்கும் ஈது அடாதது ஈதென்று ஏதுவோடு
அறிவு காட்டி
இடிக்குனர் இல்லையே. உள்ளார் எண்ணியது
எண்ணி உன்னை
முடிக்குனர் என்றபோது முடிவன்றி
முடிவதுண்டோ?

இராவ : ஆ! உன்னைப் பிளந்து தின்றுவிடுவேன்!

(போகிறான், தயங்கி, போய், தயங்கி, போகிறான்.)
(அரக்கியர் சீதையைச் சூழ்ந்துகொள்கின்றனர்.)

ஒருத்தி : வேதம் ஆயிரம் வல்லோன் உன்பால் மெய்யன்பு வைத்துளன் என்பதன்றி, செய்த குற்றம் என்ன?

அரக்கி2 : புண்ணில் கோல் வைத்தது போன்ற சொற்களைச் சொல்லி மானுடர் அழியும் வழி செய்தாய். உண்மையைக் காணாய் நீ.

அரக்கி3 : அறிவற்றவளே! இனி வாழமாட்டாய். வெந்தீயை விதைப்பதுண்டோ? (மிரட்டுகிறாள்.)

(அரக்கியர் உறங்கப் போகின்றனர்.)


சீதை : நாராயணனே, தனி நாயகனே! 'கான் செல்வது தவிர், சிலநாளில் வருவென், இரு' என்றனையே; இதுவோ உன் அருள்?
வஞ்சனை மானின் பின் போகச் சொல்லி, துணை நின்ற அவனையும் வைது, பின் நஞ்சுநிகர் இவன் அகம் புகுந்த நங்கை நான். இனி இருந்தால் உலகம் ஏற்குமோ?
(உயிர்விடத் துணிந்து, மரத்தடியில் போகிறாள்.)

அனு : (கீழேகுதித்து, தொழுது) அடைந்தனன் அடியேன் இராமன் ஆணையால். மடந்தை, நின் சேவடி வந்து நோக்கினேன்.
ஐயம் தவிர். ஆரியன் சொன்ன உரையும் அடையாளமும் உளது. நெய் விளக்கை ஒத்த தேவி! வேறு நினையல் வேண்டா.

சீதை : அரக்கனோ, அமரனோ, குரக்கினத்து ஒருவனோ? நீ யாவன்?

அனு : தூயவன் நின்னைப் பிரிந்த பின்பு தேடிய துணைவன், கவிக்குல நாயகன்—சுக்ரீவன் என்றுளன். அம்மன்னவன் தனக்கு யான் மந்திரம் உரைப்பேன். அரக்கன் கொண்டு போன நாள் எம்மிடை குன்றில் எறிந்த அணிகலன் குறியாய்க் கொண்டு, தென் திசை ஏவினன் என்னை.

சீதை : (அழுது) என் ஐயன் மேனி நீ எப்படி அறிவாய்?



Hanu.: Pray, hear my words! This very day I shall place you before Rama and bow to him....O great lady! Would it befit me if I went back with empty hands, reporting your homeless state in a den of heart—less men?

Sita: No! unless my Lord, with the help of warriors, renders every wife in Lanka without her husband; unless I hear their heart crying out in grief, the shame that has come to me will not go away! In their grief shall mine disappear. In the heaps of bone, of the evil men shall my flag of nobility; chastity and flawless virtue flutter. Yet, only for a mouth more will I wait. My life will then not be mine. I swear by my lord!

Though I am no match for that valiant person; though he hasn't an iota of sympathy in his heart, ask him to retrieve me at least to save his own name as a great warrior.

(Sings): Remind him of the boon he gave
The day I became his lucky wife,
That, "Even my thought will never crave
For another woman in my life."

Even if my life ebbs or fizzles out in futile wait, I must be born again to avenge the taint that has stained my purity. Tell him this too:

(Sings): Even if I wait and die
I'll avenge on that person sly;
By descending down on Earth again,
And flawless purity regain.

Never again can I adorn the throne or participate in public rites. This is my fate!

Hanu.: Lady, I must only see that warrior. Are you to pine and die here, while he goes to the regal palace and wears the royal Crown! If he does not come and retrieve you before the appointed day, then THIS PERSON (Ravana) will become Rama, while THAT PERSON (Rama) will become Ravana with all possible dishonour and disgrace to his credit.

Sita: *(Consoled):* I will just say one more thing...when a crow tortured me, he sent a blade of grass after him, and on surrender, graciously pardoned him by blinding an eye. Tell him that too. (Takes a choodamani from

அனு : அண்ணல் தன் திருமுகம் கமலம் ஆம் எனில்
கண்ணினுக்கு வமை வேறு யாது காட்டுகேன்?
தண்மதி யாமென உரைக்கத்தக்கதோ
வெண்மதி பொலிந்து அது மெலிந்து தேயுமால்.
நாயகன் சொன்ன குறி கேட்பாய். அன்று
கான்வழி நடத்தல அரிது' எனச் சொன்னபோது
உடுத்த துகிலாடு அயல்நின்றதும்,
காட்டிலே சுமந்திரனுக்கு, 'கிள்ளை
யொடு பூவையும் போற்றுக' என்று
நீருரைத்த வாசகமும் ...
மீண்டும் உரை வேண்டுமோ?
(மோதிரம் தருகிருன்.)

சீதை : (தழதழக்க) உயிர் தந்தாய், உத்தமனே! அருளின் வாழ்வே.

அனு : அடியேன் உரை கேள். இன்றே இராமன் எதிர் நின்னைக் காட்டி. அடி பணிவேன் ... அருந்ததியே! அழகர்க்கு அருகில் சென்று, 'உன் தேவி வஞ்சர் சிறை வைப்பில் பெருந்துயரினேடு ஒரு வீடு பெற இயலாதிருக்கிருள்' என்று சொன்னல், நானும் ஒரு தூதனு?

சீதை : வில்வீரர் வில்தொழில் கொண்டு அரக்கியர் அனைவரும் நாண் இழந்து ஓலமிடச் செய்யவில்லை யெனில், நான் பெற்ற நாண் அகலுமோ? அரக்கர் எலும்புகள் மலையெனக் குவிந்தாலன்றி என் உயர் பிறப்பும் ஒழுக்கமும் கற்பும் பிறர்க்கு எங்ஙனம் காட்டுவேன்?

ஆயினும், ஒரு திங்கள்தான் இருப்பேன் யான். பின் ஆவி தரிக்கிலேன். அந்த மன்னன் ஆணை. நான் அத்திருமார்பனுக்கேற்றதோர் தாரம் தான், இல்லையெனினும், தயா எனும் ஈரம்தான் அவர் மனத்தில் இல்லையெனினும், தன் வீரம் காத்தல் வேண்டுமெனக் கூறுவாய்.

வந்தெனைக் கரம் பற்றிய வைகல் வாய்
இந்த இப்பிறவிக்கிரு மாதரைச்
சிந்தையாலும் தொடேனென்ற செவ்வரம்
தந்த வார்த்தை திருச்செவி சாற்றுவாய்.

நான் இங்கேயே இருந்து உயிர் மாய்ந்தபோதி லும், மீண்டு பிறந்து வந்து என் மேனியைத் தீண்டிய தீவினையை தீர்த்துக்கொள்ளவேண்டும். இதையும் கூறுவாய்.

ஈண்டு நான் இருந்து இன்னுயிர் மாயினும்
மீண்டு வந்து பிறந்து தன் மேனியைத்
தீண்டலாவதோர் தீவினை தீர்வரம்
வேண்டினுள் தொழுது என்று விளம்புவாய்.

நான் இனி அரசு வீற்றிருந்து ஆளவும் விரசு கோலங்கள் காணவும் விதியிலேன். என் ஊழ் வினை அது.

her cloths and gives it to him). O my friend, who has come this far to give me hope and life afresh, take this to him.

(Hanuman accepts it, bows to her and goes.)

SCENE TWENTY THREE

(Ravana's Court.)

(Hanuman is brought in)

Ravana: Who are you? What have you come here for?

Hanu.: I am the lotus-eyed archer's messenger. I am the slave of that noble warrior well-versed in Vedas and law-code. Hanuman is my name. Those who went in all directions in search of Sita, I came with Vali's son, Angadha, I am his messenger.

Ravana *(laughs)*: The errand - boy of Vali's son! How is Vali's kingdom?

Hanu.: O King, rest assured. The Vali will never again rise. He has gone to the heavens through a single dart from Rama's bow....Rama, my lord, has implored you to give back Sita. Losing your sense through lowly lust, and straying from moral....

Ravana *(enraged)* : Kill him!

(Soldiers surrounded him.)

Vibhi.: Halt! O Scholarly one! Even women have been killed by some; but who ever has killed a messenger?

Ravana: Well said, brother!....Fire his tail and let him go.

(Courties hail)

(Hanuman sets Lanka ablaze, crosses the sea, and goes away.)

SCENE TWENTY FOUR

(Rama and Sugreeva are standing. A rejoicing group of monkeys comes leaping in. Hanuman follows, and bows to both of them.)

Hanu.: I Saw her! I Saw her with my eyes! The living proof of chastity! O Lord, dispel all doubts. You queen has done full justice to both you and Janaka and stands. there as an exemplary woman. She is my goddess, Sir! Yes! I did not see Sita there. I saw a blissfull dance! Greatness; Patience and chastity, in perfect unision, dance there in full bloom with limitless delight.

அனு : அம்மா, நான் வீரனைக் காண்டலே குறை ... நீ இங்கு இறப்பதோ, ஐயன் நன்னகர் சென்று மவுலி சுமப்பதோ? குறித்த நாளிலே சிறை மீட் காது போனால், பழியும் பாவமும் சேர, இராவ ணன் **அவன்**, இராமன் **இவன்** என்றாகும்.

